குணா

ஆனந்த போதினி

ஏப்ரல், 1922

13


72
ஊ211, N26AG
N27.2.13
169824

Regd. No. M. 2151



# ஆநந்தகுணபோதினி.

OF THE REGISTRAR OF BOOKS
20 MAY 1927
MADRAS



...ஜகோபால் முதலியார்
...கசாலைத் தெரு, மதராஸ்
(...பிரைட் ரிஜிஸ்டர்டு).

72
௯௨11,௮௨௨௨
N27.2.13
169824

## விஷ


1. ஆநந்த தரிசனம் ... 1
2. நமது புதிய பிரபவ வருஷம் 8
3. நமது தேச விடுதலை ... 10
4. ஆநந்த குண போதினியின் 2-ம் பருவம் ... 14
5. வருஷப் பிறப்பின் வைபவம் 16
6. நாநாவிஷயக் குறிப்புகள் ... 17
7. கூட்டுத் தொழிலும்-தொழிற் பிரிவினையும் ... 19
8. பாண்டுரோகம் ... 21
9. குமாஸ்தாக்களுக்கான 20 நீதிகள் ... 23
10. இலகு வைத்திய முறைகள் 24
11. சென்ற மாதம் ... 25
12. தேக தத்துவ குக்ஷ்மங்கள் 29
13. மதிப்புரை
14. பிரபஞ்ச தரிசனம்
15. குழந்தைகள் பக்கம்-புது வருடப் பிரதிக்கினைகள் ...
16. பழமொழிக் குறிப்புகள்- அன்பு ... 4
17. பத்திரிகாசாரம் ... 4
18. பெரியாரின் மொழிகள் ... 45
19. ஆங்கிலத் தமிழ்க் கடிதங்கள் 48
20. மாணவர் நீதிகள் ... 49
21. நமது கதாப்பிரஸங்கி ... 50
22. மாதர் மனோரஞ்சிதம் ... 53
23. விகடப்பிரதாபன்-அம்மா சோறு! அப்பா கஞ்சி ... 57
24. இதென்ன விளம்பரம்? ... 63


## ஆநந்த குண போதினியின் வருஷ சந்தா விபரம்

*இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு வருஷ சந்தா ரூபாய் 1. வெளி நாடுகளுக்கு ரூபாய் 1–4–0. தனிப் பத்திரிகை அணு 2.*

ஒருவருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை. *எந்த மாதத்தில் சேர்ந்தாலும், பயிண்டு செய்வதற்குச் சௌகரியமாய் முதற் பத்திரிகையி லிருந்தே கணக்கிடப்பட்டு அப்பத்திரிகைகளையும் கூடச் சேர்த்து அனுப்பப்படும்.*

கடிதம் எழுதுகையில் இவ்வருஷம் கொடுத்திருக்கிற தங்களின் புதிய நெம்பரைத் தெரிவிக்காவிடில் பதில் தரப்படமாட்டா. பதிலுக்கு ஸ்டாம்பு அல்லது ரிப்ளைகார்டு அனுப்புக. பத்திரிகை கிடைக்கப் பெறுநோர் பிரதி தமிழ் மாதமும் 15-ம் தேதிக்குள் எழுதாவிடில் அனுப்பப்படமாட்டா. அன்னோர் விலை கொடுத்துப் பெற வேண்டும்.

## நமது நிருப நேயர்கட்கு

☞ பத்திரிகையில் பிரசுரிப்பதற்கென்று வியாசங்கள் வரைவோரும், மதிப்புரைக்காக நூல்கள் அனுப்புவோரும் அடியில் கண்ட விலாஸத்தின்படி பத்திராசிரியருக்கே நேராக அனுப்ப வேண்டும். பிரசுரமாகாத வியாசங்களைத் திரும்பிப் பெற ஸ்டாம்புஅனுப்ப வேண்டும்.

*விலாசம் :— பத்திராசிரியர், " ஆநந்த குண போதினி " ஸ்ரீரங்கம்.*

☞ *" ஆநந்த குண போதினி " க்குச் சந்தாதாரராதல், சந்தா அனுப்புதல், பத்திரிகையின் சார்பான விவரங்கள் விரும்புதல், விளம்பரம் செய்தல் முதலிய நிர்வாக விஷயங்கட்கு* தி. இராஜகோபால முதலியார், "ஆநந்த குண போதினி" ஆபீஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை, என்று எழுதுக.

## ஆநந்த குண போதினி முதல் வால்யம்

முதல் வால்யத்தின் 12 ஸஞ்சிகைகளையும் ஒன்று சேர்த்து நேர்த்தியான முழு காலிகோ பைண்டு செய்துள்ளது. விலை ரூ. **1—6.** 630 பக்கங்களுக்கு மேல் கொண்ட அருமையான அநுபவஞான நூலாகும். விரைவில் எழுதிப் பெறுக.


ஓம் பரப்பிரம்மணே நம:

# ஆநந்தகுணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான அநுபவ விநோத நீதிகள் நிறைந்த உயரிய மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர் :— திரிசிரபுரம்-எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.


" எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."—திருக்குறள்.


REGISTRAR OF BOOKS
MAY 1927
MADRAS



| | | |
|---|---|---|
| கமலம்-2. | சென்னை: பிரபவ ௵ சித்திரை ௴ 1௳ | இதழ்-13. |
| Vol. II. | 1927-ம் ௵ எப்பிரல் ௴ 13௳ | No. -13. |


## *ஆநந்த தரிசனம்*

*" ஆனைமுகனை அரனார் திருமகனே " என்று அருணாசலக்கவி கணநாதரை ஸ்தோத்திரம் செய்திருக்கிறார். எவ்விதமான சுப காரியத்தைச் செய்தாலும் விநாயகரைப் பூசை செய்வது வழக்கம். விநாயகருக்கு விக்நராஜன் என்று பெயர். விக்கினத்தை யுண்டாக்குவதற்கும் விலக்குவதற்கும் அவரே தக்கவர். முற்காலத்தில் ஷண்முகன் விநாயகரைப் போற்றிய பிறகுதான் சூரனை ஸம்ஹரித்தார். ஔவை கணநாதரைப் பூஜித்த பிறகு தான் எல்லோரிலும் முதன்மையாகக் கைலாஸம் சேர்ந்தாள். தன்னை யாராதிப்பவரின் கருமம் இடையூறின்றி முடியுமாறு காப்பது கணபதியின் கடமை. ஆகையால் பரப்பிரம்ம ஸ்வரூபமாகிய விநாயகமூர்த்தியினடியை இடைவிடாது தியானம் செய்யக்கடவோம்.*

***

*" கனவிற் கண்ட பொருள் கைக்குதவாது " என்னும் பழமொழிப்படி நமக்குச் சொந்தமல்லாத பொருளை நம்முடையதென்று நினைப்பது பிராந்தியேயாம். உதாரணமாக மனுஷ்யன் தன்னுடைய சரீரத்தைத் தனக்குரியதாக எண்ணுகிறான். உண்மையை ஆராய்ந்திடத்து அவனுக்கு அது சொந்தமல்ல. மாதா பிதாக்களா லளிக்கப்பட்டது. மனைவி மக்கள் முதலானோரால் அநுபவிக்கப்பட்டது. கடைசி காலத்தில் மண்ணுக்கோ*

# ஆனந்த தரிசனம்

அல்லது நீக்கோ இரையாகின்றது. இடையே பற்பல வியாதிகள் அச் சரீரத்தைத் தங்களுக்கு வாஸ ஸ்தானமாகக் கொள்ளுகின்றன.

***

"புலையனும் விரும்பாத இப் புன்புலால் யாக்கை" என்றார் பெரியோர். "நான் பைத்தியக்காரன், மிருகத்திலும் தாழ்ந்தவன்" என்றார் ஒரு தத்துவ சாஸ்திரி. அதன் பொருள் யாதென்று அவரை ஓர் அரசன் கேட்க, அதற்கு அவர், "எனக்கு அன்னமிடப் பிரியமில்லாதவர்களெல்லாம் என் முதுகைத் தங்களுக்குரியதாக எண்ணி வேண்டிய மட்டும் கைகொண்ட வரையில் அடிக்கலாம். வயிறு மட்டும் என்னுடையதாகையால் அதைக் காக்கு நிமித்தம் பல இடங்களுக்கு ஓடினேன்; மாடு, குதிரை முதலிய மிருகங்களின் முதுகு அவற்றை வைத்தாதரிக்கும் எஜமானர்கட்குச் சொந்தம். என் முதுகோ என்னை யாதரிக்காத மனுஷ்யர்கட்குச் சொந்தமாயிருக்கிறது. இதனாலே தான் நான் மிருகத்திலும் தாழ்ந்தவன் என்று சொல்லிக்கொண்டேன்" என்றார். இந்த சாஸ்திரி சொல்வது போல ஒவ்வொரு மனுஷ்யனும் சாண் வயிற்றை வளர்ப்பதற்காகத் தன்னுடைய சரீரத்தைப் பிறனுக்கு உழைக்கச் செய்கிறான். ஒவ்வொரு நிமிஷத்திலும் பிறருடைய காரியத்துக்காக உபயோகப்படும் இச் சரீரத்தை நம்முடைய தென்று சொல்லிக் கொள்வது பிரமையேயாம்.

***

"அகமே புறம்" என்றார் தேச பக்தராகிய ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை. மனதிலுள்ளதை முகம் சொல்லும். முகமானது மனதின் இராஜ்யமாகவிருக்கிறது. முகத்தில் மனம் தன் ஆதிக்கத்தை நன்றாய்க் காட்டுகிறது. முகத்திலுள்ள புருவம், கண், மூக்கு, உதடு முதலியவை மனதின் இராஜதானிக ளென்னலாம். கோபம், ஸந்தோஷம், துக்கம் முதலிய குணங்களை மனம் கொள்ளும்போது மேற்கண்ட புருவம், கண், மூக்கு, உதடு முதலியவற்றால் பிறருக்குத் தெரிவிக்கிறது. ஸத்குணமுள்ளவோர் ஸதா ஸந்தோஷ சித்தர்களா யிருப்பர். மனதில் வெறுப்புடையோர் முகத்தைக் கடுத்துக்கொள்வர். பயத்தைக் கொண்டவர்களுக்கு உதடு வெளுத்துப் போம். சீலமுள்ளவர்களின் வதனம் தேஜஸ்ஸுடன் விளங்கும். இது ஸ்வபாவமானதால் இத் தோற்றங்களை யுண்டாக வொட்டாமல் தடுப்பதற்கு யாராலு மாகாது. இம்மாதிரியே பக்தனுடைய காரியங்களால் அவன் ஈசுவரனிடம் வைத்துள்ள பிரேமை பிரகாசமாகும். மனதின் தன்மை ஒரு நிமிஷமேனும் சும்மா விராமல் சலித்துக்கொண்டிருப்பதாகையால், அதை ஸத்கருமங்களிற் பிரவர்த்திக்கச் செய்யாவிட்டால், அது துஷ்[illegible] விடும். மனதிற்கு என்ன வேலையைக் [illegible] "[illegible]க்கிறது — ராம நாம மிட்டாயிருக்கிறது" என்றொரு பக்தர் பாடினார். [illegible] மிட்டாயை ஸதா தின்றவாறிருக்கும்படி மனதிற்குக் கற்பிக்க வேண்டும்.

169824



"பொல்லாங்கென்பவை எல்லாந் தவிர்" என்பதுபோல, நன்மை தீமை ஆகிய இரண்டனுள் தீமையைத் தெரியாதிருப்பதே நன்று. உதாரணமாக நாஸ்திகனோடு ஆஸ்திகன் தர்க்கியாமலிருப்பது சிலாக்கியம். தர்க்கம் செய்வதால் ஆஸ்திக புத்தியுடையவனுக்குங்கூட கடவுள் உண்டா இல்லையா என்ற ஸந்தேகம் உண்டாய்விடும். நாஸ்திகன் தன் கக்ஷியைப் பலப்படுத்த வேண்டி சில யுக்தி வாதங்களைச் செய்வான். அவ்யுக்திகள் நியாயமென்று தோன்றும். அவற்றைக் கண்டிக்கப் போதுமான சக்தியில்லையேல் ஆஸ்திக பக்திக்கே ஹானி நேரிடும். ஆதலின் எப்போதும் தீமையை விளைவிக்கத் தக்க வாதங்களிற் செல்லவே கூடாது. இதைப்பற்றி புல்லர் என்பவர் அடியில் வருமாறு கூறுகிறார்:—"Hold not conference, debate, or reasoning with any Lust; 'tis but a preparatory for thy admission of it. The way is, at the very first, flatly to deny it." காமிகளோடு சம்பாஷிப்பதே பிசகு. அவர்களுடன் வாதிக்கத் துணிவதில் நாமும் காமிகளாவோம். ஆரம்பத்திலேயே ஸம்பாஷணையைத் தவிர்க்க வேண்டும். ஒரு வீட்டில் தீயை வைத்துப் பின்னர் நீரைக் கொட்டி அவிப்பதைவிடத் தீயை வைக்காமலிருப்பது நன்மை. இதைப்போல் துஷ்டர்களை யுபசரித்து நேரே யுட்காரவைத்து தர்க்கம் செய்வதிலும் அவர்களை யணுகவிடாமல் எச்சரிக்கையோடிருப்பது ஸர்வோத்தமம்.

***

"பக்தர் சரித்திரம் பரம பவித்திரம்." நம்மை சுத்தமாக்கி முக்தி மார்க்கத்தை யனுஸரிக்கச் செய்வது பக்தரின் சரித்திரமேயன்றி வேறல்ல. எத்தனையோ வித பக்தர்கள் இவ்வுலகத்திற் பிறந்து பகவானை ஆராதித்து நற்கதி பெற்றார்கள். அவர்களின் சரித்திரங்களைப் படித்து ஸந்தோஷிப்பதற்கு நமக்குப் பாக்கியம் இருக்கவேண்டும். பிருந்தாவனத்தில் ஒரு ஸந்யாஸி ஸ்திரீகளையே பார்ப்பதில்லையென்ற வீர விரதத்தோடு ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியை உபாஸனை செய்து கொண்டிருந்தார். அவரைத் தரிசிப்பதற்காக உத்தம பக்தையாகிய மீராபாய் சென்றபோது துறவி தமக்குள்ள ஆக்ஷேபத்தைத் தெரிவிக்கவே, மீராபாய் ஸ்ரீ கிருஷ்ணனைத் தவிர வேறொரு புருஷர் உண்டென்பதை ஸந்யாஸி உண்மையாய்க் கூறுகிறாரா, அவ்வாறாயின் அவர் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு உகந்த பக்தராகார் என்று சொல்லி யனுப்பினாள். அதாவது, ஸந்யாசியை ஸ்ரீ கிருஷ்ண ஸ்வரூபமாகவே கருதித் தரிசிக்க வருவதாய் இதன் பொருள். அதன் கருத்தை யறிந்த ஸந்யாசி தாம் செய்தது பிசகென்று மீராபாயிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டு மகா பக்தையாகிய அவளைக் கண்டது, தாம் செய்த பூர்வ புண்ணிய விசேஷமென்று கொண்டாடினார். எங்கும் பரமாத்மாவைக் காண்பவருக்கு எதிர்ப்படும் ரூபமெல்லாம் பகவத் ஸ்வரூபமாகவே புலப்படும்.

***

"நாராயணன் கதையைப் பாராயணம்" பண்ணுவோர் உத்தமமான நற்கதியை யடைவார்கள். கிரியாண காலத்தில் ஸகல பாபங்களையும் போக்கி புண்ணிய லோகத்தை யளிப்பது நாராயண ஸ்மரணையேயன்றி வேறல்ல. பகவானுடைய பல திருநாமங்களும் ஒவ்வொரு ஸமயத்தில் உச்சரிக்கத்தக்கது. உதாரணமாக, போஜனம் பண்ணும்போது கோவிந்த நாமமானது ஸர்வோத்கிருஷ்டமா யிருக்கிறது. ஹரி ஸ்மரணையானது பிராதக் காலத்தில் எழுந்தவுடனே செய்யத்தக்கது. கிருஷ்ண ஸ்மரணையானது பாவத்

தைப் போக்குவதற்காக அதாவது பிராயச்சித்தார்த்தம் செய்யத்தகுந்தது. நாராயண ஸ்மரணை முன் கூறியபடி நிரியாண ஸமயத்தில் செவியில் படத்தக்கது. இப்படி பகவானுடைய பல திருநாமங்களும் பரம பிரயோஜனந் தருவதால் நாம் ஸதா நாராயண ஸ்மரணையைச் செய்யக்கடவோம்.

***

"அபிமானமே பெரிது." எரிமலைகள் நிறைந்துள்ள தீவுகளிலும் மனிதர்கள் வசிக்கின்றனர். எரிமலைகள் நெருப்பைக் கக்கினால் இறந்து போவோம் என்ற நினைவு அவர்களின் மனதில் ஆணிபோற் பதிந்திருக்கிறது. ஆயினும் அம்மலைப் பிரதேசத்தைவிட்டு ஜனங்கள் அகலுகிறதில்லை. இதற்குக் காரணம் ஸ்வதேசாபிமானமேயாம். வெகு அஸங்கியமாய்ப் பிறந்த குழந்தைகளையும் தாய் தந்தையர் முத்தமிடாமலிரார். இதற்குக் காரணம் தங்கள் குழந்தைகள் என்ற அபிமானமேயாம். பிற மதஸ்தர்கள் ஆயிரம் நிந்தனை செய்யினும் உத்தம புமான்கள் தங்களின் ஸ்வ மதத்தை எப்போதும் போற்றியே துதிப்பர். தன் பதியைப் பிறர் எவ்வளவு கேவலம் செய்யினும் பதிவிரதா ரமணிக்கு அவனே வழிபடு கடவுளென்று தோற்றும். இதன் காரணம் அபிமானமேயாம். மற்றும் சிலர் தங்கள் மனையில் வாழும் பாம்பைக்கூடக் கொல்வதில்லை. இதற்குக் காரணம் வாழும் பாம்பைக் கொல்லலாகாதென்றும், அது தலைமுறை தலைமுறையாய் நம்முடைய வீட்டில் வஸித்தாலும் யாரையும் கடித்ததில்லை யென்கிறார்கள். இவ்வித உதாரணங்களை யோசிக்கும்போது தனது என்ற அபிமானமே பெரிதென்று நிச்சயிக்கிறோம். அழகில்லாத குழந்தையையே தாய் முத்தமிடுவது இயற்கையானால், அழகுள்ள குழந்தையை முத்தமிடுவது ஓராச்சரியமாமோ? இதைப்போல் ஒவ்வொருவருக்கும் தம்முடைய தேசம், தம்முடைய மதம், தம்முடைய இனம், தாம் தொடர்ந்து ஆதரிக்கும் பத்திரிகை ஆகிய இவற்றில் அபிமானம் மிகுதியாகி அதற்கு அதுவே நிகர் என்று புகழ்ந்து பெருமைப்படுத்துவது வழக்கம். இதை மறவாமல் நமது கையொப்ப நேயர்கள் தாங்கள் ஆதரிக்கும் "ஆநந்த குண போதினி" யாகிய இப்பத்திரிகைக்கு இப்புது வருஷத்தில் இயன்ற மட்டில் புதிய சந்தாதார்களைச் சேர்த்து விருத்திபடுத்தும்படி கோருகிறோம்..

***

"நான் யார்?" என்ற கேள்விதான் முதற் கேள்வி. நான் சரீரமெனில் அச் சரீரத்துக்கு நித்திரைக் காலத்தில் உணர்ச்சி கிடையாது. ஸ்வப்பனம் கண்டதை மறுநாள் சொல்லுகிறோம்? அதை எப்படிச் சொல்லுகிறோம்? ஸ்வப்பனம் காணும்போது நான் எங்கே போனேன்? என்னுடைய கைகால்களெல்லாம் அசைவற்றிருக்கின்றன. ஏதோ ஒரு சூக்ஷ்மப் பொருள் மாத்திரம் தனியாக விருந்து நாம் கண்ட ஸ்வப்னத்தை மறுநாட் காலமே தெரிவிக்கிறது. அந்தப் பொருளின் தன்மையைப்பற்றி நாம் விசாரித்தறிவதே வேதாந்த சாஸ்திரமாகும். பிரக்ஞையானது தவறிப் போம்போது நம்முடைய தேகம் கட்டைபோலிருந்தும் பிரயோஜனப்படுகிறதில்லை. ஆதலின் தேகத்தை நான் என்று எப்படிச் சொல்லிக்கொள்ளலாம்?



"தைரியம் எது?" மரணத்திற்குப் பயப்படாம லிருப்பதே தைரியம். அத்தகைய தைரியம் யாருக்கு வரும்? ஆத்ம ஞானிகளுக்கே. எவன் தன் உடலைத் தான் என்று பிரமித்து வியஸனமும் ஸந்தோஷமும் மாறி மாறி அனுபவிக்கிறானோ அவன் பயனற்றவனே. அவனுடைய தைரியம் என்ன பிரயோஜனம்? அவனை விடப் புலிகளும் ஓநாய்களும் தைரியமுள்ளன வென்பேன்.

***

"மன்னரிற் றருமன் மஹா பெரியவன்." அரசனான தரும புத்திரன் பெரியவர் யாவரென்று தேடி யலைந்த காலத்து, ஒரு மஹான் சிறந்த சடா மகுடாதிகளோடு ஒரு குளக்கரையிலிருந்து இரு விழிகளையும் சுழி முனையில் நிறுத்திக் கடவுளை யாராதித்தாராம். இவர் செய்யும் ஆராதனைக்கு இந்திரியங்களே புஷ்பங்களாம்; ஆநந்தமே அபிஷேக ஜலமாம்; பிராணனே தூபமாம்; புத்தியே தீபமாம்; தானே நிவேதனமாம். இத்தகைய சாமக்கிரியைகளுடன் ஈசனை யாராதிப்பவர் கடவுளுக்கு மனதினால் அபிஷேகம் செய்து மனோ சிருஷ்டியால் மணிமகுடம் தயாரித்து அதைக் கடவுளுக்குச் சூட்டி, அப்பால் மாண்புறு மலர்மாலை யொன்றைக் கழுத்தில் விட முயன்று, மனோ சிருஷ்டியாலான அந்த மலர் மாலையைக் கரங்களில் ஏந்தி அதை மகுடத்தின்மேல் தாண்டி இடத் தமது கைகளைத் தூக்கிப் பார்த்தாராம். தமது கைகள் மனோசிருஷ்டியாலான மகுடத்தின் உயரத்துக்கு ஏற்ற நீளம் இன்மையால் அந்தக் கைகளுக்குத் தலையிலுள்ள மகுடத்தைத் தாண்டிப் பூமாலையைப் போடக்கூடவில்லை. அதனால் மஹான் இனி என் செய்வதென்று துன்புற்றாராம். அப்பொழுது அங்கு அருகிலுள்ள வயலில் ஏர் அடித்துக் கொண்டிருந்த ஒரு பஞ்சமன் மஹானை நோக்கி, ஸ்வாமி, உங்களின் மனோசிருஷ்டியாலாய மகுடத்தைக் கழற்றி வைத்து விட்டு அப்பால் மாலையை யணிவித்து, பின்னர் கழற்றிய மகுடத்தை மீண்டும் சூட்டி மனம்போல் பூசிக்கலாமே என்றனனாம். இவன் இவ்வாறு கூறும்போது தருமரும் அவ்விடம் சென்றிருந்தாராம். பெரியவரான முனிவர் இதை யுணர்ந்து இவன் பஞ்சமனல்லன், பகவானே இவ்வுருவுடன் தோன்றினனென்று அவன் பாதத்தில் விழுந்தாராம். இது கண்ட தருமரும் முனிவரைப்போல் தானும் அப்பஞ்சமனை வணங்கினாராம். அவனும் இவர்களை வணங்கினானாம். நியாயம் கண்ட இடத்தில் வணங்கிய தருமர் உலகிற் சிறந்து விளங்குகின்றார். நன்மையை எவர் எடுத்துக் காட்டினாலும் கைக்கொள்ள வேண்டியதே.

***

"ஸ்ரீ விவேகாநந்தரின் வாக்கு":—இந்தத் தேசத்திலே அந்தப் பழய சிவனே இருக்கிறார். முன்னிருந்த காளிமாதாவே இன்னும் துஷ்டர்களின் ரத்தபானம் பண்ணிக்கொண்டிருக்கிறாள். ஆயர்பாடி யளித்த செல்வமாகிய வேணுகோபாலனே இன்னும் வேணுகானம் செய்துகொண்டிருக்கிறான். அவர்கள் ஹிமாலயத்தைப்போல் ஸ்திரமாயும் சாசுவதமாயும் இருக்கிறார்கள்.

***

"நான் பிரேம மூர்த்தி." பிரீதி என்ற குணம் அளவிற்கு மேற்பட்டுவிட்டதானால் அது எப்படியிருக்கும்? — ஸ்ரீ கிருஷ்ணனாக இருக்

கும். ஸ்ரீ கிருஷ்ணனை ஸாமான்யமானவரா யெண்ணுமல் பிரேமையின் ஸ்வரூபமாகப் பாவித்துக் கொள்ளுங்கள். பிரீதிதான் வெளிச்சம்; பிரேமையே தீபம்; பிரேமையே பிராணன். பிரேமை யொழிந்தால் பிராணன் ஒழிந்தது போலாம். பிரீதி யற்றால் இருள் சூழ்ந்தது போலாம். எவனுக்குப் பிரேமையுண்டோ அவனே பாக்கியவான். எவனுக்குப் பிரேமை யில்லையோ அவனே துரதிர்ஷ்டன். பிரேமையோடு கூடிய வாழ்க்கை நீடித்திருக்கும். அது இல்லாத வாழ்க்கை சவத்துக்கொப்பானதே. விருக்ஷம் விதையிலிருப்பதுபோல் பிரேமையிலே பகவான் விளங்குகிறார். பிரேமையை உன் ஹிருதயத்தில் நாட்டு; நித்தியானந்தனுவாய். நீ பிரேம மூர்த்தி என்று எப்பொழுது உணருகிறாயோ அப்பொழுது உன் ஹிருதய கமலத்திலுள்ள பகவானை அறிந்தவனாகிறாய்.

***

"பகவான் கூறுகிறார்":—எவன் அயலானை நேசிக்கவில்லையோ அவன் என்னிடம் பக்தியில்லாதவன். அவன் எனக்குப் பூஜை செய்யாதவன். விருக்ஷம் தன் கிளைகளை வெட்டுகிறவனைக் கோபியாமல் அவனுக்குத் தன்னிடமுள்ள பழங்களைத் தருவதுபோல, நீ உன்னிடம் விரோதம் பாராட்டும் மனிதனுக்கு உபகாரமே செய்துகொண்டிரு. யார் எவ்வித நிந்தை செய்தாலும் புல்லைப்போலும் மரத்தைப்போலும் ஸஹித்துக் கொண்டு சும்மாயிரு. அதனால் உனக்கு க்ஷேமமுண்டாகும்.

***

"எள்ளுக்குள் எண்ணெய் போல" பகவான் ஸகல வஸ்துக்களிலும் அந்தர்யாமியா யிருக்கிறார். எண்ணெயை யடைய விரும்புவோன் எள்ளிலிருக்கும் ஸத்தை மட்டும் கிரகித்து, அஸத்தாகிய பிண்ணாக்கை யெறிவதுபோல், பிரம்மத்தை யறிய விரும்புவோன் உலகிலுள்ள ஒவ்வொரு பொருளின் ரூபத்தையும் நாமத்தையும் பிரித்து நோக்கவேண்டும். இவ்வப்பியாஸம் எளிதல்ல. இது மகா யோகிகளுக்கே கைகூடும்.

***

"ஸாதுக்களின் நட்பு ஸந்தோஷத்துக் கிருப்பு." மந்தமாருதத்தைக் கண்டால் மனிதர்கள் சந்தோஷப் படுகின்றனர். இளந் தென்றல் தேகத்தில் படும்படி வெளியே போகின்றனர். அதுபோல் ஸாதுக்களைக் கண்டால் நாமும் ஸாத்வீகமாகி மிகுந்த ஸந்தோஷங் கொண்டு அவர்களுடன் ஸம்பாஷிக்க விரும்புகிறோம். கர்ணகடோமான சப்தத்தோடு அடிக்கும் பெருங் காற்றைக் கண்டாலோ பீதி கொள்ளுகிறோம். அதை ஸ்பரிசிக்கலாகாதென்று வெளியே போகாமல் வீட்டுக்குள்ளேயே இருந்து விடுகிறோம். புயல் காற்றால் விளையும் பெரு நஷ்டத்தை யாரே அறியார்? இதைப்போல் துராத்மாக்களால் ஸம்பவிக்கும் கேடுகள் அநந்தம். நமது நிர்மல ஹிருதயமும் அசுத்தமடைகின்றது. அவர்களுடைய வரவால் உத்தமரது மனம் படும் பாட்டைச் சொல்லி முடியாது.

***

"நல்லோர் வரவால் நகை முகம் கொண்டு இன்புறுவர்" என்று கவிஞரொருவர் பாடி யிருக்கிறார். குயிலின் குரல் இனிமையைத் தருகிறது. வீணை முதலிய வாத்யங்களின் சப்தம் மனோரம்மியத்தை விளைக்கிறது. கிளியின் பேச்சைக் கேட்க இச்சை யுண்டாகிறது. அது 'ரங்கா' என்னும்போது எத்தனை ஆநந்த மடைகிறோம். அதுபோல் ஸாதுக்கள் இனிமையான குரலோடு நல் விஷயங்களைக் கூறுகையில் நமது ஹிருதயம் பகவானுடன் பிணைக்கப்பட்டுப் போகின்றது. நம்மை யறியாமலே ஆநந்த முறுகின்றோம். நகை முகத்தோடும் ஸாந்தகுண சீலர்களாய் பொறுமைக் கிருப்பிடமாய் விளங்கும் பரம ஸாத்வீக சிரோமணிகளை எப்போதும் தரிசித்துக்கொண்டே யிருக்கவேண்டு மென்னும் அவா அப்போது பெருகி விடுகிறது. இதற்கு எதிரிடையாக துஷ்டர்களாகிய கள்வர்களையும், மோசம் செய்வோரையும், வன்சொல் வழங்கும் கோபிஷ்டர்களையும் கண்டாலோ தக்ஷணமே மனம் நடுங்குகின்றது. ஆதலின் இன்பத்தை நாடும் நாம் ஸாதுக்களுடைய ஸகவாஸத்தையே அதிகமாகக் கொள்வோமாயின் பகவானைச் சீக்கிரம் ஸமீபிக்கலாம்.

---

குடும்ப ஸம்ரக்ஷணையானது புருஷன் ஸம்பாதிக்கும் பொருளைச் சிக்கனமாய்ச் செலவு செய்வது மாத்திரமல்ல; குழந்தைகளை அவர்களுடைய பிற்காலத்து வாழ்க்கையை நோக்கி வளர்ப்பதுமாகும். பிள்ளைகளுடைய சரீரத் திடனையும், மனவலியையும், நற்குண அமைப்பையும் மனதில் வைத்துத் தாய்மார்கள் வளர்க்கவேண்டும். இப்பெருங் கடமையை ஏற்கவேண்டிய தாய்மார்கள் ஆடவர்களைப்போல உத்தியோக பதவிகளை ஏற்று வெளியில் திரிந்தால் வீட்டுக் கடமைகளைச் செய்வது யார்? நமக்கு ஐரோப்பிய நாகரீகம் வேண்டாம்.

## ஐசுவரிய ஸம்பன்னர்களுக்கு

நீங்கள் எளியவர்களின் விடுதிகட்குச் செல்வது உங்கள் அன்பினாலாகும்; அவர்களைக் கௌரவிப்பதற்காகவும் போகின்றீர்கள். உங்களின் வருகை எளியவர்கட்கு மகா பாக்கியமாகும். அவர்களும் நமது வீடு தேடி வந்தார்களா வென்று அந்த எளியவர்கள் எவ்வளவோ சந்தோஷிக்கின்றார்கள். உங்களின் பொருட்டு விசேஷச் செலவும் செய்யத் தொடங்குகிறார்கள். இங்கு தான் நீங்கள் கருணையுருவம் கொள்ளவேண்டும். உங்களின் பொருட்டு அவர்கள் அதிகச் செலவு எதுவுமே செய்யக் கூடாதென்றும், காபிக்குப் பதிலாக சுத்த ஜலமே மேல் என்றும், அவர்கள் தினந்தோறும் புசிக்கும் உணவையே இப்போதும் இட்டு உபசரிக்க வேண்டுமென்றும் கண்டிதமாகத் தெரிவித்துவிட்டு அவ்விதமே செய்யுமாறு அருகிலிருந்தும் **கவனியுங்கள்.** அது உங்களின் பெருந்தன்மையை விசேஷமாக எடுத்துக் காட்டும். ஏழைகளையும் கடன்படா திருக்கவைக்கிற பெரும் புண்ணியமும் உங்களுக்குச் சித்திக்கும்.

# ஆநந்த குணபோதினி

பிரபவ௵ சித்திரை௴ 1௳


## நமது புதிய பிரபவ வருஷம்

அநேக ஆண்டுகளாய் ஆவலுடனும் எதிர் நோக்கிய இந்தப் புதிய பிரபவ வருடத்தினை நாம் இன்று தரிசிக்கத் திருவருள் புரிந்த பரமனை ஆநந்தத்தோடும் மனதாரத் துதிக்கக் கடவோம். இவ்வருடம் அறுபது ஆண்டுகளுக்கும் முதலாவதானதால் இதை விசேஷமாய்க் கருதிக் காத்திருந்தவர்கள் பலர். இப் புது வருடம் நமக்கு நன்றாகுக. சென்றுவிட்ட அக்ஷய வருஷத்தினையும் மற்றுமோர் முறை நாம் காண்பதாகுமாறு நமது ஆயுள்விருத்தி கொண்டு வளர்க. சுந்தர மிக்க அன்பு எங்குமே பெருகுக. வாழ்க்கை இன்பம் சுவை மலிந்து நிறைக. அறத்தின் தவம் ஓங்குக. நமது பெண் தெய்வங்களின் ஆசி நமக்கு எஞ்ஞான்றும் உண்டாகுக. அன்னார் தம் கற்பும் காதலும் இல்லறமும் நன்கு சிறந்திடுக. நமது மனை நிலை மேன்மேலும் உயர்க. போலி யன்பினர்களும் உண்மை யன்பினர்களாகுக. வஞ்சகர்களின் மனம் திருந்துக. கோட் சொல்லிகளின் தொல்லை யொழிக. குழந்தைகள்தம் மதலை மொழிகளின் இனிய ஓசை எல்லா இல்லங்களையும் வாழ்வித்தருள்க. சிந்தித்த சிந்தனைகளனைத்தும் வெற்றிமேல் வெற்றி கொண்டு நிலவிடுக. வீரமும் தீரமும் தியாகமும் நம்மவரின் உள்ளங்களிலே வீற்றிருந்து குலாவிடுக. கதர் எங்கணும் பரவுக. மகாத்மாவின் தமிழ்நாட்டு விஜயம் ஆநந்தமாய் நிறைவேறுக. நமது ஸ்வதந்திர தாகம் சித்திபெற்று உத்தம பாரத சந்தானங்களாய் ஜ்வலித்திடுவோமாக.

***

இப் புது வருட ஆரம்பத்தில் நாம் பின்வருமாறு பகவானை ஸ்தோத்தரிக்கக் கடவோம்:—“இல்லின்பங்களோடும் ஆசாபாசங்களோடும் எம்மை இக் குடும்பத்தில் ஒன்றாகச் சேர விருத்திய கடவுளே! நின்னை அணுகித் துதி செலுத்த உதவுவாய். எமது உயிர்த் துணை நீயே. உம்மை எமது பரம பிதா வென்று அழைத்து, புத்திரவாச்சல்லியத்தோடும் உம்முன் விழுந்து வணங்க அருளியதே யாம் பெற்ற பேறுகளி லெல்லாம் பெரிதென்று கருதுகிறோம். நினதனந்த கருணையை யாங்கள் என்றும் மறவாதிருப்போமாக. இப் பிரபஞ்சாதிபதியும், பரம ஸாம்ராஜ்யத்திற்குக் கர்த்தனும் ஆகிய தேவரீர் எமது ஹிருதயமாகிய இந்தச் சிறு ஆலயத்திலும் வந்து நின்று யாங்கள் செய்யும் பிரார்த்தனைகள் அனைத்தை



யும் கைக்கொள்ளுகின்றீர் என்பதை யுன்னி யாங்கள் என்றும் சந்தோஷிப்போமாக. எம்மில் ஒவ்வொருவரது ஆசாபாசங்களும் நினது திருவடியுற்று எமது பரஸ்பர சம்பந்தமானது இளமையும் வன்மையு முடையதாகும்படி அருள்வாய். எங்களுக்குள் பரஸ்பர நேயத்தை விருத்திசெய்து தேசவாஞ்சையைப் பெருக்கி ஸ்வப்பிரயோஜனம், பொறாமை, துஷ்டசிந்தை இவைகளை யுண்டாக்கத் தக்க துர்க்குணங்களை யெல்லாம் அகற்றுவாய். எமது இல்லற இன்பங்களனைத்திலும் உம்மை நன்றி யறிவோடு நினைப்போமாக. எமது இல்லறத் துன்பங்களிலும் சோதனையின் சூழ் வினைகளிலும் எமது நலம் எல்லாம் நீயே யெனக் கருதி நின்னையே நம்புவோமாக. எம்மைப் பெற்ற அன்னைபோல் அன்போடு ஊட்டி வளர்க்கும் நட்புள்ள கடவுளே! நினது குழந்தைகளின் ஆன்மாக்களை என்றும் ரக்ஷிப்பாய். யாங்கள் பிசகிய காலத்தில் எம்மைத் திருத்துவாய். யாங்கள் வழி தப்பிப் போவோமானால் மீண்டும் எம்மைச் சீர்படுத்துவாய். எமது மனம் அசுத்த மனுகாமலும் எமது கரங்கள் தகாதவற்றுக்குத் துணியாமலும் இருக்கக் கடாக்ஷிப்பாய். சாந்தமும் அடக்கமும் அருளி, பல விசித்திரமாகிய மாய வாழ்க்கையை நிர்வகித்து நடத்தப் போதிய திறனை யுதவுவாய். யாங்கள் உமது அடக்கமுள்ள பிள்ளைகளாயும், நேர்மையுள்ள சேவகராயும் வாழ்வோமாக. இக் குடும்பத்துக்குக் கர்த்தா நீரே. இந்த வீடு பெரு நட்பும், சுத்தமும், சுகமும், அமைதியும், பரஸ்பர நேயமும் ஒன்றாகக் கலந்து வாழும் இடமாகும்படி ஆசீர்வதிப்பாய். இக் குடும்பம் வாழிய. ஓ! கர்த்தனே! இதை உமது குடும்பமாக ஆக்கிக்கொள்வீர். பூமி மீது எல்லா குடும்பங்களுக்கும் தந்தையே! எங்கும் உமது பிரபாவம் நிறைந்து உமது பிள்ளைகளனைவரும் உமது கிருபையை யடைந்து உமக்குள் ஐக்கியமடைய அருள்வீர். இப் புது வருஷ முதற்கொண்டு யாங்கள் இனி என்றும் நின்னவராகும்படி எமது மனத்தையும் ஆன்மாவையும் உமது சரண மலர்களில் ஸமர்ப்பிக்கின்றனம்.

ஓம் தத் ஸத்.

### பல பல வகை ஏன்?

பகவானுக்குத் தினத்திற்கு ஒருவிதமாய்ப் பலபல விதமாக அலங்காரங்கள் செய்யப்படுவதேன்? பலவித உத்ஸவங்கள் நடப்பதேன்? பல வகையிலும் சிதறிக் கிடக்கும் மனிதர்களின் மனம் எதிலேனும் ஒன்றுபட்டு பகவானைச் சமீபிக்கக் கூடிய பக்குவத்திற்குத் திரும்பி விடாதா என்ற கருத்துடனே தான்.

# நமது தேச விடுதலை

ஒரு தேசத்தின் விடுதலைக்கு வழி எப்படி? அது நீடரொன்று உண்டாகி விடுமா? அது எண்ணற்ற லக்ஷக்கணக்கான மனிதர்கள் மனதொருமித்து முயன்று சாதிக்கவேண்டிய மகத்தான பெருங் காரியமன்றோ? முதலில் ஒவ்வொரு மனுஷ்யனும் ஸ்வயேச்சையான வாழ்க்கையை மதித்து ஸ்வதந்திர தாகம் மிக்குடையோனாதல் வேண்டும். ஸதா முயற்சியும் சுறுசுறுப்பும் அவனது உள்ளத்திலே பொங்கித் ததும்பவேண்டும். எது தனது நாட்டிற்குக் கதி பயக்க வல்லதென்ற ஆராய்ச்சியிலே அவனது சிந்தை ஊன்றப்பதிய வேண்டும். எந்த சூக்ஷ்மத்திலிருந்து விடுதலைக்குமார்க்கம் உதிக்குமென்பதை அவன் உற்றுணரக் கடவன்.

யாவற்றிற்கும் முதன்மையாக வேண்டப்படுவது முயற்சி. அந்த "முயற்சி திருவினையாக்கும்" என்பது மூத்தோர் சொல். அவ்வுயர் தனிச் செம்மொழி உதித்த காலத்து எத்துணை உண்மையா யிருந்ததோ, அத்துணை உறுதியுள்ளதாகவே இப்பொழுதும் இலங்குகின்றது. செய்து முடிக்க மாளாது என்று தோற்றுகிற காரியங்களையும் முயற்சியானது சாத்தியப்படுத்தி வெற்றி கொண்டிருக்கின்றது. ஒரு ஜாதியாராகட்டும், ஒரு தேசத்தாராகட்டும், அவர்கள் எவ்வளவு திறமாயும், செம்மையாயும் கிரமாபிவிர்த்திக்கு இடமாயும் முயற்சியைக் கைவிடாமல் பாதுகாத்துப் போற்றி வருகின்றனரோ அவ்வளவிற் கேற்றபடி அவர்களுடைய ஐசுவரியமும், வாழ்வும், அதிகாரமும் இருக்கும். கீர்த்தியையும் அதற்குத் தகுந்தவாறே அடையப் பெறுவர். ஆனதுபற்றி, அவரவர்களின் முயற்சியின் அளவும், குறைகுணமும் அவரவர்களின் ஏற்றத்தையும் தாழ்ச்சியையும் குறிப்பிப்பனவா யிருக்கும்.

நாட்டின் செல்வத்தைப் பெருக வைப்பதெது? தேச மக்களை ஸ்வயேச்சையுடன் ஸ்வதந்திர பூரணர்களாய் வாழச் செய்வது எது? முடிவில் ஸ்வராஜ்யத்தையும் தேடிக் கொடுக்க வல்லது எது?—அது நாட்டின் ஜீவாதாரமான தொழில்களேயாம். ஒரு தேசத்தினது தொழில்களை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். (1) வேலை செய்வதற்கான பொருள்களை விளைவு செய்வது ஒன்று; (2) அப்பொருள்களைக் கொண்டே கையினாலாவது, யந்திர முதலிய சாதனங் களினாலாவது வேலை செய்து உபயோகத்துக்குத் தகுதியாக்குவது மற்றொன்று. நம் நாட்டில் விளை பொருள்களின் காரியமே பெரியதாயிருக்கிறது. அதற்கு ஸமத்துவமாகக் கைத்தொழில்களின் காரியங்களும் உயரப் பெற்றால் தான் தேசத்தின் வறுமை நிலை தீரும். நம்முடைய காலின் கீழும், நம்மைச் சுற்றியும் எடுத்து மாளாத ஐசுவரியம் புதைந் திருக்கின்றது. பெருந் தொகையான முதல்கள் வைத்து சலியா முயற்சி செய்து கைத்தொழில்களைப் பெருக்குவோமாகில் அந்த ஐசுவரியக்குவியல் அத்தனையும் நம்மவர் கைக்கே எட்டக்கூடும். பிரபஞ்சம் தொழில்கள் மயம்.

கல்வி கற்கும் நம்நாட்டு இளைஞர்களிற் பல்லோர் உத்தியோக நோக்குடனேயே அவ்வாறு வருந்திக் கற்



பார்போலுங் காணப்படுகின்றனர். இத்தனை பேருக்கும் உத்தியோகம் வேண்டுமெனில் அது சாத்தியமாகுமா? தம் கருத்து நிறைவேறப் பெறாது கண் கலங்கும் மாணவர்கள் இப்பொழுது எத்தனையோ பேர்! பின்னும் 'சிபாரிசு' என்பதே பெரிதாகி, அந்த சிபாரிசு உடைய சாமானியமான படிப்புள்ளவன் உடனே உத்தியோகம் அடையப் பெறுவதும், எத்துணையோ உயர்தரக் கல்வி கொண்டவன் அந்த ஒரு பெரும் சிபாரிசு கிடைக்கப்பெறாமை காரணமாக உத்தியோக சித்தி என்பது தடுமாற்றத்திலாகிக் கனவாக முடிவதும் கண்கூடாகக் கண்டு வருகிறோம். துவக்கத்திலேயே உத்தியோக சிந்தனையின்றிப் பல்வேறு துறைகளிலும் பயின்றவர்கள் மட்டுமே பிற்காலத்தில் உத்தியோகம் கிடைக்கப் பெறாவிடினும், வியாபாரத்திலும் கைத்தொழில்களிலும் ஊன்றிக்கொண்டு சுகப்படக் கூடுமானதாகிறது. இது இந்நாளின் அநுபவங்களாகும். ஒருவனுடைய சொந்தப் பிரயோஜனத்திற்காக ஏர் உழுகிறதும், தண்ணீர் பாய்ச்சுகிறதும்—காகிதத்திலே எழுதுகோல் கொண்டு கிறுக்குவதை விடக் குறைந்த காரியங்களல்ல. எந்தத் தொழிலில் ஸ்வயேச்சை மிகுதியோ அதுவே உயர்நலஞ் சார்ந்தது. எது சேவகா விருத்தியாகி அடிமை நிலையைப் பின்பற்றச்செய்கின்றதோ அதுவே நீசமானது. இத் தெளிவான சிந்தை நமது இளைஞர்களின் நெஞ்சிலே ஊன்றப் பெற வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் நல்ல வெளிச்சமுள்ள பாதையை நாடிச் செல்லுவதற்குத் தெரிந்து கொள்ளக்கூடும்.

ரோம் (Rome) தேசத்தைக் காப்பாற்றி அதன் ராஜாங்கத்தை நிலைப்படுத்தின பிறகு கண்ணியமும் வீரமும் பெருமையு முள்ள ஒரு பெரியவர் சாகுபடி செய்து ஸந்தோஷமடையப் போனாராம்; அப்படிப்பட்ட இன்னொருவர் கீரையைப் பயிராக்குவதில் ஆநந்தம் பொருந்தியிருந்தாராம். கல்வி கற்ற நம்முடைய சிறுவர்கள் இனிமேல் ஏர் உழக் கற்கவேண்டுமென்று நாம் சொல்லவரவில்லை. வித்தியா பாண்டித்திய முள்ளவர்களாய் பற்பல விஷயங்களையும் நுட்பமாய் அறிய வல்லவர்கள் தங்களுடைய அபார ஞானத்தை விவசாயத்திலும் கைத்தொழில்களிலும் பயன் படுத்தினால், ஒருவரின் கீழ் இருந்து கேவல ஜீவனம் செய்யாமல் ஸ்வயேச்சையாயும் சுகமாயும் வாழ்தல் கூடுமென்றோ வென்பதையே நாம் இங்கு குறிப்பிடுவது. உத்தியோக மென்பது அதிற் புகுந்த ஒருவனுக்கு மட்டுமே ஊதியம் தரவல்லது. கைத்தொழில்களோ அவ்விதமன்று; அது தொடங்கியவனுக்கு மட்டுமன்றி அவனை யடுத்த பலருக்கும் ஜீவன மார்க்கத்தைக் காண்பித்துக் கொடுக்குந் திறமை வாய்ந்தது. எனவே, உத்தியோகத்தினும் கைத்தொழில்களே உயர்தரமுடையதாவதன்றி, அதுதான் ஒரு நாட்டை உய்விக்கவும் கூடியது.

இனி, கைத்தொழில்கள் என்றால் என்ன? மனிதன் கையினால் செய்யப்படும் வேலைகள் என்று பொருள்படும். மனிதர்கள் செய்யும் வேலைகள் எல்லாவற்றுக்கும் கை வேண்டுவதுதான். ஆயினும் தண்ணீர் இறைப்பதும், சமைப்பதும் முதலிய சாதாரண வேலைகள் கைத்தொழில்கள் ஆகா. தந்திரமும் திறமையுமுள்ளவர்கள் செய்யத்தக்க வேலைகளே கைத்தொழில்களாம். தக்கபடி நிலத்தை உழுது கொழுமையாக்கி விதை நட்டுத் தகுந்த காலத்தில் களை பிடுங்கிப் பயிரிடுகிறார்களே; இப்படிப்பட்ட விவசாயத்

தொழில் கைத்தொழிலா வெனில்—அல்ல. ஏனெனில், பிரயாசைப் படுகிறது மெய்யே; ஆகிலும் விதை முளைப்பதும், கதிர் விட்டுப் பழுத்துச் சிவப்பதும் தெய்வச் செயலேயன்றி மனுஷ்ய யத்தனமன்று. ஆதலின் நெல் முதலியவைகளை விளை பொருள்கள் எனவேண்டும். எண்ணெய் ஆடுவது, கருப்பஞ்சாறு இறக்குவது முதலிய வேலைகள் சிறப்பற்றவை யாதலால் அவைகளுக்குக் கைத்தொழில்க ளென்னும் பேர் தகாது.

கையால் எழுதுகிற சித்திர வேலையைக் கைத்தொழில்களென்னலாமோவெனில் அதுவுங் கூடாது. கைத்தொழில்களிலும் சித்திரவேலை மேன்மையானது; அதைக் கைத்தொழில் என்றால், அதன் சிறப்புக்குக் குறைவு சொல்லுகிறபடியாகும். சித்திரத்தைக் கையினால் எழுதின போதிலும், உண்மையாய் வேலை செய்கிறது மனதாகும். ஆதலால் சித்திர வேலையை 'மனோவூக வேலை' என்று சொல்லலாம். இப்படிப்பட்ட வேலைகளுக்குக் குறைந்தும், முன் சொன்ன வேலைகளுக்குச்சற்று உயர்ந்தும் உள்ள வேலைகளைத் தான் கைத்தொழில்கள் என்கிறார்கள். கெடியார வேலையைக் கைத்தொழில் என்று சொல்லலாம். பொன்னையோ, வெள்ளியையோ, இரும்பையோ ஏதோ ஒரு உலோகத்தையோ நாநாவித சக்கரங்களாகவும், சுழல்களாகவும் செய்து கெடியார மென்கிற விசித்திர யந்திரத்தை இயற்றுகிறார்கள். சித்திர வேலையைப்போல இவ்வேலையிலும் யுக்தி, சாமர்த்தியம் வேண்டி யிருக்கவில்லையா? அப்படியிருக்க, இதைச்சித்திரவேலையினுந் தாழ்ந்ததான கைத்தொழிலென்று சொல்லுவானேன் எனில், ஆம், முதல் முதலில் கடியாரம் செய்யும் விதம் கண்டு பிடிக்கப்பட்ட போது அதிக யுக்தியினாலேதான் அது ஆகவேண்டி யிருந்தது. ஒரு தரம் கண்டுபிடித்த பிறகு, சாதாரணமாய் எவனாகிலும் அந்த வழியைக் கற்றுக் கொண்டு கெடியாரத்தைச் செய்து விடலாமன்றோ? சித்திர வேலையோ அவ்வாறன்று. எந்தச் சித்திர வேலைக்கும் மனோவூகம் கலந்தே யாகவேண்டும். இது தான் சித்திர வேலைக்கும், கெடியார வேலைக்கும் உள்ள வித்தியாஸம். இவ்விதமே யந்திரங்களினால் இயற்றப்பட்ட இரும்பு வேலை, தச்சு வேலை, கண்ணாடி வேலை, கலசம் முதலிய மண் வேலை, பஞ்சு வேலை, தோல் வேலை, கடித வேலை, அச்சு வேலை முதலியவைகளும் கைத்தொழில்களாம்.

கைத்தொழில்களை நடத்தும் வழியைக் கண்டு பிடிப்பதற்கு சாஸ்திரப் பயிற்சியும், நுட்பவறிவும், அவைகளை இயற்றுவதற்கு யுக்தி உபாயமும், செழிப்பிப்பதற்கு ஒழுங்கும், ஒற்றுமையும் வேண்டும். அவைகளைப் பாதுகாப்பதற்குத் தகுந்த அரசாண்மையும் இருக்க வேண்டும். கைத்தொழில்களால் மனிதர்களுக்கு உண்டாகும் பலன் என்னவெனில், அவரவர்க்குவேண்டியவைகளைத் தமது பக்கத்தில் தாமே செய்து கொண்டு அநுபவித்துச் சௌக்கியமாய் வாழ்வதே. பிராணன் நிலைத் திருப்பதற்காக விவசாயத்தைச் செய்கிறோம். அதன் பின் நமது ஸந்தோஷ சுக செல்வங்களைப் பெருக்குவித்துக் கொள்வதற்காகக் கைத்தொழில்களைச்செய்ய வேண்டியிருக்கிறது. யந்திரங்கள் இயற்றுவதற்குசாஸ்திர ஞானம் விலையற்ற சாதகம். மணலும் சாம்பலும் கண்ணாடியாகிற தென்றும், கந்தையானது கடிதமாக மாறுகிற தென்றும் சொன்னால், அது ஆச்சரியகரமான விஷயமன்றோ? சணலைச்



சரிகை யாக்கினால், ஒன்றுக்கு ஐயாயிரமடங்கு விலையுயர்ந்து போகிறது. இரும்பை ஊசிகளாகவும் சங்கிலிகளாகவும் செய்யின் விலை எத்தனையோ பங்கு அதிகரிக்கின்றது. இவை யெல்லாம் கைத்தொழில்களின் மகத்துவ மன்றோ? பிரபஞ்சம் அழுது பொருந்தி நிற்பதும் உய்வதும் கைத்தொழில்களால் தான்.

இராஜீய விஷயத்தில் லோகப் பிரவித்தமான கிளர்ச்சி விளைவித்த காந்தி முனிவர் வியாபாரம் கைத்தொழில் முறையில் தீரயோசித்தே இப்பொழுது அவ்வழி திரும்பி விட்டார். உலகத்தில் பிரதானமாக வேண்டப்படுவது, அன்னம்—வஸ்திரம், இரண்டு தான். விவசாயத்தால் அன்னம் கிடைக்கின்றது. வஸ்திரமோ கைத்தொழிலின் மூலமாகத் தயாராக வேண்டியுளது. எனவே, கைத்தொழில்கள் யாவற்றிலும் முதன்மை பெற்றது வஸ்திரம் நெய்யும் தொழிலாம். அதையே காந்தியடிகள் தலைமைத் தொழிலாகக் கொண்டு அனைவரையும் தம் நாட்டிற் செய்த கதரை யுடுத்துமாறும், நூல் நூற்குமாறும் வற்புறுத்தி வருகின்றார். இதன் உட்கருத்தென்ன? பிரதமத்தில் நாட்டின் கைத்தொழில் பெருக்கடைந்து அவைகள் நமது சொந்த தேசத்தின் பொருள்கள் என்கிற பக்குவ ஞானம் ஒவ்வொருவரது உள்ளத்தும் உண்டாகி விடுமாயின், அதன் பயனாக, தனது நாடு, தனது தேசத்துப் பொருள்கள் என்கிற விவேகம் தோன்றி அதினின்றும் தனது, தேசம் முற்பட்டு ஓங்குவது எவ்வாறென்னும் விசார அலைகள் வீசப்பெற்று, அதன் தொடர்பாக ராஜீய ஞானமும் தன்னில் தானே உதயமாகி, இவ்வண்ணம் படிப்படியாக முன்னேறிச் செல்லுதற்குக் கூடுமானதாகி விடுமென்பது தான். இப் பெருங் கருத்துகளைத் தொடர்ந்து நிறைவேற்றுவதற்கு நாம் நமது தேசத்தின் கைத்தொழில்களை ஆதரித்து, கதர் உடுத்து வாழ்வதே நமது பிற்கால க்ஷேமத்துக்கேற்ற சூக்ஷ்மமான மார்க்கமாம். இப்புதிய பிரபவ வருஷத்திலிருந்தேனும் நாம் புது உணர்ச்சிகொண்டு நம் நாட்டுக் கைத்தொழில்களில் அபிமான மிக்குடையோராகி, அவற்றில் தலைமை வாய்ந்துள்ள கதரைப் போற்றி, கதரே நமக்குக்கதி பயக்குமென்று ஒரே முகமாய்த் துணிந்து, அதனையும் அதுபோன்ற மற்ற கைத்தொழில்களையும் வளர்த்துச் செல்ல முற்படுவோமாயின், இனி 59-வருடங்கள் கழிந்து தோன்றப் போகிற அக்ஷய வருஷத்தில் நாம் பூர்ண சுதந்திரர்களாய் சுயராஜ்யம் பெற்று வாழ்வோ மென்பது நிச்சயம்.

ஆகவே, நமது தேச விடுதலை நமது நாட்டுக்கைத்தொழிற் பெருக்கிலும், அத் தொழில்கள் யாவற்றினும் முதலாவதான கதரிலும் தான் சூக்ஷ்மமாய் மறைந்துள்ள தென்பதை அறிதல் வேண்டும். "அறிகிறவன் துணிவு கொள்ளலாம்" என்பது கீதையின் வாக்கு. அவ்விதமே துணியக்கடவோம். நாம் துணிவு கொள்வதைப் பொறுத்துள்ளது நமது தேச விடுதலை.

---

பெண்ணைப் பெற்றவன் முகத்தை அப்பெண்ணுக்குக் கல்யாணம் ஆகும்போது பார்த்தால்—தன் மகளைப் பிரிகிற துக்கத்தின் உண்மையான உருவம் வெளிப்படையாய்த் தெரியும். கல்யாணச் சடங்கில் பெண்ணின் தாய் தந்தையர் தம் அருமை மகளைப் பிரிவதனால் வருந்தி அழுகிறார்கள் என்று சொல்லும் மந்திரம் இருக்கிறது.

# 'ஆநந்த குண போதினி'யின்

# இரண்டாவது பருவம்

எல்லாம்வல்ல இறைவனது திருவருளால் நமது "ஆநந்த குணபோதினி"யின் முதல் வருடம் இனிதாக நிறைவேறி, இந்தப் பிரபவ வருட முதற்கொண்டு இரண்டாவது பருவம் தொடங்கி யிருக்கின்றது. இதுவரையில் நாம் கொண்ட கோட்பாடுகளை அனுசரித்தே இனியும் நடத்தப்படும். மேலும் இத்தனை, நாளாய் இருந்ததுபோல் நீதி விஷயங்களும், அனுபவ விஷயங்களும், சாஸ்திர சரித்திர விஷயங்களும், ஞானார்த்தமான போதனைகளும் இருப்பதோடுகூட, இவ்வருஷத்தில் தேகதத்துவ ஸம்பந்தமாய்ப் புதிதாக எழுதப் படுவதுடன், இன்னும் இவ்வாறு சிறியோர் பெரியோர் பலர்க்கும் உபயோகமான விஷயங்களும் சேர்க்கப்படும்.

நமக்குக் கிடைத்திருக்கும் நேசர்களுடைய நற்றுணையால் நமது 'ஆநந்த குண போதினி'க்குப் நாலாயிரங் கணக்கான சந்தாதார்கள் சேர்ந்துள்ளார். அவர்களின் எண்ணிக்கை பெருகியதற்கேற்ப, முதலில் அச்சிட்ட சஞ்சிகைகள் யாவும் செலவாகிப் போய், மறுபடியும் இரண்டாவது முறை பதிப்பிக்கும்படியானதும் இப்பத்திரிகையின் விருத்தியை ஒருவாறு விளக்கும். தமிழ் வருடங்களின் முதலாவதான இந்தப் பிரபவ வருடம் தனது முதன்மைக்கேற்ப, இப்பத்திரிகையையும் முதற்றரமுள்ளதாகச் செய்யுமென்று நம்புகிறோம்.

இப்பத்திரிகைக்கு உசிதமான விஷயங்களை எழுதி அதுவே நினைவாக இருந்துவரும் நாமும், இனியும் இதைப் படிப்பவர்களுக்குப் பல வகையிலும் விநோத முண்டாக்க மனப் பூர்வமாய்ப் பாடுபட்டு வருவோம். இப்பத்திரிகையைத் தொடங்கும்போது இருந்தது போலவே இப்போதும் இதன் அபிவிர்த்தியைப்பற்றி விடா முயற்சி செய்வோம்.

இப்பொழுது வருஷத் துவக்கமாதலால், இத்தருணத்தில் முக்கியமாய் நமது அன்பர்களைக் கேட்டுக் கொள்ள வேண்டுவது ஒன்று உண்டு. அவரவர்கள் தம்மால் கூடியவளவு முயற்சி செய்து தம் பந்து மித்திரர் முதலியவர்களுக்கெல்லாம் எடுத்துரைத்து இந்த ஆநந்த குணபோதினிக்கு இன்னும் பல புதிய நேசர்களுடைய சகாயத்தைத் தேடிக் கொடுத்து இதைப் பிரசுரப்படுத்துவதற்காக இப்பத்திரிகையின் அதிபருக்கு யாதொரு சிரமமும் நேராமல், மிகவும் நயமான இந்த ஆநந்த குண போதினி சகல செலவுகளுக்கும் தன்னைத் தானே தாங்கிக் கொள்ளும்படியாகச் செய்வார்களானால் மிக்க நலமாயிருக்கும். இப்போதே நமக்கு நாலாயிரக் கணக்கில் கையொப்ப நேயர்கள் இருக்கிறார்களென்றாலும், இன்னும் பல கையொப்பக்காரர்கள் சேர்ந்தால், அது வழி நடப்பவர்களுக்கு வாகனங் கிடைத்தாற் போலாகும். அந்த



நேசர்களுடைய நிலையான பொருளுதவியைக் கொண்டு நாம் இன்னும் அதிக ஊக்கத்தோடும் பாடுபட்டு இப்பத்திரிகையை மேன்மேலும் மிக்க விநோதமாயும் உபயோகமுள்ளதாயும் சிறப்பிக்கவும் கூடும். அத்துடன் உசிதமான பல இனிய படங்களையும் எளிதில் தேடிக் கொடுக்கவும் சாத்தியமாகும்.

சென்ற வருஷத்தைப் போலவே, இவ்வருஷத்துக்கும் தொடர்ந்து ஆதரிக்க முன் வந்துள்ள நமது அன்பர்கள் அனைவருக்கும் நமது நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆநந்த குண போதினி தமிழ் நாட்டில் பெரியோர்கள் ஆசீர்வதித்த வண்ணமே சிறந்த உயர்தரப் பத்திரிகைகளுள் ஒன்றாக விளங்கி நெடுங்காலம் நிலவுமாறு பகவானைப் பிரார்த்திக்கின்றோம். ஸர்வலோக சரண்யராகிய ஜெகதீசன் நம்மெல்லோரையும் ரக்ஷிப்பாராக. சுபம்.

பத்திராசிரியர்.

---

ஸ்திரீகள் தங்களுக்கு இயற்கையாயுள்ள வரையறைகளை ஏற்றுப் புருஷருடன் சரி சமானமாகப் போட்டிப் போடாமல் குடும்ப ஸம்ரக்ஷணையிலே இருக்கும்படி செய்யாவிடின், அவர்களுக்கும் தீங்கு நேருவதன்றி அவர்களை நம்பிய ஆடவர்களும் ஒடிந்த கையினராய்விடுவர். வாழ்க்கையில் ஒருபாலார் செய்யக்கூடாத காரியத்தை மற்றவர்கள் செய்யும்படியாகச் சிருஷ்டியிலேயே அமைந்திருக்க, ஸமத்துவத்திற்குப் போட்டிபோடுதல் அனர்த்தமாகவே முடியும். பெண்மணிகள் நன்கு கல்வி பயிலட்டும்; வித்யாவதிகளாகட்டும். தாங்கள் கொண்ட பயிற்சியை யெல்லாம் தங்கள் கணவரது நலத்திற்கு உபயோகித்து, எக்காலத்தும் அவரிடத்து அன்பும் பணிவும் மேற்கொண்டு, ஸமூக காரியங்களிலும் பங்கு பெற்று உழைக்கட்டும். தம் கணவருக்கும் குடும்பத்துக்கும் செய்யவேண்டிய கடமைகளுக்குப் பிறகு மற்ற கடமைகளை ஏற்பதே உத்தமிகட்குப் பொருந்தும்.

## வேலையில் பிரியம்

பாபு கோஸால் :—(காங்கிரஸ் கூடிய ஸமயத்தில்) "உங்களுக்குக் குமாஸ்தா வேலைதான் கொடுக்க முடியும். அது உங்களுக்குச் சம்மதமா ?"

ஸ்ரீ காந்தி :—"பேஷாகச் செய்கிறேன். என்னுடைய சக்திக்கு மீறியதாக இல்லாத எந்த வேலையையும் செய்யத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன்."

"வயதில் மூத்தவர்களிடத்தில் எனக்கு மரியாதை இருந்ததால் அந்த வேலையைச் செய்ய எனக்கு ஆசை அதிகரித்தது."

—காந்தி.

# வருஷப் பிறப்பின் வைபவம்

பூமி பாரம் தீர்க்கும்பொருட்டு ஸ்ரீ வைகுந்தநாதனான ஸ்ரீமந் நாராயணன் துவாரகையில் ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் செய்திருந்த போது, பதினாறாயிரம் கோபிகைகளுக்கும் பதினாறாயிரம் மாளிகைகள் அமைத்துக் கொடுத்து, அவர்களுடன் வீற்றிருந்து லீலா விநோதரா யிருந்தார். அப்பொழுது நாரத முனிவர் எம்பெருமானை நோக்கி, ஸ்வாமி! தாங்கள் பதினாறாயிரம் கோபிகைகளை வைத்துக்கொண் டிருக்கிறீர்களே, அடியேனுக்கு ஒரு ஸ்திரீயைக் கொடுக்கக் கூடாதா? என்று விநோதார்த்தமாய்க் கேட்டனர். அதற்கு ஸ்ரீ கிருஷ்ண பகவான், நான் இல்லா திருக்கின்ற வீட்டிலிருக்கும் ஸ்திரீயை நீர் எடுத்துக்கொள்ளும் என்றார்.

நாரதர் அவ்வாறே வீடுகள் தோறும் நுழைந்து நுழைந்து பார்த்தார். எங்கும் ஸ்ரீ கண்ணபிரான் எழுந்தருளி யிருக்கக்கண்டு, எம்பெருமான் இல்லாத இல்லம் கிடையா தென்று தெரிந்தவராய் நாணமுற்று, மறுபடியும் கண்ணபிரானிடத்திற்குத் திரும்பி வந்து, ஸ்வாமி! இவைகளெல்லாம் எனக்கு சமாதானமாகவில்லை. உமது ரூப லாவண்ய சவுந்தர்யத்தி னிடத்திலே எனக்கு விருப்பம் மிகுந் தோங்கி அவஸ்தை அதிகரித் திருப்பதால் நான் பெண்ணுருக்கொண்டு உம்முடனே கேளீ விலாஸமாய் வைபவம் பெறவேண்டுமென்றனர்.

இவ்வாறு கூறினதைக் கேட்ட கிருபாஸாகரராகிய மாயவன் நாரதரை யமுனா நதியிலே ஸ்நானம் செய்யுமென்றார். அப்படியே நாரதர் செய்த மாத்திரத்தில் ஓர் அழகிய பெண்ணுருவத்தை யடைந்தார். அப்பெண்ணுடனே பகவான் அறுபது வருஷகாலம்வரை கிரீடா ரஞ்சிதராய் விளங்கா நிற்க, அந்த அறுபது வருடங்களில் அறுபது குழந்தைகள் பிறந்தனர். பிரபவ, விபவ, என்று அக்குழந்தைகளுக்கு முறையே பெயரிட்டார்கள்.

பிறகு நாரதர் பூர்வ பிரக்ஞையைப் பெற்று பகவானை நோக்கி தாம் இன்னும் ஸ்திரீ ரூபமாயிருந்துகொண்டு பிள்ளைகளைப் பெறத் தம்மால் சக்தியில்லை யென்று வேண்டுதலும், ஸ்ரீ ஸர்வேச்வரன் கருணை கூர்ந்து அவரை மறுபடியும் யமுனா நதியில் ஸ்நானம் செய்யச் சொன்னார். அதன்படியே செய்து நாரதர் பழய உருவத்தைப் பெற்றார். அந்தப் பிள்ளைகள்தான் பிரபவ முதற்கொண்டு அக்ஷய வரையில் சொல்லப்படுகிற திருநாமங்களையுடைய அறுபது பிள்ளைகள்.

அப் பிள்ளைகளின் பெயரை அவைகள் பிறந்த வருஷம் முழுமையும் வழங்கி வந்தபடியினாலே, வான் முறையாய் இக்காலத்தும் அப்பெயரையே கிரமப்படி ஒவ்வொரு ஆண்டுக்கும் வழங்கப்படுகின்றது. மேலும், அவர்கள் பிறந்த நாளை அக்காலத்தில் கொண்டாடியதைப் போல் நாமும் அந்த நாளை இப்பொழுது வருஷப் பிறப்பென்று கொண்டாடுகிறோம். புது வருஷம் அனைவருக்கும் மங்களத்தைச் செய்யுமாக.

---

# நாநா விஷயக் குறிப்புகள்

இயற்கைப் பொருள்களால் ஆநந்தமடைவோனிடம் ஒரு பெரிய நற்குணமுண்டு. அதாவது ஒவ்வொரு வஸ்துவையும் ரூப பேதமாகவும், வர்ண பேதமாகவும், ஆகிருதி பேதமாகவும் நாநாவித பேதத்துடன் அமைத்த கடவுளின் மகிமை எவ்வளவு பெரிதென்று அடிக்கடி யோசிப்பான். இவ்வாறு யோசிப்பது மாத்திரமல்ல; ஒவ்வொன்றினாலும் தானாவது பிறராவது பயன்படும்படி வஸ்துக்களின் குணாகுணங்களையும் தெரிந்து வெளிப்படுத்துவான். அநேக புற்பூண்டுகளிலும் பிராணிகளிலும் வெகு ஜனங்களுக்கு உபயோகமான குணங்க ளுண்டென்பதற்குச் சந்தேகமில்லை. இவற்றை அறிய மெத்த வருத்தப்பட்டுப் படிக்கவும் வேண்டாம். அதி நுட்பமான புத்தியும் வேண்டாம். வேண்டியதெல்லாம்கூடி அடிக்கடி ஒவ்வொன்றையும் நன்றாய்ச் சோதிப்பதில் எடுத்துக்கொள்ளும் பொறுமையும் புத்தியுமேயன்றி வேறொன்றும் இல்லை. ஈசுவர சிருஷ்டி யெங்கும் தனக்குத்தானே விளங்காநின்ற கடவுளுடைய ஏற்பாடுகளையும் செய்கைகளையும் பார்த்துப் பரமாநந்த மடைவதைவிட, மனிதர்களுக்குக் கடவுள் கொடுத்திருக்கிற அறிவுக்குப் பயன் வேறுண்டோ?

***

பூமியிலுள்ள ஆறுகளைப் பார்க்கிலும் ஆயிரமடங்கு பெரிதான ஆறுகள் ஆகாயத்தில் பலவுள. அவை வஸந்த தூற்றல்களாகவும், கோடை மழைகளாகவும், மழைக்காலத்துப் பெருமழைகளாகவும், பனிகளாகவும் நம்மண்டை வந்து சேருகின்றன. எங்கும் நீர் ஒரு தன்மைத்தே. அந் நீரில் வெவ்வேறு சுவை யுண்டாவது அதனுடன் கலந்துள்ள பொருள்களின் சேர்க்கையாலாம். ஜலத்தில் ஒரு பங்கு ஜலவாயுவும், எட்டு பங்கு சுவாஸ வாயுவும் கலந்திருக்கின்றன. ஜலவாயு அக்கினியை எளிதில் வளர்த்துவது; சுவாஸவாயு அதைத் தாங்குவது. இவ்விரண்டு வாயுக்களும் சேர்ந்தால் உடனே தீயை அணைத்துவிடுகிறது.

***

ஆகாயத்தை ஒரு பெருங் கடலென்னலாம். கடலில் மீன் முதலை முதலிய பலநீர் வாழ் ஜந்துக்கள் நீந்துவதுபோல், ஆகாச மஹா ஸமுத்திரத்திலும் பற்பலவிதமான பறவைகள் நீந்துகின்றன. பலவித நண்டுகளும் சிப்பிப் பூச்சிகளும் கடலின் அடிப்புறத்திலேயே ஊர்வனபோல், மனிதர் மாடு மிருகம் முதலியவர்கள் ஆகாயத்தின் அடிப்புறத்திலேயே ஸஞ்சரிக்கிறார்கள்.

***

வாயுமண்டலமென்பது நமது தேகத்தில் உபயோகமாய்க் கெட்டுப்போன காற்றை மறுபடி கொட்டிவிடுவதற்குப் பெருஞ் சாக்கடையாகவும், அப்படி விஷமாய்ப்போன காற்றை அனுகூலமானதாய்ச் சுத்தப்படுத்துவதற்குச் சிற்ப சாலையாகவும், கடல் நீரைக்கொண்டுபோய் ஆறுகளின் உற்பத்திஸ்தானத்திற்குக் கொண்டு சேர்த்து அவ்வாறுகளை நிரப்புவதற்கு ஒரு சிறந்த யந்திரமாகவும், உலகத்திற்கு அனுகூலமாயும், பலன் தருவதாயுமிருக்கிற எந்தக் காரியத்தையும் நிறைவேற்றுவதற்கு அழிவில்லாத உக்கிராணமாயு மிருக்கிறது.

மூளையைக் கொண்டு வேலை செய்பவர்களுக்கு அடிக்கடி ஒருவித மயக்கம் தோன்றிக் கிறுகிறுவென்று தலை சுற்றுவதுண்டு. அத்தகையோர் ஒரு வாரத்திற்கு காய்ந்த நெல்லி வித்துகளைப் பாலில் அரைத்து சிரசில் தேய்த்துக்கொண்டு ஒரு மணி நேரம் ஊறிய பிறகு வெந்நீரில் பிரதி தினமும் ஸ்நானம் செய்வது உத்தமம். காலணா இஞ்சியைச் சீவலாக்கி, அதையும் காலணா சீரகத்தையும் வாணலியில் நெய்யில் வறுத்து, அதில் ஒரு எலுமிச்சம் பழம் பிழிந்து, அதன்பின் கால்படி ஜலம் ஊற்றி அரைக்கால்படியாகச் சுண்டக் காய்ச்சி, அந்தக் கஷாயத்தில் அரையணா வெண்ணெயைப் போட்டு, அதன் சூட்டில் வெண்ணெய் உருகியபின் பருகிவிடவேண்டும். இவ்விதம் காலை மாலை ஒருவாரம் செய்யின் மயக்கம் குணமாகிவிடும்.

***

வெகு புகழ்ச்சியாகச் சொல்லப்படும் ஆசிரியர்களிற் பல்லோர் வறுமைக் கடலில் ஆழ்ந்து கிடக்கின்றனர். கையில் ஒரு காசுகூட இல்லாத நேரம் எத்தனையோ தடவைகளில் அவர்களைச் சூழ்ந்துகொள்கிறது. இன்றைய செலவுக்கு என் செய்வோமென்று கலங்கும் நேரத்தில் அவர்களைப் பற்றி ஒரு முழநீளம் புகழ்ந்து பத்திரிகையில் வரைந்துள்ளதைப் பார்த்துச் சிரிக்கின்றனர். புகழ் பெரிது தான், வயிற்றுக்குக் காணோமே என்கின்றனர். அவர்களைக் கொண்டாடுவோர் அவர்களின் கதியென்ன என்பதைப் பற்றிக் கவனிப்பதேயில்லை. அவர்கள் மாண்டு மண்ணானால் மட்டும் பத்திரிகைகளில் இரண்டு கலம் அவர்களைப்பற்றி விரிவாய் எழுதப்படுகின்றன. இந்தக் கீர்த்திதான் லாபம்! அவர்களையறிந்த முக்கிய நண்பர்களால் அவ்வப்போது உதவிகள் கிடைத்து, அவர்களாலேயே அவர்கள் கைமூடிய வாழ்வில் ஜீவிக்கவேண்டிய பரிதாப நிலையிலுள்ளார்.

---

மனுஷ்யன் தன்னை மிக்க பலவானெனக் கருதுகிறான். ஆயினுமென்ன? ஒரு ஜ்வரம் வந்தால், ஒரு சிரங்கு தோன்றினால், இரண்டு தரம் பேதியானால், சற்றே வயிற்றுவலி கண்டால் உடனே களைத்துக் கீழே விழுந்துவிடுகிறான்.

### ரயில் பாஸ்.

பணம் செலுத்திப் பார்ஸலைப் பெறவேண்டிய ரயில் பாஸில் ரூபாய் அணா கலத்தின் நடுவில் **12**-என்று இருக்கிறது. அதை 12-அணா என்று எண்ணுவதா? அல்லது ரூ 1–2–0 என்று எண்ணுவதா? 12-அணாவாக இருந்தாலும் ரயிலில் 1–2–0 என்று சொல்லிவிடுகிறார்கள். அவ்வித பாஸைப் பிறருக்கு அனுப்புகையில் இவ்வித ஸம்சயம் நேரும்போது எழுந்தாலும் அத்தொகையை எழுதித் தரும்படி பார்ஸல் குமாஸ்தாவிடம் கேட்பது மேல்.

## கூட்டுத் தொழிலும்—தொழிற் பிரிவினையும்

உலகத்தில் ஸகலவித தொழில்களும் மேன்மேலும் விருத்தியாகி நல்வாழ்க்கைக்கு அடுத்த சௌக்கியங்கள் எல்லோருக்கும் உண்டாவதற்குக் கூட்டு வேலை இன்றியமையாத கருவியாயிருக்கின்றது. கூட்டு வேலையாவது பலர் கூடி வேலை செய்வது: அது இருவகைப்படும். (1) ஒரே வேலையை அநேகம் பேர் கூடிச் செய்து முடிப்பது ஒன்று; (2) பல வேலைகளைச் செய்வதில் ஜனங்கள் ஒருவருக் கொருவர் ஒத்தாசையாயிருப்பது மற்றொன்று. இவ்விரண்டையும் உதாரணங்களினால் விரித்துரைப்போம்.

***

நாலு வேட்டை நாய்கள் தனித்தனியாய் ஓடி எத்தனை முயல்களைக் கொல்லுமோ, அதைவிட அதிகமாய் இரண்டு நாய்கள் ஒன்றாய் ஓடினால் கொல்லும். அப்படியே தனித்து ஒரு மனிதன் பிரயாசைப்பட்டுச் செய்கிற அநேக காரியங்களை இருவர் கூடிச் செய்தால், நான்கு பேர் பிரத்தியேகம் பிரத்தியேகமாய் எவ்வளவு செய்யக்கூடுமோ அதைவிட அதிகமாய்ச் செய்வார்கள். எப்படியெனில், பளுவான சுமைகளைத் தூக்குவது, மரம் வெட்டுவது, தண்ணீர் இறைப்பது, படகு ஓட்டுவது, சுரங்கம் வெட்டியெடுப்பது முதலான எண்ணிறந்த காரியங்களில் அநேகம் பேர் ஒன்றாய்க் கூடி ஒரே காலத்தில் ஒரே இடத்தில் ஒரே விதமாய் வேலையை நடத்தவேண்டும். இதற்கே கூட்டுத் தொழில் என்பது.

***

இனி, ஒரு தொழிலே பல உட்டொழில்களாகப் பிரிவுபடக்கூடும். இது அடியில் வரும் உதாரணங்களினால் செம்மையாய் விளங்கும். ஒருவன் கம்பி இழுப்பது, ஒருவன் அதை நீட்டுவது, ஒருவன் அதைத் துண்டு துண்டாகத் தறிப்பது, ஒருவன் கூர்ப்படுத்துவது இது முதலாகப் பதினெட்டு பிரத்தியேகமான செய்கைகளாக மிகவும் அற்பமான குண்டூசி வேலையைப் பிரிக்கலாம். இந்த வேலையை இப்படிப் பிரித்துச் செய்தால், பதினெட்டு பேரும் சேர்ந்து ஒரு நாளைக்கு இருபது ராத்தல் ஊசி செய்யக்கூடும்; ஒரு ராத்தலுக்கு நாலாயிரம் ஊசி விழுக்காடு எண்ணாயிரம் ஊசி ஆயிற்று; ஆகையால் ஒவ்வொருவனும் ஒரு நாளைக்கு நாலாறு நாலுற்றைம்பது ஊசி செய்ததாக வைத்துக் கொள்ளலாம். ஒருவனே இந்த வேலைகள் எல்லாவற்றையும் செய்துகொண்டு குண்டூசி பண்ண ஆரம்பித்தால் ஒரு நாளைக்குப் பத்து பதினைந்து செய்து முடிப்பதும் அரிது. இவ்விதமே கெடியாரம் செய்யும் தொழிலுக்கு நூற்றிரண்டு வேலைக்காரர்கள் வேண்டுமாம். இப்படியே அந்தத் தொழிலுக்குத் தக்கபடி தொழிற் பிரிவினை இருக்கும்.

***

ஆகையால் ஒரு தொழில் பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டால் எதெதற்குக் கெட்டிக்காரர்களாக வேண்டுமோ, எதெதை எல்லோரும் செய்

யலாமோ வென்று பார்த்துத் தகுந்தபடி வேலைக்காரர்களை அமர்த்திக் கொள்ளலாம். குண்டூசி செய்யும் தொழிலில் ஒருவகை வேலைக்கு மூன்று அணா கூலி, மற்றொரு வகையான வேலைக்கு மூன்று ரூபாய் கூலி. மூன்று ரூபாய் சம்பாதிக்கக் கூடிய மனிதன் மூன்று அணா கூலி வரும் வேலையைச் செய்தால் அது அவனுக்கு நஷ்டமன்றோ? அதற்குத் தகுந்த சாமர்த்தியசாலிகளை அதில் நியமிக்கவேண்டும்.

***

இவ்விதமே பத்திரிகைத் தொழிலை எடுத்துக் கொள்வோம். (1) நிருபர்கள் ஆங்காங்கிருந்து சமாசாரங்கள் அனுப்புகிறார்கள். (2) தந்திகள் அனுப்பும் கம்பெனியார் அதைத் தொடர்ச்சியாய் அனுப்பிக்கொண்டே இருக்கிறார்கள். (3) உதவி ஆசிரியர்கள் தங்களுக்குத் தலைமைப் பத்திராசிரியரால் கொடுக்கப்பட்ட வேலைகளை ஒழுங்காய்ச் செய்து முடிக்கிறார்கள். (4) உதவி ஆசிரியர்களுக்குப் பல வேலைகளையும் பிரித்துக் கொடுத்து விட்டு, பத்திராசிரியர் தாம் செய்யவேண்டிய தலையங்கம், துணையங்கம் எழுதவேண்டிய மற்ற வேலைகளைச் செய்து முடிக்கிறார். (5) குமாஸ்தாக்கள் வரும் கடிதப்போக்குவரத்துகள், கணக்குகள் இவற்றைக் கவனிக்கின்றனர். (6) பொக்கிஷதாரர் ரூபாய்களை வாங்கவும் கொடுப்பதுமானவற்றைக் கவனிக்கிறார். (7) மானேஜர் பத்திரிகையின் எல்லா நிர்வாக காரியங்களையும் கவனிக்கிறார். (8) பிரசுரகர்த்தர் அப்பத்திரிகையை வெளியாக்குவதற்கானவற்றில் சுறுசுறுப்பாயிருக்கிறார். (9) விளம்பர குமாஸ்தா விளம்பரங்கள் சம்பந்தமானவற்றை மட்டும் கவனித்துக்கொள்கிறார். (10) அச்சுக்கூடத்தார் பத்திரிகையை அச்சிடுவதைப் பற்றி முழு கவனம் செலுத்துகின்றனர். (11) தபாற்சாலையார் வெளியான அன்றைய பத்திரிகையை வெளியிடங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்கிறார்கள். இவ்விதம் பதினொரு காரியங்கள் செய்து ஒரு தினத்துப் பத்திரிகை வெளியேறுகிறது. ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வேலை. அதனால் வேலையும் சுலபம். அது முடிவதும் சீக்கிரம். ஒருவரே பல வேலைகளையும் செய்வதெனில் அது முடியுமோ—சீக்கிரத்தில் ஆகுமோ? இப்போது தொழிற் பிரிவினை யென்பதன் பொருள் ஒருவாறு விளங்கும்.

## வேலைக்கு விண்ணப்பங்கள்.

படித்த வகுப்பார் வேலைக்கு விண்ணப்பங்கள் எழுதுவதில் வெகு தேர்ச்சி கொள்கிறார்கள். அதே வேலையாய் எழுதுவதிலேயே இருக்கிறார்கள்! ஒரு பத்து ரூபா கிடைத்தால் காலமுழுதுக்கும் அடிமை வேலை செய்யப் புறப்பட்டுப் போய்விடுகிறார்கள். சுதந்தரமாய்த் தொழில்—வியாபாரம் செய்ய எண்ணும் நினைவே தோன்றுவதில்லை. ஐயோ அடிமைப் புத்தியே!

## பாண்டுரோகம்

இரத்தக் குறைவால் தேகம் வெளிறிப்போதலுக்குப் பாண்டுரோகமென்று பெயர். அபக்குவ உணவினாலும், நாட்பட்ட வியாதிகளாலும், தேகத்திலுள்ள இரத்தம் குறைந்துவிட்டாலும் இந்த வியாதி சம்பவிக்கும். ஸ்திரீகளுக்கும் இந்த வியாதி உண்டாகும். சூதக அக்கிரமத்தாலுண்டாகும் வியாதியானால் சூதக பாண்டு என்ற பெயரால் வழங்கும். இரத்த மூலத்தாலும், உதிரப் பெருக்காலும், பித்தவாயு நோயில் சோடா உப்பை அதிகம் தின்றாலும் இவ்வியாதி அதிகமாய் உண்டாகும். அதிகத் துரிதமாய் இரத்த விர்த்தி செய்யும்படியான மருந்துகளைக் கொடுக்க வேண்டும். இந்தப் பாண்டுரோகத்தின் இலட்சணங்களாவன: முகம்-கண்-உதடு-நாக்கு-வாய்-ஈறு-தேகம் ஆகிய இவைகள் வெளுத்துக் கால்கள் தணிந்து நாடி சிறுத்து மெதுவாய் நடக்கும். தீபனம் மந்தப்பட்டிருக்கும். அசதியும் ஆயாசமும் அதிகமிருக்கும். நடந்தால்-மூர்ச்சை-பெருமூச்சு-மார்பு துடிப்பு உண்டாகும். சிலருக்குப் புறங்கால் வீங்கும். இவ்வியாதிக்கு ஆங்கிலம் ஆயுர்வேதம், யூனானி, சித்த வைத்தியம் முதலிய எம்முறையிலும் அயம்-காந்தம்-கிட்டம்-இம்மூன்று மருந்துகளே மிக்க உயர்ந்த குணம் செய்யக்கூடிய மருந்துகள். ஆயினும் சித்த வைத்திய முறைப்படி செய்த செந்தூர மருந்துகளை நிகர்த்த துலகிலுண்டென்று சொல்ல முடியாது. ஆறுபைசா கிட்டத்தைக் காய்ச்சிப் பழுக்கவைத்து, பசு மூத்திரம் சேர்த்திடித்த கரிசலாங்கண்ணிச் சாற்றில் பத்து தடவை காய்ச்சிக் காய்ச்சி நனைத்து, அதோடு காலணா காந்தமும் சேர்த்து, பொற்றலைக்கரிப்பான் சாற்றாலரைத்து உலர்த்தி, பத்துதடவை புடமிட்டு, கடைசியாய் ஆவாரம் பட்டைச் சாற்றாலரைத்து உலர்த்தி, ஒரு புடமிட்டு அரைத்து வைத்துக் கொண்டு தினம் ஒரு சிட்டிகை யளவு வாயில் போட்டுக்கொண்டு பசுவின் பாலும் அன்னமும் சாப்பிட அரிய குணம்செய்யும்.

ஜீ. கண்ணுசாமி,

முனிசிபல் தமிழ் வைத்தியர், திருவாரூர்.

[முதலில் கனத்த ஜ்வரம் தோன்றிப் பிறகு குணமடைந்தது போல் காணப்பட்டு, அதன்பின் அடிக்கடி ஜ்வரம் உண்டாகி, அதனால் இரத்தம் முறிந்து, தரும் மருந்துகள் தேகத்தில் பிடிக்காமற் போய், நெடுநாட்களும் சென்று, கடைசியில் பாண்டு ரோகத்திற்குத் திரும்புகிறதும் உண்டு. இந்த ரோகத்தினின்றும் வயிறு உப்பிப் போதலாகிய மகோதர ரோகம் தலைப்பட்டுக் கொள்வதும் கூடும். ஆரம்பத்திலேயே தகுந்த சிகிச்சை செய்யாவிடில், பிறகு கொடுக்கும் மருந்துகளெல்லாம் வேலை செய்யாமல் சும்மா இருந்துவிடுவதும் உண்டு. ப-ர்.]

[நமது அன்பர் தெரிவிக்கும் முறை சாமான்யர்கள் தாமே செய்து கொள்வதற்குக் கூடாமல் மிகக் கஷ்டமாயிருக்குமென் றெண்ணுகிறோம். எதற்கும் அநுபவம் பிரதானம். கைபாகம்-செய்பாகம் என்கிற விஷயங்கள் மகா பெரியவை. இவை வைத்தியரின் அருகிலிருந்து பழகியே வர

வேண்டும். முன் அநுபவமின்றிப் புடம்போடுதல் முதலியவற்றில் இறங்குதல் தவறு. ஆதலின், நமது அன்பரவர்கள் அநுபவத்தால்தான் தெரிந்துகொள்ள வேண்டுமென்றில்லாத சுலபமான வைத்தியக் கைம்முறைகளை வரைந்தனுப்புவது உத்தமமாகும். ப-ர்.]

---

ஈயும் எறும்பும் வெல்லத்தில் மொய்க்கின்றன. நாம் எத்தனை முறை ஓட்டினாலும் பிரயோஜனப்படுகிறதில்லை. ஈக்கும் எறும்புக்கும் தாங்கள் மொய்க்கும் வெல்லம் தங்களுடையதன்று என்ற ஞானம் கிடையாது. அதுபோல் மனிதர்களின் மனமும் புத்தியும் தங்கட்குச் சொந்தமல்லாத பொருள்களின்மீது நாடுகின்றன. அதனால் அவமானம் விளைகிறது. ஆகவே ஈக்கும் ஞானமில்லை; மனிதனுக்கும் ஞானமில்லை. இருவரும் அஞ்ஞானிகளே யாகின்றனர். ஈயையும் எறும்பையும் நசுக்குவது பெரியோர்களின் இயல்பல்ல. அவைகள் வெல்லப் பாத்திரத்தை யணுகாதபடி விளக்கெண்ணெயைத் தடவியோ, துணிகொண்டு மூடியோ வைப்பார்கள். இம்மாதிரியே துஷ்டத் தன்மையுள்ள மனதையும் புத்தியையும் பாபவழியிற் செல்லாதபடி நாம் நமக்குச் சொந்தமல்லாத பொருள்களில் அருவெருப்பை யுண்டாக்கி அடக்கியாண்டு தடுக்கவேண்டும். இப்படிச் செய்வதுதான் அறிவாளிகளின் லக்ஷணம்.

***

நாவல்கள் எழுதப் புகுவோர் நம் நாட்டு ஜனங்களிடம் காணப்படும் குணதிசயங்களையோ, அல்லது அவர்களுக்கு உண்டாகவேண்டிய குணதிசயங்களையோ யமைத்துக் கதா ரூபமாக எழுதுவதே சிறப்புடைத்தாகும். தற்காலத்தில் வரையப்படும் நாவல்கள் அனைத்தும் ஆங்கில மொழிபெயர்ப்புகளாயுள்ளன. ஏதோ ஒன்று இரண்டு சுயகற்பனையில் இருக்கலாம். சிலரது நாவல்களில் எவ்வித ருசிகரத்தையுமே காணோம். நல்ல நீதி போதனைகளை யமைத்து எழுத வெகு பேருக்குத் தெரியவில்லை.

### புது வருஷத்திலே—

1. முன்பு தவறிப்போன அன்பு மீண்டும் உதயமாகிப் பெருகுக.

2. எவரெவர் உண்மை யன்பு மிகுந்தோரென்பதை—மறைக்கும் திரையை விலக்கித் தெளிந்து—ஒரு மனதாகிக் குலாவுக.

3. எவரெவர் தம்மால் ஆதரிக்கப்படவேண்டியவர், எவரெவர் தம்மையே கதியென்று ஹிருதய பூர்வமாய்த் தமது பாதங்களை நம்பியிருப்பவர் என்றும் கண்டுகொண்டு பகவானுக்குப் பிரீதியாக அன்னோரை ஆதரித்திடுக.

4. எந்த நாளிலும் எந்த சோதனையிலும் புன்னகை முகங் கொண்டிலங்க முயல்க.

## குமாஸ்தாக்களுக்கான 20-நீதிகள்

1. குறிப்பிட்ட நேரத்திற்கு 15-நிமிஷத்துக்கு முன்னதாகவே காரியாலயத்துக்குப் போ.

2. வந்தவுடன் தேதிகளை மாற்றி வை.

3. எஜமானர், ஏஜெண்டு வருவதற்கு முன் தகுதியான இடங்களில் முன் தினம் மாறி யிருக்கப்பட்ட வஸ்துக்களைச் சரிக்கட்டி ஒழுங்கு படுத்தி சுத்தமாக வை.

4. வந்த கடிதங்கள், இன்சூர், ரிஜிஸ்தர், வி. பி., தந்தி ரசீதுகளை அனுப்பிய மணியைக் குறிப்பிட்டு காலை அல்லது மாலை என்ற குறிப்புடனும், பதில் எழுதியது, பதில் எழுத வேண்டியது, பதில் தேவையில்லை என்ற குறிப்புடனும் கடிதங்களில் எழுதி தனித்தனியாகப் பிரித்து வை.

5. வெளியே போகுமுன்னே மேஜைமேலிருக்கும் அவசியமான சாமான்களை உள்ளே ஞாபகமாய் வைத்துவிட்டுப் போ.

6. அத்தியாவசியமான விஷயங்களை மறந்து போகா வண்ணம் தனிப் புத்தகம் தயாரித்துக் குறிப்பு எழுதி வை.

7. மேஜை, நாற்காலி, சுவர்களில் எழுதிப் பார்ப்பது துர்ப்பழக்கம். துண்டுக் கடுதாசிகளில் குறித்துப் பார்த்துவிட்டுக் கிழித்துக் குப்பை போடு மிடத்தில் போட்டுவிடு.

8. காகிதங்களைத் தபாலில் போடுவதற்கு முன் ஒரு தடவைக்கிரண்டு தடவை விலாசம், ஸ்டாம்பு, ஒட்டி யிருப்பதைச் சரி பார்த்து, உள் அடக்க மிட்டிருக்கும், காகிதம், கை சாத்துகள், பாஸ், ரசீதுகள், டாக்குமெண்டுகள், கரன்ஸி நோட்டுகள் இவைகள் மாறிப் போகாமல் சரி பார்த்து, கோந்து உள்ளிருக்கும் கடிதங்களில் சேர்ந்து ஒட்டிவிடாமலும், உடைக்கும்போது கடுதாசிகள் கிழிந்து விடாமலும் ஜாக்கிரதையாகப் பார்த்து ஒட்டிவிடு.

9. கண்டிப்பாய் நீ அலுவல் பார்க்கும் எஜமானனுடைய வியாபாரத் தகவல்களை உன் பிராண நண்பனுக்கும் வெளியிடாதே. வாடிக்கைக்காரர்(Customers)களிடம் வியாபார விஷயமாகப் பேசும்போது முன்னெச்சரிக்கையுடன், நடக்கும் வியாபாரத்துக்குப் பாதகம் ஏற்பட்டு விடாமல் மனதைக் கவரும் வண்ணம் சுருக்கமாகப் பேசு.

10. உனது அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருக்கும் பொழுது மனதை அங்கு மிங்கும் அலைய விடாமல் ஏக ஆலோசனையுடன் பிழையில்லாமல் திருத்தமாகச் செய்.

(தொடரும்)

மு. பெ. மாரியப்ப நாடார்.

அன்றுவந்த தபால்களைப் படித்துக்கொண் டிருக்கையில் எவராவது வரின், அவர்களுக்காகத் தபால்களைப் படிப்பதை நிறுத்திவிட்டுப் பேச ஆரம்பிப்பதுபோல் நடித்து அத்தபால்களை ஒரு பக்கம் மூடிவைத்துவிடு. அவர்கள் போனபிறகு பார். இது ஒரு பத்திரிகா மானேஜரின் தந்திரம்.

## இலகு வைத்திய முறைகள்

### சித்த வைத்தியம்

1. வில்வ இலை-பூவரசங்கொழுந்து-செம்பரத்த இலை-கலியாண முருக்க இலை இந்நான்கும் தேங்கா யெண்ணெயில் கசக்கிப்போட்டுக் காய்ச்சிய ஷெ எண்ணெயைப் பூசிக் குளித்தால் சொரி சிரங்கு போம்.

2. முத்தெருக்கன் செவி-(நிலக்கடம்) இலைச்சாற்றை எள்ளெண்ணெயில் விட்டுக் காய்ச்சி ஆறின பின் காதில் விட்டால் காது வலி நீங்கும்.

3. நிலக்கடம்புச்சாறும் வேப்பெண்ணெயும் சரியிடை கலந்து காய்ச்சி வடித்த எண்ணெயை வீசம் சேர் அளவு மூன்று காலையில் கொடுத்து பத்தியம் வைத்தால் வாதசூலை போம்.

4. புங்கம்பால்-வெள்ளருகுசார்-நல்லெண்ணெய் மூன்றும் சரி இடை சேர்த்துக் காய்ச்சி வடித்து மேற் சொன்னபடி பத்தியமாய் கொடுத்தால் காள்பட்ட வெட்டை நீங்கும்.

5. பிரண்டை ஒரு பிடி-சோற்றுக்கற்றாழை ஒரு பிடி-வரிக்குமட்டிக் காய் ஒன்று, வெங்காயம் ஒரு பிடி இவைகளை ஆமணக்கெண்ணெயில் அரிந்து போட்டுக் காய்ச்சி எண்ணெயை ஷெ அளவு முறைப்படி பத்தியமாய்க் கொடுத்தால் மலட்டு வலியும், அழி கெர்ப்ப நோயும் குணமாகும். சந்தான முண்டாகும்.

ஜீ. கண்ணுசாமி வைத்தியர்,
திருவாரூர்.

---

வாயுவானது நமது தேகத்தில் ஒரு சதுர அங்குலம் அளவுள்ள இடத்தில் ஐந்து வீசை சுமை சுமத்துகின்றது. நமது தேகம் முழுதும் 400-பாரம் சுமை சுமத்துகின்றது. ஆயினும் அது எப்புறத்தும் சமமாய்த் தாக்குவதனால் இது நமக்கு சுமையாய்த் தோன்றுகிறதில்லை. வாயு இல்லாவிடில் சூரிய கிரணங்கள் அவை உதயமாகுமிடத்தில் எவ்வளவு கொடுமையாய்க் காய்கின்றதோ அப்படியே பூமியிலும் வந்து விழுந்து தகிக்கும்படியாயிருக்கும். சூரியன் தோன்றுவதற்கு முன் காலையிலும், சூரியாஸ்தமனத்திற்குப் பின் மாலையிலும் ஒளி உண்டாவது வாயுவினால்தான்.

### ருஜூப்படுத்த முடியாமை.

ஒரு மனிதன் தவறுதல் செய்கிறன். பட்டப்பகலில் ஒரு அக்கிரமம் நடக்கிறது. ஒரு ஸமூகத்தில் பலர் துராசாரமாயுள்ளார். எல்லாம் நேரில் தெரியும். ஆனல், பத்திரிகையில் வெளியிடின் பிறகு அதை ருஜூப்படுத்த முடிகிறதில்லை. அதற்கேன சாக்ஷிகளும் கிடைப்பதில்லை. கடைசியில் பத்திராதிபர் மன்னிப்பு கேட்டுக்கொள்ள வேண்டியவராகிறர். இது ஒரு கூத்து.

## சென்றமாதம்

**உண்டியலில் பணம் போட்டால் தான் ஸ்வாமி தரிசனம்!**

ஸ்ரீரங்கம் கோயிலில் உண்டியலில் பணம் போட்டால்தான் உள்ளே விடுவதென்று வெகுவாக நிர்ப்பந்திக்கிறார்கள். வெளியூர்களிலிருந்து வரும் கிராமவாசிகளின் பாடு இன்னும் கஷ்டம். பத்திராசிரியரான ஸ்ரீமான் P. பரிமணப் பல்லவராயர் இவ்விஷயத்தைக் கோயில் டிரஸ்டியாருக்கு எட்டச் செய்ததில், அவர்கள் — உண்டியலில் பணம் போடுவது கட்டாயமல்ல, இஷ்டத்தைப் பொறுத்தது என்று பொது ஜனங்கள் அறியும்படி நோட்டீஸ் போர்ட் போடச் செய்வதாக — அறிவித்திருப்பதாகவும் தெரியவருகிறது. இவற்றின் மூலமாகவேனும் ஸ்வாமி தரிசனார்த்தம் வருகிறவர்களுக்கு ஏற்படும் நிர்ப்பந்தம் நீங்குமானால் பெரிய உபகாரமாயிருக்கும். சிலருக்கு உண்டியலிற் போட மனம் வருகிறதில்லை. அது பகவானுக்குப் போய்ச் சேருவதில்லை யென்றும், அதைவிடப் புஷ்பம் கொண்டு சென்று சூட்டலாமென்றும், பழம் தேங்காய் முதலியவற்றை வாங்கிச் சென்று அர்ச்சனை செய்யலாமென்றும், உண்டியலில் போடுவதற்குப் பதிலாக கர்ப்பூர ஹாரத்தி எடுக்கலாமென்றும், திருவிளக்கில் நெய் ஊற்றலாமென்றும் இவ்விதமாகச் சிந்தை போகின்றது. அவ்வாறானவர்களை உண்டியலில் போடும்படி வற்புறுத்தி என்ன பயன்? அவரவர் மனோ தர்மப்படி நடந்து கொள்ள வைப்பதுதான் நியாயம். திருப்பதி உண்டியல் பணம் அர்பத்னட் கம்பெனியில் போய்விட்டதை எடுத்துக் காட்டுவோரும் உண்டு. மற்ற மதஸ்தர்களோ தங்கள் மதத்திற்கு வா வா வென்று அழைக்கின்றனர். ஹிந்து தேவாலயங்களிலோ கோயிலுக்குள் வருவோரையும் பிடித்துத் தள்ளுகிறார்கள்! அதிலும் கோயில்களிலுள்ள நடமாடும் சில்லரைத் தேவதைகளின் அக்கிரமங்களோ சகிக்க முடியாதவை.

***

**நமது தீர்க்க தரிசியின் வைபவம்.**

அந்தந்தக் காலத்தில் தோன்றிய தீர்க்கதரிசிகள் கேவலம் மானிடச் சட்டையைத் தரித்திருந்த போதிலும் உண்மையில் அன்னோர் தேவ உருவினரே யாவர். கடவுளின் ஆசீர்வாத மில்லாவிடில் அவர்கள் செய்த காரியங்களும், மத ஸ்தாபனங்களும் பிற்காலத்தில் வியாபகமாய்ப் பரவியிராது. மானுட கோடிகள் உய்யுமாறு பகவானாலேயே அவர்கள் இவ்வுலகத்திற்கு அனுப்பப்பட்டோராவர். அத்தகையோரைப்பற்றிய ஜீவிய சரிதங்களில் பிற்காலத்தில் பல பொய்களும் கலந்து போயினமையின் சிறிது மயக்கத்திற்கும் இடனாகின்றது. நமது ஜீவியத்திலே நாம் நேருக்கு நேராகத் தரிசித்துக் கொண்டிருக்கும் தீர்க்கதரிசியானவர் இவ்வாறான பொய்க் கலப்புகள் பிற்காலத்தில் நேரக்கூடாதென்றே

தமது ஜீவிய சரித்திரத்தைத் தாமே எழுதி வெளியிட்டு வருகிறார். அவர் காலத்தில் நாம் உயிர் வாழ்ந்து வருவது மகா பாக்கியமாகும். அவரது ஆயுதம் கதரும், ராட்டினமுமாகும். அவற்றின் சக்தி தத்துவத்தை அவர் அறிந்திருப்பது போல் நாம் அறியாதது நமது மதிக் குறைவே யாகும். ஸமீபத்தில் ஸ்ரீ ரங்கத்தில் ஸ்ரீ ரங்கநாதருக்குக் கதர் ஆடை உடுத்தவும் ஒப்புக் கொண்டு விட்டனர். இந்தியாவிலுள்ள எல்லா ஆலயங்களிலும் இவ்வாறாகக் கதர் உடுப்பது என்பது வழக்கத்தில் வந்துவிட்டால் அவ்வாலயங்கட்குச் செல்லும் ஜனங்களும் கதர்மயமாகி விடுவர். கதருக்குக் கடவுளின் மகத்தான ஆசீர்வாதமா யுண்டு.

***

**விவாகத்தில் சீர்வரிசைகளின்வதூல்!**

சென்ற மார்ச்சு மாதத்தில் மகாத்மாவின் குமாரரான ஸ்ரீ மணிலால் காந்தி ஸ்ரீமதி ஸுசீலா என்ற பெண்மணியை மணந்தார். ஸுசீலாவுக்கு சித்திரம், சங்கீதம், நூல் நூற்றல் முதலியவற்றில் நல்ல தேர்ச்சியுண்டு. விவாக காலத்தில் கதர் மாலைகளும் புஸ்தகங்களும் தவிர வேறு எந்த சீர்வரிசைகளும் வழங்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. மகாத்மா ஒரு கீதை, ஒரு தியான நூல், தாம் நூற்ற நூலில் தயாரான இரண்டு ஜெப மணியையும் சீராக வழங்கினார். இதை நம்மவர்களும் பின்பற்றி விவாக காலத்தில் வெள்ளி சாமான்களும், ரூபாய்களுமாகக் கொடுப்பதை நிறுத்தி விட வேண்டும். அதற்குப் பதிலாகப் புஸ்தகங்கள் மதச் சார்பானதான பொருள்கள் வழங்கப்படவேண்டும். இவர்கள் என்ன கொடுத்தார்கள், அவர்கள் என்ன தந்தார்கள் என்ற கேள்விகள் வேண்டாம். அவர் தரவில்லை, இவர் தரவில்லை என்ற மனஸ்தாபங்களும் வேண்டாம். இந்த சீர் வரிசைகளுக்குப் பயந்து கொண்டு விவாகத்திற்கு வராமலேயிருந்து விட்டுப் பின்பு நான் 50-ரூபாய் கொடுத்துவிடுகிறேன் என்று கடிதம் எழுதிப் பிறகு கொடுக்காமலே போகவும் வேண்டாம். நாங்கள் செய்ததற்கு அவர்கள் ஒன்றுமே செய்யவில்லை யென்ற புகார்களும் வேண்டாம். எளியவர்களிடமிருந்து பல சீர்களும் வெள்ளிப் பாத்திரங்களும் பெற்றுக் கொண்டு, பிறகு அந்த எளியவர்களுக்கு நடக்கிற விவாகத்தில் ஒரு ரூபா ரவிக்கையை வைத்துவிட்டு நழுவிவிடுகிற பணக்காரர்களது மோசங்களும் வேண்டாம். காலமுழுதும் சீர் வரிசைகள் பெற்றுக்கொண்டு, அப்பால் அத்தனையும் செய்தவர்களுக்கு நாலணா சீட்டித் துணியை நீட்டுகிற வஞ்சனையும் வேண்டாம். தனது விவாகத்துக்கு மற்றவர் என்ன வெள்ளி சாமான் வைத்தாரோ அதைக் கடையில் தந்து வேறொன்றாக மாற்றி அதை அந்த மற்றவரது விவாகத்தில் சீராக வழங்கிவிடும் யுக்திகளும் வேண்டாம். ஒருவரின் விவாகத்தில் ஐந்து ரூபா சீராக வைத்துவிட்டு, அதைத் தமது குமாரன் விவாகத்துக்கு அவர்கள் திருப்பி வைக்கிறார்களாவென்று எதிர்ப்பார்க்கிற வியாபார சங்கதிகளும் வேண்டாம். நமது மகாத்மா நமக்குக் காட்டிய வழியைப் பின்பற்றக் கடவோம். நாம் ஒருவருக்குச் செய்துவிட்டு அதற்குப் பதில் எதிர்பார்க்கிற வியாபார நோக்கு இல்லாமலும் நடக்கக் கடவோம்.

***



**இந்திய ஆங்கிலரான ஸ்ரீ சக்லத்வாலாவின் தூஷணைகள்.**

ஸ்ரீ சக்லத்வாலா என்ற பார்லிமெண்டு மெம்பரொருவர் இந்தியாவுக்கு வந்தார். அவர் ஏதோ பிரமாதமாக இந்தியர்களுக்கு சாதித்து விடப்போவது போலவும், தூக்கிக் கொடுத்துவிடுவது போலவும் வழக்கம்போல எண்ணப்பட்டு விசேஷ வரவேற்புகளும் கூட்டங்களும் நடத்திக் கனத்த மகிமையை உண்டு பண்ணினர். வந்த மனுஷ்யர் அந்த மரியாதைகளுடன் கப்பலேறியிருந்தால் கௌரவமாயிருக்கும். இந்தச் சீமான் பிறப்பிலே இந்தியர்! இவர் மணந்தது ஒரு ஆங்கில ஸ்திரீயை! அவர் வாழ்வது ஆரவார இங்கிலாந்தில்! அந்த வைபோகத்திலுள்ளவருக்கு மகாத்மாவின் தவ நிலையும் ஸாந்தமும் சத்தியமும் அடக்கமான வாழ்வும் சகிக்கவில்லை. தேச மகாஜனங்கள் அவரைத் தங்களின் பூஜார்ஹமான பொருளாகக் கொண்டு துதிப்பதும் தாளக்கூடவில்லை. எனவே, அவரது கதரைப் பழித்தும், நூல் நூற்றலை நிந்தித்தும், அவர் மகாத்மா வென்று பெயர் ஏற்றுக் கொண்டாரென்று தூற்றியும் மிக்க கேவலமாகப் பத்திரிகைகளில் இந்த "வாலா" பெருமான் எழுதி விட்டார். இது கோபங் கொதித்து நெருப்பை எடுத்து எறிந்ததற்குச் சமமாம். எறிவதற்கு முன் எடுத்தவர் கையை நெருப்பு சுட்டுவிடும்! ஈசனையே பழிக்க ஜனங்கள் இருக்கும்போது இந்தச் செய்கை ஒரு வியப்பாகாது. சக்லத்வாலாவின் அறியாமைக்காக நாம் இரங்குகின்றோம்.

***

**நியூ இந்தியா.**

சென்னையின் ஆங்கிலத் தினசரியான "நியூ இந்தியா" பத்திரிகை ஆரம்ப காலத்தில் தேசியக் கிளர்ச்சியில் ஸம்பந்தப்பட்டுப் பிரபலமடைந்த போதிலும், பிறகு அதன் கொள்கை ஜனப்பிரியத்தை அநுசரியாமை காரணமாக அதன் வியாபகம் சுருங்கி, சென்ற மார்ச்சு மாதத்துடன் நின்றுவிட்டது. இனி அது வாரப்பதிப்பாக வெளி வருமாம். நியூ இந்தியாவின் முந்திய உருவமான "மதராஸ் ஸ்டாண்டர்டு" பத்திரிகையை ஐரோப்பிய மாதாரள் ஒருவர் நடத்திவந்தபோதிலும் ஆசிரியர்களெல்லாம் இந்தியர்களாகவே இருந்துவந்தனர். ஸ்ரீமான் ஜீ. பரமேஸ்வரம் பிள்ளை, ஸ்ரீ ஜீ. சுப்பிரமண்ய ஐயர், டாக்டர் நாயர் முதலியோரும் ஆசிரியராக இருந்து நடத்திய புகழ் வாய்ந்தது. அத்துடன் "சுதேசி" என்ற வாரம் இருமுறைத் தமிழ்ப் பதிப்பும் ஸ்ரீமான் ஏ. சங்கரலிங்கம் பிள்ளை, பி. ஏ. அவர்களை ஆசிரியராகக் கொண்டு மதராஸ் ஸ்டாண்டர்டின் ஆதரவில் 1905-ம் வருஷத்தில் வெளியிடப் பட்டது. "சுதேசி" வெகு உயர்தரமான பத்திரிகை. இங்ஙனமாக முன் பெயரான "மதராஸ் ஸ்டாண்டர்டு" என்ற நாமமும் பிரபலம் பெற்றதே. இத்தகைய பத்திரிகை வாரப் பதிப்பாவது வருந்தத்தக்கது.

***

**புரோஹிதர்களின் கிளிப்பிள்ளை பாடம்.**

காஞ்சீபுரத்தில் நடந்த அகில பாரத புரோஹித மகா சபையில் ஸ்ரீமான் சேஷகிரி தீக்ஷிதர் பின்வருமாறு பேசினார்:—

"புரோஹிதர்களிற் பெரும்பாலோர் இப்போது அநேகமாக சாஸ்திர ஞானமில்லாதவர்களாக இருக்கிறார்கள். அநேகர் சம்ஸ்காரங்கள் செய்விக்கும்போது சொல்லும் மந்திரங்களைக் கிளிப்பாட்

டுப்போலப் பாடுகிறார்களேயொழிய மந்திரார்த்தம் சிறிதேனும் தெரியாது. பூர்வாபர மந்திரங்களைக் கலந்து சொல்லி விடுகிறார்கள்"— என்று குறிப்பிட்டார். பிராமணப் புரோஹிதர்களின் சங்கதிதான் இவ்வாறெனில், பிராமணரல்லாதாரிற் றோன்றியுள்ள புரோஹிதர்களோ வெனில் அவர்களிலும் பெரும்பாலார் ஏதுமே அறியாதவர்கள். இவர்களை நம்பிச் சடங்குகளைச் செய்வதைவிட, வசனபாகமாய் விஷயங்களைச் சொல்லவைத்து நடத்துவது மேன்மை. பொருள் அறிந்து செய்வதாகவும் இருக்கும். இதன் பொருட்டு நவஸம்மிதை என்றொரு நூலை ஸ்ரீ கேசவ சந்திர சேனர் வெகு காலத்துக்கு முன்னரே வெளியிட்டுள்ளார். அதற்குத் தமிழ் மொழிபெயர்ப்பும் உண்டு.

---

கஸ்தூரி, குங்கமப்பூ, பச்சைக் கற்பூரம் முதலியன வாங்கி மாத்திரை செய்வதற்காக வென்று சொல்லி இரண்டு ரூபாய் பெற்றுச் சென்ற வைத்தியன் பம்பாயில் யந்திரத்தில் ஒரே அளவாய் உருட்டிய ஏதோ சில மாத்திரைகளைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு அதை இப்போதுதான் மேற்கண்ட சரக்குகளை வாங்கித் தயாரித்தது என்கிறான். இவன் மோசத்தை எடுத்துச் சொன்னால் இரு பக்கமும் தலையாட்டுகிற ராமன், அந்த-மோசம்-என்கிற வார்த்தையைச் செவியில் வாங்கிக் கொள்ளாமல்-எப்படியாவது குணம் ஆகவேண்டியதுதானே என்கிறான்! ஒரு குணமும் காணவில்லை, மாத்திரைகள் அவன் செய்ததுமல்ல என்றால், அதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல், 'உடனே குணம் ஆய்விடுமா?—பொறுத்துத்தான் பார்க்கவேண்டும்' என்கிறான். கதறிக்கொண்டிருக்கிற நிலையில் எவ்வளவு நாள் பொறுக்கிற தென்றால்—நிதானித்துத்தான் பார்க்கவேண்டு மென்று தலையாட்டி ராமன் சொல்லுகிறான். இப்படிப்பட்டவர்க ளிடம் வாய் கொடுப்பதைவிடக் குட்டிச் சுவரிடத்தில் முறையிடுவது மேல். இரண்டு பக்கமும் தலையாட்டுவதிலே தாங்கள் மகா சாமர்த்தியமாய் நடந்துகொள்வதாக நினைத்துக்கொண்டு கொக்கரிக்கிறார்கள். இதனால் இந்தத் தலையாட்டிகள் என்ன பெரிய மனுஷத் தன்மையை யடைந்துவிடுகிறார்களோ தெரியவில்லை.

### நுனிப் புல் மேயாதே

அங்கோன்றும் இங்கோன்றுமாக மேலுக்குப் பார்த்துவிட்டு "இருக்கிறது ஒரு மாதிரியாக"—என்று உன் உதவாத அபிப்பிராயத்தைக் கக்காதே. அது உன் விருத்திக்கு வழியாகாது. எதை எடுத்தாலும் முற்றிலும் வாசித்து அதிலுள்ள நல்ல விஷயங்களைக் கிரகிக்க சிரமப்படு. புஸ்தகத்தில் விஷயங்கள் இருந்து பயனில்லை. அவைகள் உன் நெஞ்சிலும் ஞாபகத்திலும் இருக்கும்படி பயிற்சிசெய். மருந்து புட்டிக்குள் இருந்து என்ன பிரயோஜனம். அது வயிற்றுக்குள் சென்றால் தான் அதன் குணம் தெரியும்.

# தேக தத்துவ சூக்ஷ்மங்கள்

## 1. ஆகார போஷணம்.

நமது சரீரத்திலுள்ள தாதுக்கள் எப்பொழுதும் ஜீர்ணமாகிக் கொண்டிருக்கிறபடியால், அந்த ஜீரணத்திற்குத் தகுந்தபடி போஷணை எப்பொழுதும் வேண்டியதாய் இருக்கின்றது. போஷணை இல்லாமலிருந்தால், சரீரம் இளைத்துக் கேவலஸ்திதிக்கு வந்து விடும்.

இரைப்பைக்குள் விழுகிற போஜன பதார்த்தங்கள் தேகத்தை எவ்விதமாய் போஷிக்கின்றன? நாள்தோறும் இரண்டு மூன்று தடவை சாப்பிடுகிற ஆகாரம், உறுப்புகள் எல்லாவற்றிலும் எவ்விதமாய் இடைவிடாமல் வியாபித்துப் போஷித்து சரீரத்தை ரக்ஷித்துக்கொண்டு வருகிறது?

சரீரத்தில் எந்த இடத்தில் குத்தினாலும், அல்லது அறுத்தாலும் இரத்தம் வருமென்று யாவருக்கும் தெரியும். ஆகிலும் அந்த இரத்தத்தில், நாம் காலையில் உண்ட பாயசம் பலகாரங்களின் சத்தும், மாலையில் உண்ட சாதம் கறிகாய் கிழங்குகளின் சத்தும் இருக்கிற தென்று பலருக்கும் தெரிந்திருக்கமாட்டாது. நாம் பக்ஷித்த பதார்த்தங்கள், நம்மைப் பேரஷணை செய்வதற்குமுன் இரத்த ரூபமாக வேண்டுவது அவசியம். அந்த இரத்தம் சிறிய குழல்களில் சர்வாங்கமும் வியாபித்துத் தாதுக்களைப் போஷித்துக் கொண்டே ஓடுகின்றது; அந்தக் குழல்களுக்கு இரத்த நரம்புகளென்று பேர்.



1-வது படம்.

நாடிகள், நாளங்கள் என இரண்டு வித இரத்த நரம்புகளுண்டு. மரம் கிளைகளை விடுவது போல், சரீர மத்தியிலிருக்கிற பெரு நாடியிலிருந்து கிளைகள் பிரிந்து, போகப் போகச் சிறுத்து, கடைசியில் கண்களுக்குத் தெரியாத அவ்வளவு சிறிதாகி, வலைபோல் பின்னிக் கொண்டு முடிகின்றன.

1-வது படம்:-இந்தப் படம் நாடி கிளைக்கிற விதத்தைக் காண்பிக்கின்றது. நமது புறங்கையைக் குறிப்பாய்ப் பார்த்தால் நாடிகளுடைய கிளைகள் அகப்படும். போஜன பதார்த்தங்கள் தெளிவான திரவரூபமாகி சிறிய நரம்புகளில் சுலபமாய் ஓடுகிற விதம் இன்னதென்று நமக்குக் கொஞ்சம் தெரிந்திருக்கவேண்டியது. நமது சரீரத்தை அறுத்துப் பார்வையிட்டால் மேல் கண்ட மாறுதலை உண்டாக்கும் இயந்திரங்கள் கண்களுக்கு அகப்படும்.

## 2-வது படம்

### உடலின் உட்புறம்.



1. இருதயம்.
2. இருதயத்தைச்சூழ்ந்து கொண்டிருக்கிற பை.
3. நுரை யீரல்.
4. இரைப்பை.
5. கல்லீரல்.
6. குடல்.

இந்தப் படம் மனித தேக உட்புறத்தைக் காண்பிக்கின்றது. இதில் ரூப வித்தியாச மடைந்த அவயவங்களைக் காணலாம். அவைகள் வித்தியாஸப் பட்டிருந்த போதிலும், ஒன்றுக் கொன்று உதவி செய்து கொண்டு ஒரே வேலையை நடப்பிக்கின்றன. அதாவது, நாம் உண்ணும் உணவை இரத்த மாக்கித் தேகத்தைப் போஷிப்பதேயாம்.

வாய், இரைப்பை, நுரையீரல் முதலியவைகள் உணவை இரத்தமாக்குகிற தொழிலில் எப்பொழுதும் ஒத்தாசை செய்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு அவயவத்துக்கும் ஒவ்வொரு தொழில் உண்டு. நமது குடும்பத்தில் சிலர் உழைக்க, பலர் வேலை செய்யாமல் சோம்பேறிகளாய் சோற்றுக்குப் பாரமாய் உட்கார்ந்துகொண்டு வெட்டிச் சோறு உண்டு காலத்தை வீணாக்கி வீட்டுக்குச் சுமையாக நிற்கிறார்களே; அப்படி வெறுமனே வேலை செய்யாமல் சும்மா இருக்கிற அவயவம் ஒன்று கூட நமது தேகத்தில் இல்லை.

முதலில், வாயானது எந்தப் பதார்த்தத்தையும் வாங்கிக்கொண்டு கஷ்டமில்லாமல் விழுங்கி, இரைப்பையில் ஜீரணமாகும்படி மிருதுவான களிபோல் செய்கின்றது. பற்கள், தாடையெலும்புகள், நாக்கு, உமிழ்நீர் ஆன இக்கருவிகளால் தான் இந்தக் காரியம் நிறைவேறுகின்றது.

(தொடரும்.)




### கர்ணன் :—

[அரந்தாங்கி தாலுகா கோலேந்திரம் போர்ட் எலிமெண்டரி ஸ்கூல் தலைமை உபாத்யாயர் ஸ்ரீமான் வி. ரத்தினம் எழுதியது. விலை அணா 1.]

சிறு குழந்தைகள் வாசித்து நல்லறிவு பெறும் வண்ணமாகப் பெரிய எழுத்துக்களில் நன்றாகச் சுருக்கி வரையப்பட்டுள்ளது. விவரமாகவும் தெளிவாகவும் உள்ளன. நமக்கு எது தெரியுமென்று எண்ணுகிறோமோ, அதைக் குழந்தைகள் அறியார் என்பதை நாம் நினைத்துப் பார்ப்பதில்லை. ஆகவே, அவர்கள் படித்தறிய வேண்டிய நூல்களில் இதுவும் ஒன்றென்று பெற்றோர் அறிய வேண்டும்.

***

### சிவசம்பவம் :—

[ஆசிரியர் ஸ்ரீமான் வி. கோவிந்தராவ். ஸரஸ்வதி பிரிண்டிங் ஒர்க்ஸ் திரிச்சி. விலை அணா 8.]

இது சிவாஜி மகாராஜாவின் பிறப்பை வர்ணித்தெழுதிய ஒரு தேசியத் தமிழ் நாடகம். தேச பக்தி ததும்பும் நடையில் அமைந்துள்ளது. வாசிப்பதற்கு மிக்க இனிமையாய் வீர ரஸத்துடன் இலங்குகின்றது. இக்காலத்துக் கேற்ற நூல்.

***

### மணிவாசகன் :—

[துப்பறியும் தமிழ் நாவல். மணப்பாறை மார்க்கம் மேலைச்சிவபுரி ஸ்ரீமான் திரு. சொ. பழனியப்ப செட்டியார் இயற்றியது. விலை ரூ. 1—4—0.]

பளபளப்பான காகிதத்தில் முத்துக்கள் போன்ற எழுத்துகளில் பதிப்பிக்கப்பட்டு மூன்று ஹாப்டோன் படங்களுடன் அமைந்துள்ளது. உயரிய நடை. ஆங்காங்கு தேசபக்தி ததும்பும் வாசகங்கள் நிறைந்துள்ளன. சிறந்த போதனைகளும் அடங்கியுள்ளன. சிறிய தந்தையின் கொடுமையே கதையின் குறிப்பாம். துப்பறிந்த பின் வெளியாக வேண்டிய விஷயத்தை ஆசிரியர் முன்னதாகவே தெரிவித்து விடும் பிழைகளை (பக்கம்-21) மறு பதிப்பில் திருத்துவாராக.

***

### ஆரியருக்கொரு வெடி குண்டு :—

["தாருல் இஸ்லாம்" ஆசிரியர் ஸ்ரீமான் பா. தாவுத்ஷா இயற்றியது, விலை அணா 12. தாருல் இஸ்லாம் புத்தகசாலை சென்னை.]

இது "சத்தியார்த்தப் பிரகாஸம்" என்ற நூலுக்கு மறுப்பு என்று அறிகிறோம். அந்த நூலைப் பார்த்திராத நாமும் இப்போது அதை வாசிக்கத் தூண்டுதல் செய்யப்படும் நிலையில் இவ் "வெடி குண்டு" அந்நூலுக்கு ஒரு சிறு விளம்பரம் போலுமாவதை நோக்க வியக்கின்றோம். ஒருவர் தம் சொந்த மதத்தை ஆராய்கிற பார்வைக்கும்,

அம்மதத்தைச் சேராத பிறரொருவர் ஆராய்கிற திருஷ்டிக்கும் பேதமுண்டு. மத ஸம்பந்தமான குண தோஷ பாகங்கள் அவரவர் ஆராய்கின்ற மனதின் தன்மையைப் பொறுத்து நிகழ்வது. பொதுவாக, தோஷாரோபணங்களால் எந்த மதத்தின் தத்துவமும் கரைப்படுத்தப்பட்டுப்போனதில்லை. அந்தந்த மதத்தின் விஸ்வாசிகள் எந்நான்றும் தம் மதக் கொள்கைகளைப் பயபக்தியுடனேயே ஏற்பர். ஒருவர் மீதொருவர் தோஷம் கூறிக்கொள்ளும் வகையில் மறுப்பு நூல்கள் தோன்றினும் தோன்றாவிடினும் இருசார்பினரது மதங்களின் பூர்வ கௌரவம் அதநற்து எப்போதும் உண்டு.

---

*காலஞ்சென்ற ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி அவர்களின் வாக்கு:— "எனக்கு எல்லாக் காரியத்திலும் என் தாயே முதன்மையானவள். நான் அவளுக்கு ஒரே குழந்தையும் பாலகனுமா யிருக்கும்போது கைமையாகினள். எனக்கென்றேதான் நாளெல்லாம் கைமையாகக் கிடந்து என்னையே தன் உலக ஆஸ்தியாக மதித்துப் போற்றினள். தனது ஸகோதர ரொருவரால் உதவிபெற்று எனக்காக ஸகல கஷ்டமு மனுபவித்தனள். என் தாய் படிப்பறியாதவ ளாயினும் புத்திசாலி. என்னைக் கடிவாளமிட்டு நடத்தியதில், என்னைச் சூழ்ந்திருந்த பற்பல தீமைகளி னின்றெல்லாம் ரட்சிக்கப்பட்டேன். நான் படித்துப் பெரிய மனிதனெனப் பேரெடுக்க வைத்தனள்." பார்த்தீர்களா, தாதாபாயின் தாயாரது தொழிலை! இத்தொழிலையே தாய்மாராக உள்ளவர்களெல்லாம பின்பற்றின் தம்மக்கள் தாதாபாயைப் போலக் கிழச் சிங்கம் எனப் பெயரெடுக்காவிடினும் குட்டிச் சிங்கங்கள் என்றாவது பெயரெடுக்காதா?*

## புதிய நகை

பழய நகை பாங்கியில் கடனில் இருக்க, அதைத் திருப்பாமல் கையில் வந்த பணத்திற்குப் புது நகை செய்யப்போவது மௌடீகம். பழய நகையைத் திருப்பி அதைக் கொண்டு புது நகை செய்துகொள். கடனும் தீர்ந்தது போலாகும். பிறகு ஒரு காலம் கிடைக்கும், பணத்தைக் கொண்டு பழய நகையின் மாதிரியில் ஒன்று செய்து கொள்ளலாம். கூலிதான் நஷ்டம், நகை பாங்கியில் இருந்தால் அதன் வட்டி இந்த நஷ்டக் கூலியைவிட உயர்ந்துவிடுமென்பதை யோசி.

# பிரபஞ்சதரிசனம்



மாநுட வடிவந் தாங்கிய முப்பது கோடிப் பிராணிகளான இந்நாட்டினர்—பல்லாயிரம் ஆண்டுகளாக சுயஜாதியர், பிறஜாதியர், சுயமதஸ்தர், பிறமதஸ்தர் ஆகிய இவர்களின் காலின் கீழ் அகப்பட்டு அடிபட்டு மிதியுண்டு நசுங்கிய நிர்ஜீவப்பதர்கள்; அடிமைகளைப்போல் எவ்வித கஷ்டங்களையும் முணுமுணுப் பின்றிப் பொறுத்து வரும் பேதைகள்; அடிமைகளைப் போலவே ஊக்கங் குன்றியவர்; உழைப்பற்றவர்; பெரிய நோக்கில்லாதவர்; இனியேனும் நல்ல ஸ்திதிக்கு வரவேண்டுமென்னும் விருப்பமுமற்றவர்; எவ்வித உபாயத்திலாகிலும் தற்சமயம் பிராணனைக் காப்பாற்றிக் கொள்ளத் தக்க ஜீவனோபாயம் கிடைத்தாற் போதுமென்று கருதும் அற்ப சந்தோஷிகள்; அடிமைகளுக் குரிய பொறுமைக் குணத்தினர்; தம்மவர் உயர்ந்த ஸ்திதியி லிருப்பதைக் கண்டு சகியாதவர்; இனி மேலான நிலைமைக்கு வருகிற வழி ஒன்றும் காணாது நிராசை கொண்டவர்களைப் போல் சிரத்தையற்றவர்; குள்ள நரிபோல் அற்ப குணமுள்ள சாதுர்யத்தால் பிறரை வஞ்சிக்குந் தொழிலையே தமக்கு சகாயமாகக் கொண்டவர்; பொருளீட்டுவதையே பரம புருஷார்த்தமெனக் கருதியவர்; பலிஷ்டர்களின் காலடியை நக்குவோர்; தம்மிலும் மெலிந்தவருக்கு எமஸ்வரூபமாயிருப்பவர்; வலி குன்றியவர்; ஒளியிழந்தவர்; அற்பர்களைப்போல் பயங்கர தேவதைகளையும், பிசாசுகளையும் பூஜிக்கும் மூடபக்தியினர்; நல்லொழுக்கமென்னும் முதுகெலும்பற்றவர்; துர்க்கந்தம் வீசும் அழுகிய ஸவத்தில் ஊர்ந்து கொண் டிருக்கும் புழுக்களைப்போல் பரத கண்டத்தின் சரீரத்தில் எங்கும் வியாபித்தவர்— இதுவே இங்கிலீஷ் உத்தியோகஸ்தர் நம்மைப் பற்றிக் கொள்ளும் அபிப்பிராயம்.

ஸ்வாமி விவேகாநந்தர்.

***

1857-ம் வருஷத்திய சிப்பாய்க் கலகத்தின்போது, கலகத்தின் முடிவு இத்தன்மையதென்று தெரியாதிருக்கையில், சுதேச மன்னரில் ஒருவராகிய ஹோல்கார் தமது சோதிட சாஸ்திரியைக் குறி கேட்டார். அந்த சாஸ்திரி "ஐரோப்பியருள் ஒருவன் தவிர மற்றெல்லோருமே சங்கரிக்கப் பட்டாலும், அவ்வொருவன் இங்கிருந்து சண்டை செய்து மீளவும் தேசத்தைக் கட்டிக் கொள்வான்" என்றாராம்.

***

இந்தியாவின் வயிரக்கற்கள் உலகத்தின் மற்ற இடங்களில் இருப்பவைகளைக்காட்டிலும் ஒளிவீசுவதில் மிகச் சிறந்தவைகள் என்பதில் சந்தேகமில்லை. இந்தியாவில் மொகலாய அரசர் ஆளுங்காலமாகிய

1658-ம் வருஷத்தில் ஔரங்கஜீபு தன் தந்தை ஷாஜிஹானைச் சிங்காதனத்தினின்றும் நீக்கிவிட்டுத் தான் அரசாட்சியைக் கைக் கொண்ட போது ஒரு நூதன எண்ணமுடையவனாய், சிங்காதனத்தின் மேல் சக்ரவர்த்தி உட்கார்ந்து கொண்டிருக்கையில் ஒரு மயில் தன் சிறகுகளை விரித்து நிழல் கொடுத்துக் கொண்டு இருக்கும் பாவனையாக அவ்வவ்விடத்திற்குத் தக்கதாய் விலையுயர்ந்த நவமணிகள் இழைத்து "டாக்டெடென்ஸ்" என்று பேர் பெற்ற மயூர சிங்காதனம் ஒன்று அமைக்கும்படி கட்டளை யிட்டான். அந்தப் பறவைக்குள்ள இயற்கையான வர்ணங்களைக் காட்டக் கீழ்த்திசை நாடுகளில் மிக்க அபூர்வமாயும் சிறந்தவைகளாயும் ஆராய்ந்தெடுத்த கற்கள் பதிக்கப்பெற்றன. பிரசித்தியாகச் சொல்லிக் கொள்ளும் 'ஒளி மலை' என்று அர்த்தமுள்ள "கோஹினூர்" என்பதும், "ஸனுய் மலை" என்று அர்த்தங் கொண்ட "கோஹினூர்" என்பதும் ஆக இரண்டு மேலான வயிரங்கள் கண்களுக்குப் பதிலாய் அமைக்கப்பட்டன. இவ்வாறு அழகாய் உரு அமைக்கக் கட்டளையிட்ட அரசன் தனக்கு "சிங்காதன பூஷணம்" என்று அர்த்தம் கொள்ளும் ஔரங்கஜீபு எனப் புதுப்பெயர் ஒன்றும் வைத்துக் கொண்டான். அவன் 87-வது வயது வரையில் இந்த சிங்காதனத்திலிருந்து அரசு செலுத்தியதாகக் காணப்படுகிறது.

***

அவனுக்குப் பின் வந்த அநேக அரசர்களுடைய ஆளுகைக்குப் பிறகு அந்த மயூர சிங்காதனம் பிரிக்கப்பட்டு மகிமை குன்றிக் கற்கள் பலவகைகளில் சிதறிப் போயின. நாதர்ஷா எனும் பாரசீகத்தரசன் படை யெடுத்து வந்து டில்லியைப் பிடித்துக் கொண்டு மயூர சிங்காதனத்தின் ரத்தினங்களைப் பறித்துக் கொண்டபோது "கோஹினூர்" எனும் வயிரம் காணப்படவில்லை. அதைக் கண்டு பிடிக்க அவன் செய்த பிரயத்தனங்களெல்லாம் வீணாய்ப் போயின. கடைசியில் அந்தப்புரத்திலிருந்த ஒரு ஸ்திரீ, தோல்வியடைந்த சக்ரவர்த்தி தரித்துக் கொள்ளுகிற தலைப் பாகைக்குள் மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறாரென்று, நாதர்ஷாவுடன் சொல்லி இரகசியத்தை வெளியிட்டாள். விலை மதிக்கக் கூடாத அந்த வைரக்கல்லை யடைவதற்காக நாதர்ஷா சாதுரியமான தந்திரம் ஒன்று செய்யவேண்டியதாயிற்று.

***

டில்லியின் பெருத்த பொக்கிஷங்களை யெல்லாம் நாதர்ஷா கைக்கொண்டு சிங்காதன மிழந்த மொகலாய சக்ரவர்த்தியினிடத்தில் உடன்படிக்கை செய்து விட்டபடியால் விரோதம் செய்து கொள்ளக் கூடாமையா யிருந்தது. ஆகையால் சமாதானமான சில நாள் கழித்து டில்லியில் நடந்த ஒரு பெரிய தர்பாரில் நாதர்ஷா தனக்கும் சக்கரவர்த்திக்கும் உண்டாயிருக்கும் விசுவாசத்திற்கு அடையாளமாக இருவரும் தலைப்பாகையை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று சக்ரவர்த்தியுடன் சொன்னான். சமான அந்தஸ்துள்ள அரசர்கள் இராஜ்ஜிய விஷயமாய்க் கூடின சபைகளில் இந்த ஏற்பாட்டைத் தப்பாமல் அனுசரித்து வருவது வெகு காலமாய் வழக்கம். நாதர்ஷா திடீரென்று சொன்ன இதைக்கேட்டு சக்ரவர்த்தி பிரமித்துப் போய், யோசித்துத் தகுந்த யுக்தி செய்வதற்குச் சாவகாசம் இல்லாமல், நயவஞ்சனையாய்ச்



சொன்ன அபிப்பிராயத்துக்கு உட்படவேண்டியதயிற்று. நாதர்ஷாவின் பாகை வயிரங்கள் பதிக்கப்பட்டுப் பளபள வென்று பிரகாசித்தபோதிலும், அது வெறும் ஆட்டுத்தோலினால் தலையை மறைக்கச் செய்து ஒரு தந்திரமாக இருந்தது. சக்ரவர்த்தி யாதொரு திகிலும் விசாரமுமுள்ளவனாகக் காட்டவே யில்லை. "முற்றும் நனைந்தவர்க்கு ஈரம் இல்லை" என்றபடி அந்த நிமிஷமே கோஹினூர் ஆசையை மறந்துவிட்டான். ஆகவே, அவனுடைய முகத்திலும் பாவனையிலும் யாதொரு வித்தியாஸமும் தோன்றாமையால் நாதர்ஷா தான்செய்த உபாயம் நிஷ்பலனானதாகவும், தான் மோசம் போனதாகவும் நினைக்கும்படியாயிற்று. பிறகு தன் கூடாரத்துக்குப் போய்ச் சக்ரவர்த்தியின் தலையணியைப் பிரித்துப் பார்த்து, தான் ஆசைப்பட்ட பளபளப்புள்ள அந்த வைரத்தைக் கண்டு சந்தோஷத்தால் "கோஹினூர்" என்று உரத்துச் சொன்னான். ஆயினும் என்ன, அவன் சாகும்பொழுது கோஹினூரைக் கூடக் கொண்டுபோகவில்லை. இவ்வுலகத்தில் விட்டே சென்றான்.

***

1849-ம் வருஷத்தில் பஞ்சாப் நாட்டை இங்கிலீஷ் ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டபோது லாகூர் துரைத்தனத்தார் இங்கிலீஷ்காருக்குக் கொடுக்கவேண்டிய கடனில் ஒரு பாகத்திற்காக லாகூரின் பொக்கிஷத்தைக் கைப்பற்றுகையில், கோஹினூர் என்னும் வயிரத்தை இங்கிலாந்து தேசத்து மகாராணிக்கு வெகுமதியாகக் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது அதன் சரித்திர சம்பந்தமாய் நேர்ந்தவைகளி லெல்லாம் கடைசியும், அதிக விந்தையுமான ஒரு சங்கதி நடந்தது. ஈஸ்டு இந்தியா கம்பெனி என்னும் சங்கத்தார் அந்த விலையில்லா வயிரத்தைப் பஞ்சாப் நாட்டைக் கட்டிக் காக்கும்படி நியமித்திருந்த பிரக்யாதிபெற்ற லாரென்ஸ் பிரபு வசத்தில் ஒப்புவித்தார்கள். அதை அவர் பெற்றுக்கொண்டு தன் அரைச் சட்டையிலிருந்த சாக்கில் வைத்துவிட்டு அதைப்பற்றிப் பிறகு ஞாபகமேயில்லாம லிருந்துவிட்டார். பிறகு வீட்டுக்குச் சென்றவர் தான் ஒரு விருந்துக்குப் போகவேண்டி யிருந்தமையால் வேறு உடுப்பு தரித்துக் கொண்டு முன்பு அணிந்திருந்த அரைச் சட்டையைக் கழற்றிப் பக்கத்தில் எறிந்துவிட்டார். சிறிது காலம் கழித்து மகாராணியிடமிருந்து கோஹினூர் என்னும் வயிரத்தை உடனே அனுப்பும்படி கவர்னர் ஜெனரலாயிருந்த டால்ஹௌஸி பிரபுவுக்கு உத்தரவு வந்தது. அப்போது லாரென்ஸ் தன் ஸகோதரராகிய ஹென்றி லாரென்ஸைப் பார்த்து அதை அனுப்பிவிடும்படி சொன்னார். இந்த ஹென்றி இந்தியாவை ஜெயிக்கச் செய்த சண்டைகளில் ஆயுதம் பிடித்துத் தானும் போர் புரிந்து மகிமை பெற்ற சேனாதிபதி. ஜான் லாரென்ஸ் சொல்லக் கேட்டதும் ஹென்றியானவர் — "வயிரக்கல் தங்களிடத்தில் இருக்க நான் எப்படி அனுப்பக் கூடும்" என்றார். லாரென்ஸ் திடுக்கிட்டுத் தன் அஜாக்கிரதையைப் பற்றி வெறுத்துக் கொண்டு திகைத்து மனம் கலங்கி நின்றார். ஆயினும் அந்த வயிரம் அந்த அரைச் சட்டைப்பைக்குள்ளேயே இருந் [illegible] போல் [illegible] எடுத் [illegible] ஆச்சரியப்பட்

119824

டார். அது பிறகு மகாராணியாருக்கு அனுப்பப்பட்டு அவரது கிரீடத்தில் வைக்கப்பட்டது. இப்பொழுது அந்த கோஹினூர் நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியவர்களின் கிரீடத்தில் ஜ்வலித்துக்கொண்டிருக்கின்றது. அதைப்போல் அமைந்த உருவத்தை லண்டன் நகரத்துக் கோட்டையிலுள்ள ஆபரணச் சாலையில் காட்சிக்காக வைத்துள்ளார். இந்தியாவைவிட்டுச் சென்ற எண்ணிக்கையில்லாத விலைமதிப்பேறப் பெற்ற பொருள்களுள் இந்தக் கோஹினூரும் ஒன்று. இந்தியர்களைக் கேவலப்படுத்தினாலும் அவர்களின் நாட்டு வஸ்துக்களை நாளைக்கும் கேவலப்படுத்த முடியாது.

---

சில பிசாசுகளுக்கு ஏதேனும் ஒரு ஆகாரம் கொடாவிட்டால் தங்களை வசியப்படுத்திய எஜமானனையே கொல்லத் தொடங்கும். வயிற்றுக்குள்ளிருக்கும் தீனிப் பைக்குப் பசி வேளையில் உணவு கொடாவிட்டால் அது சரீரத்தையே பக்ஷியம் செய்யும். அதைப்போல மனதுக்குத் தகுந்த வேலை கொடாவிட்டால் அது நம்மையே கெடுத்துவிடும். ஒரு வேலையும் செய்யாமல் சும்மா இருப்பவனுக்கு சுகம் கிடையாது. அவனுக்கும் பைத்தியக்காரனுக்கும் பேதம் இராது. ஆகையால் கர்மத்தைச் செய்துகொண்டே இருக்கவேண்டும். அப்படிப்பட்ட கர்மம் நற்கருமமாயிருந்தால் அதனால் வரும் பலனும் நன்மையா யிருக்கும்.

## உன்னைச் சுற்றி நிற்பவரை நம்பாதே!

கோஹினூரின் கதையைப் படித்தாயா? என்ன தெரிந்து கொண்டாய்? சக்ரவர்த்தி மிகப் பரிதாபமாய் அந்தக் கோஹினூரை நாதர்ஷாவிடம் தொலைத்துத் திரும்படி எப்படி நேர்ந்தது? சக்ரவர்த்தியைச் சுற்றிக்கொண்டிருந்த அல்லது அவர் பக்கத்திலிருந்து பார்த்திருந்த ஒரு ஸ்திரீ நாதர்ஷாவுக்கு அந்த இரகசியத்தைச் சொன்னதினா லல்லவா? அதுபோலவே, இன்றைக்கு உனக்கு மிகவும் வேண்டியவர்களாய் உன் பக்கத்தில் இருப்பவர்களே நாளைக்கு உன் பொருளுக்கு அழிவு வரும்படி காட்டிக் கொடுத்துவிடக்கூடிய துரோகிகளாவார்கள். ஆதலின், எதையும் பிறர் அறியும்படி செய்யாதே. கூடிக் குலாவிப் பிறகு குடி கெடுத்தவர்களின் சங்கதிதான் உலகில் அதிகம். லாரென்ஸ் தான் மறந்துவிட்ட கோஹினூரை மறுபடியும் சந்தோஷமாய் எடுத்துக் கொள்ளும்படி செய்தது எது? அவர் அதை அரைச் சட்டைக்குள் வைத்ததை எவரும் அறியாத இரகசியமே அதைத் திரும்பவும் பெறுமாறு வைத்தது. ஆதலின் இதிலிருந்தும் நீ கற்றுக்கொள்ளுகிற பாடம் என்ன? சத்துருக்கள் எப்படித் தயாராகிறார்கள் தெரியுமா? முதலில் மித்துருவா யிருந்துதான்! உறவுக்குப் பிறகே பகை!!




## புது வருடப் பிரதிக்ஞைகள்

---

புது வருஷம் ஆரம்பிக்கும்போதெல்லாம் புதிதாய் ஏதாவது



ஒரு நல்ல காரியம் செய்து முடிக்க வேண்டுமென்கிற நல்ல பிரதிக்ஞை கொள்வது மிக்க நலமென்று பல சிறுவர்கள் நினைப்பதுண்டு. நாம் புதிய புஸ்தகம் படித்து நல்வழியில் நடக்கப் போகிறோமல்லவா என்று அவர்கள் சொல்வார்கள். ஆயினும் அவ்வாறு ஒரு நல்ல தீர்மானம் கொண்டால் அவ்வளவுடனே தாங்கள் ஸகல காரியத்தையும் ஸாதித்து விட்டதாக அநேகர் எண்ணுகிறார்கள். முதலில் ஒரு பிரதிக்ஞை செய்து கொள்வது வேறு; பிறகு அந்தப் பிரதிக்ஞையை நிறைவேற்றுவது வேறு. கதர் உடுத்திக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருப்பதிலும், அதற்காகப் பிரதிக்ஞை செய்து கொள்வதிலும் காரியம் முடிவு பெற்றதாகிவிடுமோ? கதர் தரித்துக்கொண்ட பின்புதான் அந்தக் காரியத்தை நிறைவேற்றியபடியாகும். சொல்லினை உடனே செய்கையில் உணர்த்த வேண்டும். புதுப் புஸ்தகத்தினை வாசித்து அதிலுள்ள விஷயங்களைத் தெரிந்து கொள்ளாமல் அழகாய்ப் புஸ்தகத்தைக் கையில் எடுத்து வைத்துக்கொண் டிருப்பதில் ஏதாவது நன்மை உண்டோ? முதலில் நாம் ஒரு தீர்மானம் செய்து பின்பு அதை நிறைவேற்றாமல் விடுவதை விட, ஆரம்பத்திலேயே அவ்வித தீர்மான மொன்றை நாம் செய்யாமலிருப்பது மேல். ஒரு பிரதிக்ஞையானது பிறகு நிறைவேறினாலும் நிறைவேறாமற் போனாலும், முதலில் ஒரு நல்ல பிரதிக்ஞை செய்துகொண்டே புது வருஷம் ஆரம்பிக்க வேண்டு மென்று கருதுகிறவர்கள் அதனால் என்ன பயன்பெறக் காத்திருக்கிறார்களோ?

***

தினந்தோறும் காலையில் மிகவும் சோம்பலாய் எழுந்து பிறகு பகல் முற்றும் தூங்கும் தீய வழக்கமுள்ள ஒருவன் புது வருஷம்

ஆரம்பித்தபோது தன் நண்பனைப் பார்த்து, 'நேசா! நான் இந்த வருஷ முதல் மிகவும் சுறுசுறுப்புடன் சிற்றஞ்சிறுகாலையெழுந்து என் வேலைகளை வெகு நன்றாயும் ஊக்கத்துடனும் நடத்தத் தீர்மானித்திருக்கிறேன்; என் பழய துர்க்குணங்களையெல்லாம் ஒழித்து இப்புதுவருட முதல் ஸத்தியவந்தனாக நடந்துகொள்ளுவதென்று சபதம் செய்துகொண்டிருக்கிறேன்' என்று சொல்லி அவ்வளவோடு திருப்தியடைந்தான். அவ்வாறாக ஒரு நாளேனும் பின்னர் நடத்தினானோ?—இல்லை. மறுநாட் காலை முதல் முன்னிலும் நாலு நாழிகை அதிகமாகவே தூங்க ஆரம்பித்தான். அவனது பழய குணங்களும் முன் போலவேதான் அவனிடம் நிலைத்துக் காணப்பட்டன. அவன் திருந்தியவனாகவே ஒருபோதும் மாறவில்லை. புது உருவமும் பெறவில்லை. அவன் பிரதிக்கினை செய்துகொண்டதில் பயனென்ன?

***

இவ்வாறெல்லாம் நேரிடுவதற்குக் காரண மென்னவெனில், நாம் இப்போது ஆரம்பிக்கிற காரியம் செம்மையாய் முடியுமா, முடியாதா வென்பதை நன்றாய்க் கருத்துடனே ஆலோசித்துப் பாராமல் திடீரென்று ஒரு பிரதிக்கினை செய்வதனால்தான் இப்படியாகிவிடுகின்றது. இக்காரியம் நம்மால் செய்து முடிக்கக்கூடும் என்று நம்முடைய மனதுக்குத் தைரியமாய்த் தோன்றினாலொழிய, அந்த சமயத்துக்குச் சுலபமாய் நமக்குக் காணப்படினும், அதனை நிறைவேற்றும் சக்தி நமக்கு இருந்தாலொழிய—நாம் எதனையும் உறுதியற்ற நிலையில் தீர்மானிப்பது தகுதியன்று.

***

புது வருஷத்தைத் தொடங்கவேண்டிய விதம் எவ்வாறென்று தெரியுமா? நாம் இவ்வளவு காலத்தையும் நல்ல வழியில் செலுத்தாமலே வீணாய்க் கழித்து விட்டோமே, நமது மனதோ மிகவும் கெட்டதாயிருக்கிறது; நமக்கு வசப்படாமலும் இருக்கிறது; அதினுடைய தீய தன்மை இன்னும் நம்மைக் கெடுவழியான முள் பாதையிலேயே செலுத்தக் காத்திருக்கிறது; நாம் எச்சரிக்கையின்றிச் சற்றேனும் ஏமாறுவோமானால் அது நம்மைப் படுகுழியிலே தள்ளிவிடும்; ஆதலால் கடவுள் நம்மை இவ்வுலகத்தில் பிறப்பித்தது, நாம் நற்காரியங்களைச் செய்து நாளுக்கு நாள் நல்வழியில் விருத்தியடைந்து அவருடைய பொற்றாமரை யடியைப் பெறுவதற்காகவேயென்பதை நினைத்து, அதற்கு வேண்டிய நற்செய்கைகளைச் செய்யத் தீர்மானித்து அதை அவ்வாறே நிறைவேற்ற வேண்டும்.

***

இவ்வளவு காரியமும் நம்முடைய முயற்சியாலேயே செய்து முடியுமா? நாம் எக்காரியம் செய்ய ஆரம்பித்தாலும் நம்முடைய



மதிக்குறைவால் அதற்கு வேண்டிய மனவுறுதி தவறிப்போவது மாத்திரமன்றி, இன்னும் பல இடையூறுகளும் மத்தியில் ஸம்பவிக்குமாதலின், அவை யொன்றும் நேரவொட்டாமல் நாம் செம்மையாய் விருத்தியடையும் பொருட்டுக் கடவுளை நாள்தோறும் தொழுது வணங்கி, நம்முடைய நல்லெண்ணங்களும் நற்செய்கைகளும் மேன்மேலும் அதிகரிக்குமாறு அவரைப் பிரார்த்திக்கக் கடவோம். இங்ஙனமாகப் பகவானைத் துதித்து ஈசுவர பக்தியுடனே மனவுறுதியோடும் புது வருஷத்தைத் துவக்குவோமாகில், நன்மை தீமைகளை நன்றாய்ப் பகுத்தறிந்து எல்லாப் பாக்கியங்களையும் அடைய வல்லவர்களாவோம். அப்பொழுது நமது புது வருடப் பிரதிக்கினைகளையும் சுலபமாக நிறைவேற்றிவிடலாம்.

---

"கதர் அபிவிர்த்தி காரணமாக, பிரிட்டிஷாரால் இந்நாட்டுப் பொருள்களைச் சுறண்டிக் கொண்டு போவது குறையும். அப்போது பிரிட்டனோடு இந்நாட்டுக்குள்ள சம்பந்தம் பரிசுத்தமாகும். இதனால் தான் நான் கதர் ஸ்வராஜ்யம் அளிக்கு மென்று கூறுவது." (மகாத்மா.)

"தாங்கள் கண்டவர்களை யெல்லாம் வீட்டுக்கு அழைத்து வருகிறீர்கள். அவர்களுக்கெல்லாம் நான் அடிமை மாதிரி உழைத்துக் கொட்ட வேண்டியிருக்கிறது." (மகாத்மாவை நோக்கி அவரது பத்தினியார்.)

"பலமுறை நாங்கள் ஆசைகளுக்கு ஆளாகாமல் தப்பி வந்திருக்கிறோம்." (மகாத்மா.)

"பொதுஜன ஊழியர்கள் வெகுமானங்களை ஏற்றுக் கொள்ளக் கூடாதென்ற முடிவுக்கு நான் வந்திருக்கிறேன்." (மகாத்மா.)

"நாளை நமக்கு என்ன நிகழப் போகிறதென்பது யாருக்குத் தெரியும்?" (மகாத்மாவின் மனைவியார்.)

"எனது ஸபர்மதி ஆசிரமத்தில் எனது இஷ்டம் சட்டமாக இருக்கிறது. அங்கு (என்னை) மகாத்மா என்று அழைப்பது குற்றமாகவே பாவிக்கப்படுகிறது." (மகாத்மா.)

## திறவுகோல்.

சிறுவர்களே! மோக்ஷமென்னும் கதவைத் திறப்பதற்கும், இந்தியா மாதாவின் அடிமைத் தொழிலை நீக்கி அதற்குச் சுயாதீனத்தைக் கொடுப்பதற்கும், உதவும்படியான திறவுகோல் உங்களிடத்தில் இருக்கிறது. மாணாக்கர்களே! கண்விழித்துப் பாருங்கள். அடிமை என்னும் பூட்டை உடையுங்கள். பாரத வருஷம் கட்டுண்டிருக்கும் சங்கிலிகளை அறுத்துவிடுங்கள். எழுந்திருங்கள்! நானும் ஊக்கத்தோடு உங்களுடன் இருந்து ஒத்துழைத்து வருகிறேன். நாம் அனைவரும் சேர்ந்து இந்திய மாதாவின் அடிமைத்தனத்தை ஒழித்து விடுவோமாக.

ஸரோஜினி தேவி.

# பழமொழிக் குறிப்புகள்

## 1. அன்பு

(முதல் கமலம் 603-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 44. அன்பிருந்தால் ஆகாததும் ஆகும்.

அன்பின் துணையால் ஆகாததே ஆகும்போது, ஆகக்கூடிய விஷயம் வெகு சுலபத்தில் நிறைவேறிவிடக் கேட்பானேன்? ஆனால், வாய்ச் சொற்கள் மூலமாகவும், கடித எழுத்துகள் வழியாகவும் புலப்படுத்திக் கொள்ளுகிற அன்பானது உண்மையாகவே ஹிருதயத்தின் ஆழத்திலிருந்து எழுந்ததா யிருந்தால்தான் ஆகக்கூடாத காரியமும் ஆகவைக்கும்படி செய்துவிட முடியும். அவ்வாறு இல்லாமல் வாய் உபசார அன்பில் நின்று, உதட்டு உறவு கொண்டு, ஏதோ அவர்கள் நம்மீது பிரியமா யிருக்கிறதுக்குத் தகுந்தபடி நாமும் அப்படியிருப்பதாகக் காண்பித்துக் கொண்டுபோய் விடுவோமென்று எண்ணி அன்பு காட்டுவதாயிருப்பின், அது அடியிலே வேர் கொள்ளாத வெளி அன்பானதால் ஆகக்கூடிய காரியத்தைக்கூட சிரத்தையோடு முடிப்பதற்கு மனம் வாராதபடி செய்துவிடும். 'சட்டி சுட்டது, கை விட்டது' என்றபடி உள்ளே பற்றுதலும் பிடிப்பும் இல்லாதபடி செய்து வெளிக்குமட்டும் ஒப்புக்குத் தானம்போட வைத்துவிடும். நமக்கு என் இந்தத் தொல்லை, எப்படியாவது போகிறார்கள், நாம் என் இதில் சம்பந்தப் பட்டுக்கொள்ள வேண்டும்; சம்பந்தப்பட்டுக்கொண்டு நல்ல பேரும் வேண்டாம், கெட்ட பேரும் வேண்டாம், நாம் எதற்கும் தூர ஒதுங்கி யிருந்துகொள்வதே நல்லது; ஏதோ அன்பு காட்டப் போனால், அந்த அன்பை எண்ணிக் கொண்டு அவர்கள் சம்பந்தம் கொண்டாட வருகிறார்கள்; நமது குமாரனுக்கு அவர்கள் தங்கள் பெண்ணைத் தருகிறார்களாம், நம்முடைய அந்தஸ்தென்ன, அவர்களின் பிச்சைக் குடிசை வாழ்க்கை என்ன? ஒன்றுக்கொன்று எவ்வளவு தூரம், எவ்வளவு பேதம்; இருந்திருந்து அந்த இடத்துச் சம்பந்தமா நமக்கு வரவேண்டும்; எவ்வளவோ நல்ல இடமெல்லாம் நமக்காகத் தருவதற்குக் காத்துக்கொண்டு கிடக்க, இந்தத் தரித்திரக் குப்பையிலா நாம் கை நனைக்கவேண்டும், அதை எல்லாம் நாம் வாய்விட்டுச் சொல்லி எதற்காகக் கெட்ட பேர் பெற வேண்டும், நமக்கு அந்த சம்பந்தத்தில் பிரியமில்லை யென்பதைக்கூட வெளியில் ஏன் காட்டிக்கொள்ள வேண்டும்; அவருக்குப் பிரியமில்லை யென்று அவர் மேலே எல்லாப் பழியும் போட்டுவிட்டு நாம் வெகு நல்லவளாகவும், சம்பந்தம் செய்து கொள்ள எவ்வளவோ பிரியமிருந்தும், நமது கணவனார் ஒப்பாரானதால் அதற்காகவே கலங்குவது போலவும் காட்டிவிட்டு அதற்காக இரண்டு சொட்டுக் கண்ணீரும் விட்டுவிட்டு ஒதுங்கிக் கொண்டால் நம்மீது எந்தப் பழி பாவமும் வராது என்ற இவ்வளவு விஸ்தார யோசனைகளை நெஞ்சுக்குள்ளேயே செய்துகொண்டு, வெளிக்கு வெகு பாசமும் பசப்புமாக, "அண்ணா! உங்கள் சம்பந்தம் வேண்டா மென்பார்களா, உங்கள் பெண் எங்களுக்குக் கிடைப்பதென்ன சாமானியமா, அதற்கு நாங்கள் எவ்வளவோ தவம் செய்திருக்க வேண்டுமே, அப்படி ஒரு சம்பந்தம் தெய்வ கிருபையால் ஏற்பட்டு விட்டால் நீங்களும் நெருங்கியவர்களாகி வரப்போக இருப்பதில் நான் கவலையற்றவளாய்க் காலங் கழிக்கலாமே, அந்தப் பாக்கியம் இந்த ஜென்மத்தில் இருக்கிறதோ என்னவோ, எதற்கும் பிராப்தம் வேண்டாமா? எனக்கு என்னவோ பூரண சம்மதம்; ஆனால் அவர் தான் அதிகமாக இதில் முரணுகிறார்; நமது பையன் பிறந்த நாள் தொட்டு அவரது தங்கையின் குமாரத்தியைக் கொடுப்பது என்று பேச்சு ஏற்பட்டிருக்கிறதாம்; அதற்கு விரோதமாக ஒன்றும் நடக்கக்கூடாது என்றும் அவர் ஒரே பிடிவாதமாய் இருக்கிறார்; என் வார்த்தையை யார் கேட்கப்போகிறார்கள்; எனக்கு என்னவோ அவர் நினைத்திருக்கிற இடத்தில் இஷ்டமில்லை; ஆனாலும் அதை வெளியிட்டுச்சொல்லி என்ன பயன், முடிவில் பிராப்தம் எப்படியோ என்று சொல்லி மிக்க வருந்துவது போல் நடிக்கிற அன்பினர்களை என்னென்று சொல்லட்டும்! நம் முன் இத்தகைய ஒப்பாரி அன்பினர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்! இவர்களால் ஆகக்கூடிய காரியமாயிருந்தும் அவர்களுக்கு மனமில்லாததினாலே அதை வெளிக்குக் காண்பித்துக் கொள்ளாமல் மற்றவர்களுக்குப் பிரியமில்லை யென்ற பழியைப் போட்டுவிட்டு ஒதுங்கிக் கொள்ளும் இயல்பினராகிறார்கள். சாதாரணமாய் தன்னாலும், தன் முயற்சியாலும், தன் சக்தியாலும் ஆகக்கூடிய காரியத்திற்கே இப்படிக் கோணல்கள் செய்வதானால், இவர்களா இனி ஆகக்கூடாத காரியத்தைச் சிரத்தையோடும் இருந்து ஆகும்படி செய்யப் போகிறார்கள்? அது சொப்பனத்திலுமில்லை. வெளி அன்பு என்றைக்கும் வெளி அன்பு தான்! ஒரு காலத்தில் அந்த வெளியன்பு அதன் ஆரம்ப நாளில் உண்மையான அன்பாக இருந்து பொங்கி யிருக்கலாம். ஆனால் அது ஒரு காலம்! அது அந்த நிமிஷம் சட்டென்று தோன்றிய தன்னையே அறியாமல் உதித்த அன்பு. பிறகோ, தனது கூடப்பிறந்த குணங்கள் அந்த அன்பை உமிழ்ந்துவிட்ட எச்சிலையன்பாக மாற்றிச் சுருங்கச் செய்துவிட்டது. இந்தச் சுருங்கிய உதட்டு அன்பு உதட்டுறவிலேயே முடியுமேயன்றி உள்ளுறவிலே கலக்கவிடாது, அதற்கு இடமும் தராது. முன்பு அன்பு வைத்தவர்களை அன்னிய மனுஷ்யர்களென்று சொல்லவும் துணிந்து விடுவர். இவ்வாறான அன்பை ஒரு அன்பாக உலகத்தார் சொல்லுகிறார்களே, அது தான் ஆச்சரியம்! "அன்பிருந்தால் ஆகாததும் ஆகும்" என்பதல்லவா மேலே கண்ட பழமொழி. அதை இங்கு "அன்பில்லாவிடில் ஆகுங் காரியமும் ஆகாது" என்று எதிரிடையாகவும் திருப்பிச் சொல்லவேண்டியதே.



பின்னும் ஒருவன் வறுமையால் மெலிந்து அன்றைய அரிசிக்கே வழியின்றித் தான் அன்பு வைத்த இடத்துக்கு ஒரு நாலு, ஐந்து ரூபா உடனே அனுப்பும்படி கடிதம் வரைகிறான். அதற்குப் பதிலே வருவதில்லை. சில நாட்கள் கழிந்து இவனுக்கு ஒரு கடிதம் வருகிறது. அந்த அன்பு வைத்தவர்கள் இவனையே ரூபாய்கள் அனுப்பும்படிக் கடிதம் எழுதுகிறார்கள். உடனே இவன் தன் நிலைமையை அவர்கள் செல்வ

யாக அறியவில்லையென்றெண்ணி, தான் முன்பு அரிசிக்கு வழியின்றிக் கடிதம் எழுதியதையும், தன் மகா கலங்கலான நிலையையும் தெளிவாக விவரித்து, இந்நிலையில் தன்னிடம் அனுப்பப் பணம் எது என்றும், தன் நிலைமைக்கு உதவி செய்ய முடியாத ஸ்திதியிலிருந்தாலும், ஐயோ என்று அனுதாபப்பட்டு நின்றால் அதுவே பெரும் பாக்கியமென்றும் விரிவாகக் கடிதம் எழுதுகிறான். உண்மையான அன்பு இருந்தால் அந்தக் கடிதத்தை வாசித்தளவிலேயே அப்படியே உருகிப் போகலாம். ஆனால் அந்த அன்பின் பசை அங்கு வற்றிப்போயிருக்குமானால் அப்பொழுது அவன் கடிதத்தை ஒரு நிஷ்டூரக் கடிதமாக நினைத்து விடுகிறார்கள். அதற்காகக் கனத்த கோபமும் கொண்டு விடுகிறார்கள். இவ்வண்ணமாக இவ்விஷயம் முடிகிறதேயன்றி, தன் கஷ்டங்களெல்லாம் தெரிவித்த அவனைப் பற்றி அவன் பாடுகளுக்காக எவ்வித அநுதாபமும் காட்டுவதையே காணோம்! அந்த அநுதாபப்படுகிற விஷயமே அங்கு மறைந்துபோய் விடுகிறது! ஏன் மறைகிறது? உள்ளத்திலே அன்பின் பசை சற்றும் இல்லாமையால் தான். அதே கடிதத்தை அவனிடம் யதார்த்தமான அன்புள்ளவர்கள் பெற்றிருந்தால் உடனே உருகிப்போய் தங்கள் கையில் ஒரு காசு தான் இருந்தாலுங் கூட அதை உடனே அனுப்பிக் கொடுத்து அவன் கஷ்டத்திற்காக வருந்திக் கடிதமும் வேறே இரக்கப்பட்ட மனமாய் எழுதத் தொடங்கி விடுகிறார்கள். அன்பிருக்கும் நெஞ்சு செய்யும் காரியத்தையும், அன்பற்ற-வெளித்தன்மை கொண்ட—அன்பு மாறியவர்களின் மனம் போகும் வழியையும் மேற்சொல்லியவற்றிலிருக்கும் ஒருவாறு அறியலாம். இனி, "அன்பு இருந்தால் ஆகாததும் ஆகும்" என்ற பழமொழிக்கு வேண்டிய அநுபவ உதாரணங்கள் சொல்லி விளக்கிக் கொள்ள அவரவர்களின் சென்றுபோன நாட்களிலிருந்தும் வேண்டிய சங்கதிகள் கிடைக்குமானதால், அவற்றை அவரவர்களே நினைத்துப் பார்த்துக் கொள்ளும்படி விட்டு விடுகிறோம்.

## 45. அடுத்து வந்தவருக்கு ஆதரவு சோல்வோன் குரு.

அன்பின் காரணமாக நம்மையடுத்து வந்து நமது உதவியை விரும்புவோர்க்கு நாம் ஆதரவான வார்த்தைகளைக்கூறி நம்மாலானதை வஞ்சனையின்றிச் செய்வோராக இருந்தால் அவர்கள் நம்மைத் தங்களுக்குப் பெரிய துணையாக எண்ணி விடுகிறார்கள். எந்த ஒரு விஷயத்திற்கும் நம்மைக் குருவாக எண்ணி ஆலோசனை கேட்க வந்து விடுகிறார்கள். எதையும் நம்மைக் கேட்டுக் கொண்ட பிறகே செய்யத் தொடங்குகிறார்கள். "அந்த மனுஷ்யன் என்மீது பிராணனுக்குப் பிராணனாயுள்ளவர்; என் க்ஷேமத்தில் அக்கரை கொண்டவர்; அவரைக் கேட்காமல் நான் ஒன்றும் செய்ய முடியாது" என்கிறார்கள். இவ்விதமாக அவர்கள் நம்மைப்பற்றி நல்ல எண்ணம் நினைக்க, நாமும் அவர்களிடம் அன்போடு கூடியிருந்து ஆதரவு சொல்லி அரவணைக்க, இவ்விதமாக அன்பு மயமாய் நமது நாட்கள் கழிவதாயிருந்தால், ஆ! நமக்கு எவ்வளவு இன்பமாயிருக்கும். இப்படியாக நமக்கு அன்பால் எவ்வளவோ மனோசாந்தியும், தலைமையும், ஆநந்தமும் பெருகுவதாயிருக்க, இவைகளை விட்டுவிட்டுக் கடிய சொற்கூறி மிருகங்களாய்ப் போவானேன் என்று அன்பற்றவர்களை இடித்துக் காட்டுந் தன்மையில் இந்தப் பழமொழி உபயோகப்படுவதாகவும் மற்றொரு பொருள் கொள்ளலாம்.



## 46. இரக்கமில்லாதான் நெஞ்சம் இரும்பிலும் கடிது.

அன்ப இல்லாத நெஞ்சில் இரக்கம் என்பது எது? அது எத்தகைய நெருங்கிய அன்பினரையும் அன்னியராகவே நினைக்க வைத்துவிடும். இவ்விதம் எண்ணச் செய்கிற இரக்கமற்ற நெஞ்சு இரும்பைவிடக் கடினமாகி மகா உக்கிரகமும், சுடு சொல்லும், எடுத்தெறிந்து பேசும் வார்த்தைகளும் உள்ளதாய்மாறிப்போகும். இரும்புகூட நெருப்பில் இளக்கப்பட்டால் மிருதுவாய் விடுகிறது. ஆனால், இந்த இரக்கமற்ற நெஞ்சோ பிறருடைய எவ்வளவோ பாடுகளைக் கண்ணாரப் பார்த்தாலுங்கூட மனம் உருகாதபடி அந்த இரும்பிலும் கொடிய கடின நெஞ்சாய் விடுகிறது. இத்தகைய கடினமான ஹிருதயத்தினர்கள் எவர்களுடைய அன்பைத்தான் மதிக்கப் போகிறார்கள்? எந்த அன்பினரைத் தான் சேர்த்துவைக்கப் போகிறார்கள்? எவர்களுக்குத் தான் ஆதரவு சொல்லப் போகிறார்கள்? எந்த மரணம், துக்கத்துக்குத் தான் உருகப் போகிறார்கள்? ஒன்றுமேயில்லை. ஆனால் இதில் இரத்தக் கண்ணீர் விட்டுத் துயரப்படக்கூடிய விஷயமென்னவெனில், ஒரு காலத்தில் அளவு கடந்த அன்புள்ளோராக இருந்து, பிறகு அன்பற்ற நெஞ்சமாய், இரும்பிலும் கடிய மனதாய் மாறிப்போகிறார்களே, அது தான் எத்தகையோராலும் சகிக்க முடியாத கொடிய வாதனையாய் ஆகிவிடுகிறது.

(தொடரும்.)

---

Kodaikanal,
*1st April 1927.*

To
M. R. Ry. T. Rajagopal Mudaliar Avl.,
Proprietor, 'Ananda Guna Bodhini',
302 Mint Street, Madras.

DEAR SIR,

Casually I came across with an old copy of your Journal. From start to finish, I found it very interesting, ennobling and worthy its name. The lessons the pages impart are rightly deserving of deep study and assimilation and speaks of essentials and rudiments to be strictly adhered to and closely to be followed by our young Indian brethren. I do wish that this Journal should find a place in the home of every Indian and I believe it will serve as a trumpet call to open the eyes of Young India and instil in them the noble maxim

"Awake, arise, stop not till the goal is reached."
"Full many a gem of purest ray serene
The dark unfathomed caves the ocean bear." (*Grays*)

Even so the existence of such a fine magazine, I believe, many people like myself would unfortunately be still ignorant of.

Yours very faithfully,
T. S. Venkatasubbaiyer, B.A.
Sub-Registrar, Kodaikanal.

# பத்திரிகாசாரம்

ஐசுவரிய மமதை :—

அமெரிக்காவைச் சேர்ந்த இடங்களில் செல்வத்தின் திமிர் காரணமாகக் கடவுள் உண்டு என்பது கூட மறக்கடிக்கப்படுகின்றதாம். அதைக் குறித்து 'சுதேச மித்திரன்' பின்வருமாறு எழுதுகிறது :—பொருளிருந்தால் மற்ற புருஷார்த்தங்களும் அடையலாமென்று சொல்லப்பட்டிருக்கிறதே யொழிய, பொருளுள்ளவர்கள் கட்டாயம் அறம்—இன்பம்—வீடு பெறுகிறார்கள் என்பதற்கில்லை. கத்தி, நெருப்பு இவை போல் பொருளும் சாதகம்—பாதகம் இரண்டு வழியிலும் உபயோகமாகிறது."

***

நமது மாதர்களின் நிலை :—

* * * * "நம் தேசஸ்திரீகள் கிணற்றிலிருக்கும் தவளைக்கு ஸமுத்திரத்திலிருக்கும் தவளையினுடைய சௌகரியங்களும் நோக்கங்களும் தெரியாம லிருப்பதுபோல் தங்கள் குடும்பக் காரியங்களைத் தவிர வேறு யாதொரு விஷயங்களும் அறியாதவர்களாய் அக்ஞான நித்திரையில் மூழ்கி யிருக்கிறார்கள். கூட்டிற்குள்ளிருக்கும் பக்ஷிகளுக்கு அடைபட்டிருப்பதே ஸஹஜமாய்ப் போய்விடுவது போலும், ஒரு அடிமைக்குத் தன் அடிமைத்தனமே ஸுகமாய்ப் போய்விடுவது போலும், தன் எஜமானனையும் அவன் குடும்பத்தையும் தவிர வேறு விஷயங்களில் பற்றற்றவனாய்ப் போய் விடுவது போலவும் நம்ம ஸ்திரீகள் தங்களுடைய தற்கால நிலைமையை ஸஹித்திருக்கிறார்கள்."

(சு. மி.) ஆர். ரங்கமணி யம்மாள்.

ஜாதீய பாவனை :—

"பிரதி ஜன ஸமூகத்துக்குள்ளும் ஜாதீய பாவனை ஒன்றிருக்கின்றது. இந்தப் பாவனையானது ஜகத்தின் கார்யத்தை நடத்துகின்றது; ஸம்ஸாரத்தின் க்ஷேமத்துக்கு அத்தியாவசியகமானது. ஒரு மனிதனது க்ஷேமத்துக்கேனும், ஒரு ஜன ஸமூகத்தின் க்ஷேமத்துக்கேனும் இன்றி யமையாத அம்சமாயுள்ள பாவனையின் ஆவசியகம் எப்பொழுது முடிந்து விடுகின்றதோ, அப்பொழுதே அந்தப் பாவனைக்குக் கொள்கலனா யிருந்த மனிதனும் ஜன சமூகமும் நாசமடைய வேண்டியவராம். பாதகண்ட வாவிகளாகிய நம்மை இத்துணைத் துன்பமும் தரித்திரமும், நம்மவராலும் அயலாராலும் நேரிட்ட கொடுமைகளும் வருத்திய போதிலும் நாம் இன்னும் உயிர் வாழ்ந்திருப்பதற்குக் காரணம் என்னவெனில், நமக்குள் ஒரு ஜாதீய பாவனை உள்ளது; அது உலகத்தின் க்ஷேமத்தின் பொருட்டு இன்னும் ஆவசியகமா யிருக்கிற தென்பதேயாம்."—ஸ்ரீவாணீ விலாஸினி.

***

தண்ணீர் :—

"தண்" என்பதற்குக் 'குளிர்ந்த' 'குளிர்ச்சி' என்பன பொருள். 'தண்ணீர்' என்பதற்கோ 'குளிர்ந்த நீர்' என்பது பொருள். ஆயினும் இம்மொழியை உபயோகிப்பதிலும் ஒரு பெருந்தவறு செய்கிறார்கள். "தண்ணீர்"க்குரிய முற்கூறிய பொருள்களை மறந்து, "தண்ணீர்" என்பது கேவலம் 'நீர்' என்பதையே குறிப்பதாக நினைத்து 'குளிர்ந்த நீரை'ப் 'பச்சைத் தண்(ணீர்) என்றும், 'உஷ்ண நீரை'ச் 'சூடு தண்' (ணீர்) என்றும் கூறி வருகிறார்கள். அவற்றை முறையே, 'தண்ணீர்' என்றும், 'வெந்நீர்' என்றுமே சொல்லல் வேண்டும். 'சூடு என்பதன் பின்னுள்ள தண்' என்பதை நீக்கல் வேண்டும்.—நச்சினார்க்கினியன்.

# பெரியாரின் மொழிகள்

(முதல் கமலம் 595-ம் பக்கத் தொடர்ச்சி.)

83. Gentle words, quiet words, are after all the most powerful words. *Gladden.*

மிருதுவான சொற்கள், அமைதியான சொற்கள்—இவைகளே மிகவும் வன்மைபெற்ற சொற்களாகும். க்ளேடன்.

84. To know, to esteem, to love, and then to part
Make's up life's tale to many a feeling heart-*Coleridge.*

அறிவது, கௌரவிப்பது, அன்பு கொள்வது, பிறகு பிரிவது—இதுவே உணர்ச்சியுள்ள அனேக ஹிருதயங்களுக்கு வாழ்க்கையென்னும் கதையாக ஆய்விடுகிறது. கோல்ரிட்ஜ்.

35. Lay aside life-harming heaviness,
And cultivate a cheerful disposition. *Shakespeare.*

தீங்கிழைக்கும் சுமையான வாழ்க்கையின் கருத்தை யகற்றிவிட்டு, ஒரு கவலையற்ற தன்மையைப் பயிற்சி செய்துகொள். ஷேக்ஸ்பியர்.

36. No happier state can mortal know,
No happier lot can earth bestow
If love thy lot shall share *Rob. Southey.*

உனது வாழ்க்கையில் அன்பு கலந்திருந்தால்—அதைக் காட்டிலும் சுகமான நிலையை மனிதன் அறியான்; அதைக் காட்டிலும் சுகமான வாழ்வைப் பூலோகம் அளிக்காது. ராபர்ட் ஸதே.

87. The good deed, through the ages,
Living in historic pages,
Brighter glows and gleams immortal,
Unconsumed by moth or rust. *Longfellow.*

நல்ல செய்கையானது வெகு காலங்கள்வரை சரித்திரத்தின் ஏடுகளில் வாழ்ந்துகொண்டே, பூச்சியாலோ, துருவினாலோ அழிக்கப் பெறாமல் அதிக கார்த்தியைப்பெற்று அழியாது பிரகாசிக்கிறது: லாங்பெல்லோ.

88. Alas, how light a cause may move
Dissensions between hearts that loved *Moore.*

ஆ! எவ்வளவு அல்பமான காரணமும், அன்பு கொண்டுள்ள ஹிருதயங்களில் சச்சரவுகளை உண்டு பண்ணி விடக்கூடும்! மூர்.

89. That which we have we prize not to the worth :
But being tacked and lost, why then we rake its value.
*Shakespeare.*

நம்மிடம் உள்ள வஸ்துவை அதன் மதிப்புக்குத் தக்கபடி நாம் கௌரவிப்பதில்லை; ஆனால் அது கவரப்பட்டு இழக்கப்படின் அதனுடைய மதிப்பைப்பற்றி பலமாகப் பேசுகிறோம். ஷேக்ஸ்பியர்.

90. Talk not of wasted affection,
Affection never was wasted. *Longfellow.*

'வீணாய்ப்போன அன்பு' எனப் பேசாதே; அன்பு என்றும் வீணாய்ப் போனதில்லை. லாங்பெல்லோ.

91. The eternal life beyond the sky,
Wealth cannot purchase. *Longfellow.*

ஆகாயத்திற்கும் அப்பாலுள்ள சாச்வத வாழ்க்கையை தனத்தினால் பெற்றுவிட முடியாது. லாங்பெல்லோ.

92. Study the best and highest things that are,
But of thyself a humble thought retain. *Rev. Davis.*

உத்தமமானதும் சிறந்ததுமான விஷயங்கள் யாவையும் அறிந்துகொள்; ஆனால் உன்னைப்பற்றியேயோ மிகவும் தாழ்ந்த எண்ணத்தையே கொண்டிரு. டேவிஸ்.

93. The darkest hour of the night is just the one before the dawn. *A. R.*

இரவினுடைய மிகு அந்தகாரமான நாழிகை உதயத்திற்கு முன்னுள்ளதே யாகும். ஏ. ஆர்.

94. No two on earth in all things can agree,
All have some darling singularity, *Churchill.*

பூமியில் எந்த இரண்டு வஸ்துவும் ஒத்து இருக்க முடியாது; யாவரும் ஒரு மனோஹரமான தனித் தன்மையைப் பெற்றே யிருப்பர். சர்சில்.

95. Blessings ever wait on virtuous deeds,
And though late a sure reward succeeds. *Congreve.*

தர்மமான செய்கைகள் என்றும் நல்ல ஆசிகளையே அளிக்கும்; தாமதமானாலும் நிச்சயமான பலன் வந்தே தீரும். கான்க்ரீவ்.

96. No man is born into the world,
Whose work is not born with him. *Lowell.*

பிறக்கும்பொழுதே தன் வேலையும் கூடப் பிறக்காத மனிதன் எவனும் பிறந்ததே கிடையாது. லவல்.

97. Words do well,
When he that speaks them please, those that hear. *Shakespeare.*

வார்த்தைகளைப் பேசுபவன் அவைகளைக் கேட்பவனைக் களிப்பிக்கச் செய்தால், வார்த்தைகள் நன்மையையே செய்யும். ஷேக்ஸ்பியர்.

98. In real life, the serious and the comic, the sublime and the grotesque, the pathetic and the ludicrous are mingled together. *Longfellow.*

உண்மை வாழ்க்கையில் யதார்த்தமும், கேலியும், கம்பீரமும், அசங்கியமும், கருணைகொள்ளக் கூடியதும், ஏளனம் செய்யக் கூடியதும் கலந்து இருக்கின்றன. லாங்பெல்லோ.



99. The moth will singe her wings and singed return,
Her love of light quenching her fear of pain. *Tennyson.*

விட்டில்பூச்சி தனது இறக்கைகளை (விளக்கில்) கொளுத்திக்கொண்டு திரும்பி வரும்; ஒளியின்மீது அதற்குள்ள அன்பு, அதனுடைய துன்பபயத்தைத் தணித்துவிடுகிறது. டெனிஸன்.

100. Our acts our angels are, or good or ill,
Our fatal shadows that walk by us still. *Fletcher.*

நம்முடைய செய்கைகளே — நன்மையோ தீமையோ — நம்முடைய தெய்வங்கள்; நம்மை என்றும் தொடர்ந்து வருகின்ற விதி என்னும் நிழல்களாகும். ப்ளெட்சர்.

101. When daffodils begin to peer,
Why then comes in the sweet of the year. *Shakespeare.*

அழகிய மலர்கள் மலருங் காலையில், வருஷத்தினுடைய இன்பம் முழுவதும் அப்பொழுதுதான் ஏற்படுகிறது. ஷேக்ஸ்பியர்.

102. There's somewhat flows to us in life,
But more is taken quite away. *Tennyson.*

வாழ்க்கையில் நம்மிடம் வந்து சேருவது கொஞ்சம் இருக்கிறது; ஆனால் அதிகமாக நம்மிடமிருந்து எடுத்துச் செல்லப்படுகிறது. டெனிஸன்.

103. Never morning wore,
To evening, but some heart did break. *Tennyson.*

காலை மாலையாக மாறுவதற்குமுன் ஏதாவது சில ஹிருதயங்கள் உடையாமல் இருந்ததில்லை. டெனிஸன்.

104. The sped arrow, the spoken word, the lost time — these can never be called back. *Proverb.*

எய்யப்பட்ட அம்பு, பேசப்பட்ட வார்த்தை, இழக்கப்பட்ட காலம்— இவை மூன்றும் திருப்பியழைக்கக் கூடாதவைகள். பழமொழி.

105. Who covets more is ever more a slave. *Herrick.*

எவன் அதிக ஆசை கொள்கிறானோ, அவன் அதிகமான அடிமையாகிறான். ஹெரிக்.

106. There is somewhat in the world amiss,
Shall be unriddled by and by. *Tennyson.*

உலகில் ஏதோ தவறுதலான விஷயமொன்று உளது; அது வரவரத் தெளிவாகும். டெனிஸன்.

107. Preferment goes by letter and affection. *Shakespeare.*

உத்தியோக உயர்வு சிபார்சுக் கடிதத்தாலும் பிரியத்தாலும் ஏற்படுகிறது. ஷேக்ஸ்பியர்.

(தொடரும்.)

R. இராமகிருஷ்ணன், பி. ஏ.

# * ஆங்கிலத் தமிழ்க் கடிதங்கள்

## LETTER II.

### THE FATHER'S ANSWER.

MY DEAR CHILD,

If ever you live to be a father, you will know what I feel for you on the present occasion. Tenderness as a parent, resentment on account of ingratitude, a real concern for your future happiness, and respect for the worthy man whose service you deserted, all conspire together to agitate my mind to different purposes; but paternal affection becomes predominant, and I am obliged to act as your friend, although I am afraid you have considered me as your enemy; I have written to your master, and just now received his answer; copies of which I have sent enclosed. your master is willing to receive you into his service again, and I hope your behaviour will be correspondent, to so much lenity.

I am
Your affectionate father,
A. PARTHASARATHY.

## 2-ம் கடிதம்

### தந்தையின் விடை

எனது அன்புள்ள குழந்தாய்,

நீ ஒரு பிள்ளைக்குத் தகப்பனுவாயாகில், உன் பொருட்டு இந்தத் தருணத்தில் நான் படும் துயரம் உனக்குத் தெரியும். தகப்பனுனதால் எனக்குள்ள அன்பும், நீ நன்றியறியாமையா லுள்ள கோபமும், இனி நீ சுகப்படுவதற்குள்ள மெய்யான கவலையும், நீ விட்டுவிட்ட அலுவலைத் தந்திருந்த யோக்கியர் மீதுள்ள எண்ணமுமாகிய இவையெல்லாம் கூடி என் மனதை நானாவிதத்திலும் கலங்கச் செய்கின்றன. ஆகிலும் தகப்பனுக்குரிய பக்ஷமானது எல்லாவற்றிற்கும் பெரிதாகின்றதால், என்னை நீ சத்துருவாக எண்ணியிருந்தபோதிலும் நான் உனக்குச் சிநேகிதனுகவே நடக்க உடன்பட்டிருக்கிறேன். உன் எஜமானனுக்கு நான் எழுதியதற்கு அவரது உத்தரம் இப்போதுதான் வந்தது. அவ்விரண்டுக்கும் பிரதிகள் இதற்குள் அடக்கம் செய்திருக்கிறேன். உன் எஜமானன் உன்னை மறுபடியும் தமது அலுவலில் வைத்துக்கொள்ள இஷ்டமா யிருக்கிறர். ஆகையால் உனது நடக்கை இத்தனை தயைக்குத் தகுந்ததா யிருக்குமென்று நம்பி யிருக்கிறேன்.

இங்ஙனம் உன் அன்புள்ள தந்தை,
ஏ. பார்த்தசாரதி.

---

அதிர்ஷ்டம் என்பது எப்போதும் ஸ்திரமாக இருப்பதில்லை. அதிலும் எவ்வளவோ சொத்துக்கள் கிடைத்தும் இன்னும் பிறரை ஏமாற்றுவதிலேயே மனம் அலைகிறது. புத்தியுள்ளவனுக்கு அதிர்ஷ்டம் எவ்வளவு சீக்கிரம் வந்ததோ அதைவிட சீக்கிரமாகப் நசித்து விடுகிறது.

---

* All Rights Reserved to the Editor.

# மாணவர் நீதிகள்

| | |
|---|---|
| 1. Have faith in God. | கடவுளிடம் நம்பிக்கை கொண்டிரு. |
| 2. Love all beings. | எல்லா ஜீவன்களிடமும் அன்புடனிரு. |
| 3. Give every man thy ear but few thy voice. | யாவருக்கும் உன் செவியை அளி, சிலருக்கே உனது நாவைக்கொடு. |
| 4. Neither a borrower nor a lender be. | கடன் வாங்குவோனுகவும் இராதே, கடன் கொடுப்போனுகவும் இராதே. |
| 5. To thine own self b3 true. | உன்னுடைய ஆத்துமாவுக்கே உண்மையாக இரு. |
| 6. Waste not, Want not. | வீணுக்காதே, விரும்பாதே. |
| 7. Look before you leap. | குதிப்பதற்குமுன் பார்த்துக் குதி. |
| 8. All that glitters is not gold. | மின்னுவதெல்லாம் பொன்னல்ல. |
| 9. There is no time like the present. | இப்பொழுதைப்போன்ற காலமே கிடையாது. |
| 10. As you sow, so you reap. | விதைக்கும்படியே அறுக்கவேண்டும். |
| 11. Well begun is half done. | நன்கு ஆரம்பித்ததே பாதி காரியம் முடிந்ததாகும். |
| 12. Prosperity makes many friends. | க்ஷேமகாலம் அனேக நண்பர்களைச் செய்கிறது. (சேர்க்கிறது.) |
| 13. Adversity testeth friends. | கஷ்டகாலம் நண்பர்களைச் சோதனை செய்கிறது. |
| 14. Man is the architect of his future. | மனிதனே தன் வருங்காலத்தைச் செய்யும் சிற்பி. |
| 15. Condemn the fault and not the actor of it. | குற்றத்தைக் கண்டி, அதைச் செய்தவனைக் கண்டியாதே. |
| 16. Respect grey hairs. | வயது முதிர்ந்தோரை கௌரவி. |
| 17. Never be cast down. | எப்பொழுதும் ஊக்கம் குன்றுதே. |
| 18. Trust in God and do the right. | கடவுளை நம்பி நல்லதைச் செய்வாயாக. |
| 19. Man is the crown of creation. | மனிதனே சிருஷ்டியின் உச்சி. |
| 20. The boys of to-day are the men of to-morrow. | இன்றைய பாலர்களே நாளைய மனிதர்களாவர். |

---

# நமது கதாப் பிரஸங்கி

## "உயிரை விடினும் கதரை விடேன்."

"ஆம், இனி ஒரு நிமிஷமாவது இந்த ஊரில் இருத்தல் தகாது. எனது அருமைத் தந்தையே என்னை வெறுக்கும் பொழுது நான் இங்கு வாழ்வது தகுமா? தாயார் மட்டும் அன்பு குறையாதவளாகவே இருக்கிறாள். ஆயினும் என் செய்வள்? தந்தை வார்த்தைக்குத் தடை சொல்பவள் அல்லவே. இவற்றையெல்லாம் விட என் மனதை வருத்தும் அந்த ஒரு விஷயத்தை மட்டும் யான் எங்ஙனம் மறப்பேன்? "கோணிச்சாக்கு போன்ற கதரை யணிந்து, சதா 'காந்தி, காந்தி' என்று பிதற்றித்திரியும் இந்தப் 'பஞ்ச வேஷத்தை' விட்டொழித்தாலன்றி எனது மகள் மரகதம் உன்னுடைய மகனுக்கு உரிமையாகாள்" என்று சில நாளைக்கு முன்பு என் தாயாரிடத்து எனது அத்தை கூறிய சொற்கள் நன்றாக என் மனதில் பதிந்திருக்கின்றன. மரகதமும் சில மாதங்களாக இவ்விடம் வருவதில்லை. இவ்வளவு துன்பங்களுக்கும் இடையில் இவ்வூரில் யான் எவ்வாறு இருப்பது?"—என்று கோபாலன் ஒருநாள் காலை மதுரை வைகையாற்றின் வடகரையில் தன்னந் தனியாய்ச் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

***

மதுரை வடக்கு மாசி வீதியிலிருக்கும் பிரபல வக்கீல் ஸ்ரீமான் சுந்தரராஜ முதலியாரின் ஒரே மகன் கோபாலன். மதுரை அமெரிக்கன் காலேஜில் பி. ஏ. வகுப்பில் வாசித்துக்கொண் டிருந்தான். தன்னைப் போலவே தனது மகனும் ஒரு பெரிய வக்கீலாக வேண்டுமென்பது அவனுடைய தந்தையின் அளவு கடந்த ஆசை. ஆனால் கடவுள் நினைவு வேறாயிருந்தது. மகாத்மா காந்தியின் ஒத்துழையா இயக்கத்தில் ஈடுபட்டுத் தன் தந்தையின் அனுமதியின்றியே கல்லூரியினின்றும் விலகிவிட்டான். அன்று முதல் அவன்மீது முதலியாருக்கு அளவு கடந்த வெறுப்பு. சாமம், பேதம், தானம் என்னும் மூன்று உபாயங்களினாலும் வற்புறுத்தினார். முடியவில்லை. கடைசியாகத்தான் பின்வரும் சூழ்ச்சியைக் கைக்கொண்டார்.—

***

திருநெல்வேலியைச் சார்ந்த சொக்கலிங்க புரத்தில் பெரிய செல்வந்தர் நடராஜ முதலியார். அவருடைய வாழ்க்கைத் துணைவியாயிருக்கும் நமது முதலியாரின் சகோதரிக்கு ஒரே புதல்வி மரகதம் என்பவள். மரகதம் சிறுவயதாயிருந்த பொழுது மதுரையில் மாமன் வீட்டிலிருந்தே அங்குள்ள மீனாக்ஷி பெண் பாடசாலையில் வாசித்து வந்தாள். அப்பொழுது கோபாலனும் மரகதமும் இணைபிரியாத நேயர்கள். பூப்படைய ஒரு வருடத்திற்கு முன்பே கலாசாலையினின்றும் நீங்கி தனது சொந்த கிராமத்திற்குப் போய் விட்டாள். இப்பொழுது அவள் பருவம் அடைந்த மாதம் ஆறு. கோபாலன் பி. ஏ. வகுப்பில் தேர்ச்சி பெற்றதும் மரகதவல்லியை மணமுடிப்பித்து, சென்னை எஸ்பிளனேடில் (Esplanade Row) உள்ள "லா காலேஜிற்கு" சட்டப் படிப்பிற்கு அனுப்ப வேண்டுமென்று முதலியார் நினைத்திருந்தார். தனதெண்ணம் பலியாமற் போகவே கோபாலன் மிகவும் "பிரேமை"



கொண்டுள்ள மரகதத்தின் மூலமாகவாவது தனது வழியில் அவனைத் திருப்பலாமென்று கருதி, தன் சகோதரியிடத்து "சட்டப் பரீக்ஷையில் தேறி ஏதாவது ஓர் உத்தியோகம் பெற்றாலன்றி கோபாலனுக்கு உனது மகளைக் கொடுப்பதாக வாக்களியாதே" என்று கூறியிருந்தார். அந்தப் பாடத்தைத்தான் அவள் தனது அண்ணன் மனைவியினிடத்து ஒப்புவித்தாள் சில நாளைக்கு முன்பு. அதைக் கேட்டது முதல் கோபாலன் மனம் ஒடிந்து விட்டது. அந்த துயரக் கடலினின்றும் மீளுவதெப்படி என்ற கவலையிருந்தே, கோபாலன் அன்று காலை வைகையாற்றின் கரையில் சிந்தித்துக் கொண்டிருந்தான். திடீரென ஏதோ ஒன்றைக் கருதினவன்போல் வீட்டிற்குச் சென்று அன்னையிடம் சிறிது நேரம் பேசிவிட்டு ரயில்வே ஸ்டேஷனை நோக்கிப் புறப்பட்டான்.

***

பகல் 11½ மணிக்கு மதுரையிலிருந்து புறப்படும் திருவனந்தபுரம் "எக்ஸ்பிரஸில்" வாடிய முகத்தோடு கோபாலன் ஒரு பெஞ்சியில் உட்கார்ந்திருந்தான். பல நாளாக உணவே காணாதவன் போல அவன் மேனி இளைத்திருந்தது. நெற்றியில் நீறில்லை; முகத்தில் புன்சிரிப்பில்லை. "என்னைக் கண்டதும் அத்தையும், அவள் புருஷனும் அன்போடு முகமன் கூறாது அலக்ஷியமாக விருப்பின், அதைவிட எனக்கு வேறு என்ன அவமானம் வேண்டும்? அவர்கள் எப்படியாயினும் இருக்கட்டும்; சிறு பருவத்திருந்து ஒரு கணமும் பிரியாது என்னோடு இன்னுரையாடிய எனது ஆருயிர்ச் செல்வி மரகதம், என்னை அன்போடு தழுவி இன்பவுரை கூறாது கண்டுங் காணாதவள் போலிருப்பின் என் மனம் இடிந்தே போய்விடும். சீ! என்ன வீண் நினைவுகள்! எவ்வளவுதான் மனவேற்றுமை யிருப்பினும் என்னோடு உரையாடாதிருப்பளோ?" என்று எண்ணிறந்த யோசனைகளைத் தன் மனதிற்குள்ளேயே ஆக்ஷேப சமாதானம் செய்துகொண்டும் அப்படியே பெஞ்சியில் அயர்ந்து உறங்கி விட்டான். துயரம் நிறைந்த தனக்கு "மரகதம் தன் மீது வைத்த காதல் மாறாதிருக்கின்றாள்" என்னும் ஒரு செய்தியாவது தன் துயரை மாற்றக்கூடும் என்று கருதி, அதை நேரில் அறிந்துவர தாயிடம் விடைபெற்றுச் சொக்கலிங்க புரத்திற்குச் செல்கிறான். வண்டி பகல் 3-மணிக்குத் திருநெல்வேலி போய்ச் சேர்ந்ததும், கோபாலன் துயிலினின்றும் எழுந்து வெளியில் எட்டிப் பார்த்தான். அதுவே தான் இறங்க வேண்டிய இடமாயிருந்தபடியால் வண்டியை விட்டிறங்கி, ஒரு குதிரை வண்டியைப் பேசி 3¾ மணிக்கெல்லாம் சொக்கலிங்கபுரம் போய்ச் சேர்ந்தான்.

***

வீட்டு வாயிலில் நின்று கொண்டிருந்த மரகதம் கோபாலனைக் கண்டதும் ஒன்றும் பேசாது 'சரேலென' உள்ளே சென்றாள். கோபாலன் மனம் எவ்வாறிருக்கும்? "வந்த வழியே திரும்பி விடலாமா?" என்றுகூட நினைத்து விட்டான். ஆனால் அவன் நினைத்ததற்கு மாறாகச் சில நிமிஷத்தில் அவனுடைய அத்தை வெளியே வந்து அன்போடு அவனை அழைத்துச் சென்று நலம் வினவி, சிற்றுண்டி யளித்து 'சிரம பரிகாரம்' செய்வித்தனள். மத்தியானம் சாப்பிட்டதும் மேல்மாடியில் படுத்து நித்திரை செய்து கொண்டிருந்த நடராஜ முதலியார் அப்பொழுது தான் தூக்கத்தினின்றும் எழுந்து கீழே இறங்கி வந்தார். மருகனைக் கண்டதும்

மனமகிழ்ந்து அன்புரை யாடினர். இன்னும் அதிகமாக வளர்ப்பானேன்? பின்பு அவர்களுக்குள் நிகழ்ந்த பேச்சு எல்லாம் கோபாலனுடைய தற்கால நிலையைப் பற்றித்தான். இரவு நெடுநேரம் வரை பேசினர். கோபாலன் தனது நிலையினின்றும் பிறழமுடியாதென்று உறுதியாகக் கூறிவிட்டான். அவரவர் தத்தம் பள்ளியறை சென்று நித்திரை கொண்டனர். ஆயினும் தூக்கம் எப்படி வரும்? ஒவ்வொருவருடைய மனதும் ஸ்வப்பனலோகத்தில் அதனதன் விருப்பப்படி ஓடியாடத் தொடங்கியது.

***

"ஆருயிர்த் தலைவரோ! உங்கள் கொள்கையை ஒரு சிறிதும் மாற்ற முடியாதென்று கூறிவிட்டீர்கள். தங்களுக்கென்றே இதுகாறும் போற்றி வளர்த்த எனது தசை நிறைந்த உடலை இனியேனோ வீணாகச் சுமந்திருத்தல் வேண்டும். சிறு வயதில் தங்களிடத்துக் காணப்பட்ட 'அன்பும், பரிவும்' எங்கு சென்று ஒளித்தனவோ?" என்று கோபாலனை மரகதம் மனம் ஒடிந்து கேட்டாள்.

"எனது அன்பே! நீயும் என்னைப்பற்றித் தவறாக நினைத்துக்கொண்டிருக்கிறாய். உன்னிடத்து எனக்கு அன்பில்லையானால், நான் ஏன் இங்கு வருதல் வேண்டும்?"

"பின்பு எதற்காகத் தங்கள் கொள்கையை மாற்றிக் கொள்ளுவதற்கு இவ்வளவு பிடிவாதஞ் செய்கிறீர்கள்?"

"ஆனால் எனது நிலைமை உனக்கும் வெறுப்பை யூட்டுகிறதா?"!

"எனக்கில்லை; எனது தந்தையுந் தாயும் இந்த நிலைமையில் மணம் புரிவிக்க மறுக்கிறார்கள்."

"அங்ஙனமானால், நீயும், நானும் இன்றுமுதல் 'பிரமசரிய விரதம்' அனுஷ்டிக்க வேண்டியதுதான்"

என்று கூறி கோபாலன் மரகதத்தை உற்று நோக்கினான். அச்சமயம் மரகதம் துயரத்தோடும் நின்ற தோற்றம் கோபாலனை அப்படியே அசையறச் செய்து விட்டது.

"என்னுயிர் அமுதே! இன்ப வாரிதியே! உன்னை ஒருகணமும் நான் இனிப் பிரிந்து வாழேன்" என்று கூறி அவளைத் தன் இரு கைகளாலும் தழுவமுயன்றான். அவள் தன் கைகளிற் படாது மறையவே, "என்னே உனது இயல்பு!" என்று கூறித் தனது கண்களைத் திறந்து பார்த்தான்.

***

அறையின் கதவு முன்பு இருந்தது போலவே தாளிடப்பட்டிருந்தது. "மணி 7-ஆகப் போகிறது; இன்னும் துயில்கின்றீர்கள்! எழுந்திருங்கள்!" என்று மரகதம் தனது செந்தாமரை போன்ற கைகளால் எழுப்புவது போல, பொன்னிற ஞாயிறு தனது செவ்விய கதிர்களைப் பலகணியின் வழியாகக் கோபாலன் மீது வீசிக்கொண்டிருந்தது. வீட்டிலுள்ள கடிகாரம் "கிண், கிண், கிண்" என ஏழு அடித்தது. கோபாலன் தான் கண்டது கனவென அறிந்து துயரில் மூழ்கினான்.

காலை உணவு முடிந்ததும் நடராஜ முதலியார் வெற்றிலையைமென்று கொண்டே நேற்று மாலை நடந்த பேச்சின் பிற்பகுதியை இன்று கோபாலனோடு தொடங்கினார். அச்சமயம் தபாற்காரன் தந்தி ஒன்று கொண்டு வந்து நீட்டினான். முதலியார் ஆவலோடும் பிரித்துப் பார்த்தார். (தொடரும்)

பெ. இராமாநுஜ ரெட்டியார்.




## பௌத்த மார்க்கத்திலே மாதர்களின் நிலை

கௌதமசாக்கிய முனி என்ற ஸ்ரீ புத்தரை ஆரியா வர்த்தத்திலே அவதரித்த மஹான்களுக்குள்ளே தலைமை வகுப்பைச் சேர்ந்தவரென்பதாக இவ்வுலகத்துப் பண்டிதர்களெல்லாம் ஒரே மனதுடன் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இத்தகைய மஹாத்மாவால் ஸ்தாபனம் செய்யப்பெற்ற பௌத்த மார்க்கமானது நமது பாரதபூமியை விட்டு நீங்கி விட்டதென்ற போதிலும், வெளித்தேசங்கள் பலவற்றிலே பரவி அங்கங்கிருந்த பழய மதங்களை வென்று பெருமை பெற்றுத் திகழ்கின்றது. ஜப்பான், சீனா, டிபெட், பர்மா, ஸயாம், இலங்கைத்தீவு—என்பன பௌத்த தேசங்களேயாகும். இது மாத்திரமா? நவீன சாஸ்திர ஆராய்ச்சியின் பிரதம ஸ்தலமாகிய ஜர்மனி தேசத்திலும் பௌத்த மார்க்க வியாபகம் உண்டு. அநேக ஐரோப்பிய கிறிஸ்தவ மஹா ஞானிகள் தமது மதத்தை விட்டுவிட்டு பௌத்த தர்மத்தை அனுசரிக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். அமெரிக்காவிலேயும் பௌத்த மார்க்கம் தனது பெருமையைச் செலுத்தாதிருக்கவில்லை. இவ்வுலகத்திலுள்ள ஹிந்துக்கள், கிறிஸ்தவர், இஸ்லாமியர் முதலிய எல்லா மதஸ்தர்களைக் காட்டிலும் பௌத்தர்களே தொகையில் அதிகப்பட்டவர்கள். இத்துணைப் பிரபலமான இந்த மார்க்கத்திலே இதன் சமயாசாரப்படி ஸ்திரீகளுக்கு எவ்விதமான ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதை ஆராய்ச்சி புரிவது மிகவும் பயனுடைய தொழிலாகுமென்று நம்புகிறோம்.

***

புத்தர்பெருமான் உலகைத் துறந்தவர்களாகிய பல மெய்ஞ்ஞானிகளை "ஸங்க"மாகச் சேர்த்து வைத்திருந்தார். துறவிகளின் திருக்கூட்டத்தை "ஸங்கம்" என்று வழங்குதல் மற்ற இந்திய சமயங்களிலும் மரபேயாகும். அந்தக் காலத்திலே அநேக அரசர்களும் பிரபுக்களும் பௌத்த சங்கத்திலே சேர்ந்துகொண்டார்கள். சக்ரவர்த்திக் குமாரனாகிய ஸ்ரீபுத்தர் உலக வாழ்க்கையை முற்றத்துறந்து முக்தி (Nirvana) மார்க்கத்தைத் தமது தெய்வீகத்திருவாயால் போதனை செய்யத் தொடங்கியபோது அதனைச் செவிகொண்ட மஹா பாதகர்கள்கூட தமது நீச இயற்கையை மிக எளிதாக உதிர்த்து விட்டு உண்மை நெறியை அறிந்து கொண்டார்கள். பணமே தெய்வமாக வணங்கிவந்த வர்த்தகர்களெல்லாம் கணப்பொழுதிலே செல்வத்தின் இழிவையும், நிலையாமையையும், தீங்குகளையும் உணர்ந்து

கொண்டனர். செல்வக்கிறுக்குத் தலைக்கேறி, மண்ணாசையும் பெண்ணாசையும் வரம்பு கடந்துபோய், முகஸ்துதி கூறும் நீசப்புழுக்களின் வார்த்தைகளை மெய்யென்று நம்பி, தம்மைப் பூலோக தெய்வங்களாகக் கருதி, அந்தகாரச் சேற்றிலே அமிழ்ந்து போய்க் கிடந்த அரசர்களெல்லாம் புத்தர் கோமானது கடைக் கண்ணருள் பெற்றவுடனே “ சத்ய மார்க்கப் பிரவேசம் ” செய்து விட்டார்கள். இவர்களெல்லாம் ஸந்நியாசிகளாய் விட்டபோது, இவர்களுடைய பத்தினிகளும் ஞானோதயமடைந்தோர்களாகி, சாக்கிய முனிவரின் சரணங்களை யடைந்து, “ ஜகத்ரக்ஷகா! எங்களையும் சங்கத்தில் சேர்த்துக்கொண்டு அருளவேண்டும் ” என்று பிரார்த்தனை புரிந்தார்கள். ஸித்தார்த்தருடைய சிறிய தாயாராகிய பிரஜாபதி கௌதமியே அந்த யோகினிகளுக்கெல்லாம் தலைவியாகி வந்தனர்.

***

கருணைக்கடலாகிய பெருமான் அவர்களை நோக்கி “ அம்மணிகளே! நீங்கள் “ஸங்க”த்திலே சேர்வது எனது தர்மத்திற்கு விரோதமில்லை. ஆனால் நீங்கள் வந்து சேர்வதிலிருந்து அஞ்ஞானிகளாகிய உலகத்தார் வீண் அபவாதங்கள் கூற முற்படுவார்கள். ஆதலால் நீங்கள் வீடுகளிலேயே இருந்து சாதாரண மாதர்க்குள்ள ஆடைகளை அணிந்துகொண்டு, ஒழுக்கந் தவறாமல் ஞானசாஸ்திர ஆராய்ச்சி செய்துகொண்டிருங்கள். அதுவே உங்களுக்கு முக்தி (Nirvana) ஸாதனம்” என்று திருவாய் மலர்ந்தருளினர்.

***

ஆனால், கவுதமி தேவிக்கு அம்மறுமொழி திருப்தி யளிக்கவில்லை. எனவே, கவுதமி மற்ற மாதர்களை நோக்கி ‘நாமே ஆசிரமத்திற்குரிய கோலங்கள் தரித்துக்கொண்டு புத்தரிடம் செல்வோம்; பிறகு அவர் நமக்கருள்புரிவார் என்றுரைத்தாள். அங்ஙனமே அம்மாதர்களனைவரும் தமது முடிகளைந்து விட்டு, யோகியுடை தரித்துக்கொண்டு, கையிலே ஓடுகளை யேந்தியவர்களாய், கால் சோர நடந்து புத்த சந்நிதிக்கு வந்து சேர்ந்தார்கள். புண்ணிய மூர்த்தியின் முக்கியத் தொண்டராகிய ஆநந்தர் அம்மாதர்களின் உண்மைப்பற்றையும், பெருந்தன்மையையும் கண்டு வியப்புற்று குருவினிடம் போய் அவர்களது முறையீட்டையும், தகுதியையும் எடுத்துச் சொல்லினர். பெருமான் அவர்களைச் சங்கத்திற் புகும்படி ஆக்ஞை கொடுத்ததுடன் பின்வருமாறு பேசினர்:—“புத்தர்களின் தோற்றம் புருஷர்களின் நன்மைக்கு மாத்திரமல்லவே? விசாகை முதலிய பல மாதர் இதற்கு முன் மெய்ந்நெறியிற் புகவில்லையா? ஆண்களைப்போலவே பெண்களும் தரும மார்க்கத்தை யடையலாம் ” என்றார்.

***

புத்தருடைய மார்க்கத்திலே ஞான ஸம்பாதனத்தில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சிறிதேனும் வேற்றுமை பாராட்டுவது கிடையாது. பௌத்த வசனங்களிலே தேடித்தேடிப் பார்த்தாலும் புருடர்களைக் காட்டிலும் ஸ்திரீகளைக் குறைவாக ஓரிடத்திலுங் கூடச்சொல்லியிருப்பதில்லை. மார்க்கக் கோட்பாடு இப்படி யிருந்தபோதிலும், நடையிலே ஸ்திரீகளைச் சிறிது தாழ்ந்தபடியில் வைத்திருந்ததாகப் புலப்படுகின்றது. ஏனெனில், ஐம்புலன்களையும் வென்று, உலக மாயைகளையெல்லாம் வெறுத்துத் தள்ளி, மஹா சாந்தி நிலையை யடைவதில் புருஷர்களைக் காட்டிலும் ஸ்திரீகள் இயற்கை



யாகவே பெரும்பாலும் பிற்படுகின்றார்கள். பெண்பாலாரின் நெஞ்சம் மிகுந்த மென்மைகொண்டது. ஆதலால் இல்வாழ்க்கைப் பற்று அவர்களுக்கு மிகுதியாக ஏற்பட்டு விடுகின்றது. (அவர்களாலேயே ஆடவர்கட்கும் இவ்வுலக தியானம் உண்டாகின்றது.) அது பற்றி, ஜீவன் முக்தப் பெருந்தசை யடைவதற்கு மாதர் பெரும்பாலும் வன்மையற்றவ ராகின்றார்கள். ஆனால், ஞானவொளியை நோக்கி, அதனைப் பின்பற்ற மாதர்கள் துணிந்து விடுவாராயின், அவர்களும் மார்க்கப்பிரவேசம் செய்து விடலாமென்று ‘தரும’த்தின் முடிவு.

***

ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் புத்தர் ஸமத்துவம் விதித்திருப்பதின் நன்மைகள் பௌத்தமார்க்கம் பரவும் தேசங்களிலே நன்கு காணப்படுகின்றன. முதலாவது பர்மாவை எடுத்துக்கொள்வோம். பர்மிய ஸ்திரீகளின் நிலைமையைப்பற்றி T. வீலர் (Talboys Wheeler) என்ற சரித்திர விற்பன்னர் பின்வருமாறு எழுதுகின்றார்:—

***

“ அத்தேசத்திலே ஜனங்கள் தமது மனைவியரையும், குமாரத்திகளையும் உள்ளறைகளிலே கைதிகளைப்போல் அடைத்து வைப்பது கிடையாது. ஸந்தோஷ காலங்களிலும், உத்ஸவாதிகளிலும் அந்த ஸ்திரீகள் வெகு சுயாதீனத்துடன் இருக்கிறார்கள். குடும்பத்தில் அவர்களுடைய நிலை சுதந்திரமானது. தமக்குத்தாமே ஸம்பாத்யம் செய்து கொள்ளுகிறார்கள். தமது தந்தையர், கணவர் என்போரின் காரியாதிகளை மேற் பார்க்கிறார்கள். * * * * * ஆண்குழந்தைகளுக்கும் பெண்குழந்தைகளுக்கும் பலவந்தமாக விவாகம் செய்து வைக்கும் வழக்கம் அந்நாட்டிலில்லை. இளைஞர்களும் கன்னியர்களும் காதலிருந்தால் மாத்திரமே விவாகம் செய்து கொள்வார்கள். குருக்களேனும், சோதிடரேனும், தாய்தந்தையரேனும் விவாகத்தில் தலையிடுவதில்லை.”

***

கிராமாந்தரங்களிலே கூடப் பெரும்பான்மை கொண்ட மாதர்கள் எழுதப்படிக்க அறிவார்கள். பெண் கல்வி விஷயத்தில் யாதொரு தடையும் செய்யப்படுவதில்லை. குழந்தைப் பிராயத்திலேயே பெண்கள் பாடசாலைகளிற்போய் எழுதப்படிக்கக் கற்றுக்கொள்கிறார்கள். பர்மிய பாஷையிலும், பானி பாஷையிலும் பௌத்த கிரந்தங்கள் அவர்களுக்கு முக்கியமாகக் கற்பிக்கப்படுகின்றன. நன்மை, தீமை, சௌக்கியம், அசௌக்கியம், சரீர நிலை, மனநிலை என்பவற்றைப் பற்றியெல்லாம் அவர்களுக்குண்டாகும் அறிவு இந்த கிரந்தங்களிலிருந்தே ஏற்படுகின்றது. பர்மிய மாதர்களுக்குச் சிறக்க அமைந்துள்ள குணங்களாகிய விசுவாசம், காருணியம், அன்புடைமை—என்பவையும் அப்பெருங் கிரந்தங்களிலிருந்தே கற்றுக்கொள்ளப்படுகின்றன. கிரகபத்தினிக்குரிய பின்வரும் ஐந்து கடமைகளையும் அவர்கள் பாடசாலைகளிலேயே தெரிந்து கொள்கின்றனர்.

1. கிரஹ காரியங்களை நிறைவேற்றல்.
2. விருந்தினரை உபசரித்தல்.
3. பதிவிரதா தர்மம்.
4. வரவறிந்து செலவிடல்.
5. சோம்பல் இல்லாமை.

இதுவன்றி அவர்களுக்குக் குடிவாழ்க்கை முறைகளைப் பற்றிய பயிற்சி தாய்வீட்டிலேயே கொடுக்கப்படுகின்றது.

***

ஸ்யாம் தேசத்திலே வெளிக்காரியங்களிலெல்லாம் புருஷர்களுக்குப் பெண்டிர் எவ்வளவோ துணை புரிகின்றார்கள். புருஷர்களுக்கு எவ்வளவு ஸ்வதந்திரமிருக்கின்றதோ அவ்வளவு ஸ்வதந்திரம் அந்நாட்டில் ஸ்திரீகளுக்குமிருக்கின்றது.

***

டிபெட் தேசமானது "லாமாக்கள்" என்ற பெயர் கொண்ட குருக்களின் கீழ் மூடபக்தி யிருளிலே மூழ்கிக்கிடக்கின்றது. ஆனால் அங்கே கூட புத்த மார்க்க விசேஷத்தினால் ஸ்திரீகள் இழிநிலையினின்று விலகி யிருக்கிறார்கள். சுயகாரியங்களிலே டிபெட் ஸ்திரீக்கு எவ்விதமான நிர்ப்பந்தமேனும், நிபந்தனையேனும் கிடையாது. ருஷியாவிலிருந்து G. Ts. ஸைபிகாப் (T. Sybikoff) என்ற வித்வான் டிபெட் தேசத்திலே ஆராய்ச்சிகள் செய்யும்பொருட்டுச் சென்றிருந்தார். அவர் பின்வருமாறு சொல்கிறார்:—"மாதர்கள் முற்றிலும் சுயாதீன நிலையிலிருக்கிறார்கள். லௌகிக காரியங்களிலே அவர்கள் முக்கியமான பாகமெடுத்துக்கொள்கிறார்கள். பெரிய காரியங்களை அந்நாட்டு ஸ்திரீகள் உதவியின்றி மேல்வகித்து நடத்துகிறார்கள்."

***

பௌத்தர்களின் விவாகக்கிரியையிலே டம்பமான வீண் அனுஷ்டானங்கள் அதிகமாக இல்லை. இலங்கை, டிபெட், மங்கோலியா, ஜப்பான்—முதலிய பௌத்த தேசங்களிலே விவாக காலங்களில் டம்பச் செலவுகள் முதலானவை செய்வது கிடையாது. பர்மிய ஸ்திரீகள் ஐரோப்பிய ஸ்திரீகளைப்போல் விவாகமானவுடன் பெயரை மாற்றிக்கொள்வது கிடையாது. மோதிரம் மாற்றிக்கொள்தல், மாங்கல்யம் புனைதல் முதலிய எவ்விதமான சின்னங்களும் கிடையா. ஒரு ஸ்திரீயின் பெயரைக் கேட்பதினாலேனும், அவளைப் பார்ப்பதினாலேனும் அவளுக்கு விவாகம் ஆயிற்று, இல்லையா என அறிந்துகொள்ள இயலாது. மனைவியின் சொத்தின்பேரில் கணவனுக்கு உரிமை கிடையாது. அவள் சீதனமாகக் கொண்டுவந்த பொருள், அவள் ஸம்பாத்யம் செய்த பொருள், பிற்பட அவளுக்கு அவளிட தந்தை முதலியவர்களிடமிருந்து 'வாரீஸ்' ஆக இறங்கும் பொருள்—என்பவற்றிற் கெல்லாம், அந்த ஸ்திரீகளே உடையோராவர். ஸர். T. G. ஸ்காட்ஸ் சொல்வதாவது:—"ஐரோப்பிய ஸ்திரீகள் கூக்குரலிடும் உரிமைகளில் அநேகம் பர்மிய மாதர்களால் அனுபவிக்கப்படுகின்றன."

மேலே விவரிக்கப்பட்டதிலிருந்து பௌத்தமார்க்க ஸ்திரீகளைப் பற்றி நம்மவர்களுக்குச் சிறிது தெரியக்கூடுமென நம்புகிறோம். அவர்களின் ஆசாரங்களேனும், முறைமைகளேனும் ஒரேயடியாக அங்கீகரித்தற்கு உரியனவென்று யாரும் வாது செய்யமாட்டார்கள். ஆனால், பாரததேச ஞானிகளில் ஒருவராகிய புத்தமுனிவரால் ஸ்தாபனம் செய்யப் பெற்ற மார்க்கத்தில் மாதர்கள் நடத்தப்பெறும் வகையை இந்தியர் நன்கறிந்து கொள்வது கடமையெனக் கருதுகின்றோமாதலின், அதற்கு நாம் எழுதியிருப்பது போதிய தூண்டுதலாகத் தவறாதென்று நினைக்கிறோம்.

| விவேகம்<br>விநோதம்<br>விசித்திரம்<br>விகடம் | விகடப் பிரதாபன்<br>(Registered.) | அநுபவம்<br>அற்புதம்<br>ஆச்சரியம்<br>ஆநந்தம் |
|---|---|---|

## அம்மா சோறு! அப்பா கஞ்சி!!



அது தாண்டா காணும் மக்களா! "எல்லாம் இருக்கிறது பெட்டியிலே, இலைக்கறி கடையச் சட்டியில்லை" என்பதாய்—எல்லாப் பாக்கியங்களும் நிறைந்திருப்பதாகத் தான் வெளிப் பார்வைக்கு எங்கும் தோற்றுகிறது. உள் நுழைந்து பார்க்கப் போனாலோ, வீட்டுக்கு வீடு மண்ணடுப்புச் சங்கதியாய், 'அத்திப் பழத்தைப் பிட்டுப் பார்த்தால் அத்தனையும் சொத்தை" என்ற மாதிரியாய் ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் ஒவ்வொரு விசாரம் புகுந்து கொண்டுதான் வாதிக்கிறது. அதிலே அன்ன விசாரம் — அதுவே பெரிய விசாரமாகி 'என்ன விசாரம் வைத்தாய், இறைவா கச்சியேகம்பனே' என்று அலறவேண்டி வருகிறது. "நல்ல பெண்டு படைத்தது பாக்கியவானுக்கு" என்பதாக ஏதோ ஒரு சிலர் நல்ல வாழ்வில் கலமா யிருக்கிறார்க ளானாலும், நூற்றுக்குத் தொண்ணூறு பேர் சங்கதி 'அம்மா சோறு, அப்பா கஞ்சி' என்ற கதறுதலாகவே காண்கிறது. புதிய பிரபவ வருஷம் பிறந்து விட்டதென்று சந்தோஷிக்கிறார்கள். யாருக்குச் சந்தோஷம்?—பணம் படைத்தவர்களுக்கே. யாருக்குப் பூரிப்பு?—அவர்களுக்கே! புது வருஷத்தில் புது சங்கதிகளைப் புதிதாய்ச் செய்ய வேண்டியதும், பழய வழக்கங்களைத் தள்ளிப் புதியவைகளைக் கையாட வேண்டியதும், புது புது துணி மணிகளைத் தரிக்க வேண்டியதும், புது உண்டி பண்ண வேண்டியதும், புது குடி குடிக்க வேண்டியதும், பழய துரப்பியாஸங்களை நீக்கி விட்டதாய்ப் புது சபதங்கள் செய்துகொள்ள வேண்டியதும், பழய வீட்டைப் புதுப்பிக்க வேண்டியதும், புது வீடு கட்டவேண்டியதும், புதுப் புஸ்தகம் இயற்றவேண்டியதும், புதுப் பத்திரிகை வெளியாக வேண்டியதும், புது தினசரி (Diary) எழுதத் தொடங்கவேண்டியதும், புதிய உறவு கொண்டாட வேண்டியதும், புதிய சிநேகம் சம்பாதிக்க வேண்டியதும், புதிய தொழில் ஆரம்பிக்க வேண்டியதும், புதிய பத்திரிகைகள் புத்தகங்கள் வாங்கவேண்-

டியதும், விரோதப்பட்டிருந்தவர்கள் சிநேகமாக வேண்டியதும், புது வருஷத்திய வந்தனம் செலுத்த வேண்டியதும், புது வருஷத்திய சுப மங்களம் பாடவேண்டியதும்,— அவசியமெனப் பல பேருக்கும் பல விதமாய், 'பல சரக்குக்காரனுக்குப் பைத்தியம் பிடித்ததுபோல்' பற்பல எண்ணங்கள் உண்டாகி உற்சாகம் தோன்றுவதுமான காரியங்கள் ஒரு பக்கம் இருந்தாலும், "பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்" என்றபடி எல்லா ஞானமும் கல்வியும் நாழி அரிசியிலாகி, அம்மா சோறு! அப்பா கஞ்சி! என்ற கூப்பாடே யாவற்றினும் பெரிதாக இருக்கிறதே ஈசுவரா!

* * *

புது வருஷம் பிறந்து என்ன? அரிசி நயக்கவில்லையே ராகவா! அன்னப்பிடி வெல்லப்பிடியாயிற்றே ஐயனே! 'கஞ்சி வரதப்பா என்றால் எங்கு வரதப்பா' என்கிற அதே ஏக்கமாகவல்லவோ போய்விட்டது! சென்ற மார்கழி மாதத்தில் ரூபாய்க்கு மூன்றுபடி பழய அரிசி கொட்டியளந்தனரே, தேவா! உலையிலிட்டு ஆக்கினாலும் அது பானை நிறையச் சாதமாக இருந்ததே ஸ்வாமி! இப்போதைய புது அரிசி அந்த மூன்று படிக்கும் மோசமாக இருக்கிறதே பகவானே! சாதமுங் கண்டுவரக் காணோமே! சில பெண்கள் அநேக வருட காலத்துக்குப் புஷ்பவதிகளாகாமல் அப்படியே உட்கார்ந்திருப்பது போல, இந்தப் புது அரிசியும் போட்ட அளவில் கம்மென்று உட்கார்ந்திருக்கிறதே தவிர பொங்கியெழுந்து அதிக சாதம் கண்டு மிஞ்சி வரக் காணோமே கடவுளே! ஜீவிப்பதுதான் எவ்வாறு ஐயனே! இப்போதைக்கே அரிசி மூன்று படிக்கும் மோசமாகில் இனி ஆடி, ஆவணி, கார்த்திகையில் என்ன விலை விற்குமோ தேவா! அரிசிக்கு அடுத்த பருப்பும் விலை ஏறிவிட்டதே! ஏழைகளின் தவிப்பு இவ்வாறாக, இனி மோட்டார்களில் போகிற சிலரைப் பார்த்துவிட்டு பணம் பெருக்கடைந்துபோய் விட்டது என்று பெருமை வீசுகின்றார்களே! இதை நினைத்தால் தான் விகடன் விழுந்து விழுந்து சிரிக்க வேண்டி வருகிறது!

* * *

எல்லாக் கூப்பாட்டிலும் பெரிய கூப்பாடு வயிற்றுச் சாப்பாடான, 'அம்மா சோறு! அப்பா கஞ்சி, என்பதல்லவா? பெண்கள் நொச்சு நொச்சு என்று நச்சுப் பிடித்து நகைகள் செய்துகொண்டு பொன் காய்த்த மரம்போல் நிற்பதின் இரகசியமென்ன?—பிறகொரு காலம் இந்தக் கஞ்சிப் பாட்டு பாடாமல் பிறர் வீட்டு வாயிலில் நாழி நிற்காமல் தன் பாட்டில் நகைகளை விற்றுவது மறைத்துக் கூழ்குடித்து மானமாய்க் காலந் தள்ளலாமென்றும், அதற்கு ஒரு முதல் நகை ரூபமாகத் தன் மேல் இருப்பது எந்த ஆபத்துக்கும் உதவுமென்றுந்தான்! வீடு கட்டும் போதே பல சிற்றறைகளாகக் கட்டுவதும், உட்காரும் திண்ணைகளைக் கூடக் கொட்டடிகளாக்குவதும், வாடகை வைத்து வயிறு வளர்த்துக் கஞ்சிப் பாட்டுக்குக் கெஞ்சிப்போகாதிருக்கத்தான்! டாக்டர் மோட்டாரில் வருவதேன்—அதைக் காண்பித்து அந்தப் பகட்டில் அதிகமான பீஸ் பணம் வாங்குவதற்கே. தன் இரண்டு காலையும் சுமந்து தூக்கித் தூக்கி வைத்து நடந்துவரும் நாட்டு வைத்தியனுக்கு நாலணா தருவதும் கஷ்டமாயிருக்க, மோட்டார் டாக்டருக்கோ பத்து ரூபா நோட்டைப் பரவசமாக நீட்டி விடுகிறார்களே;



அவ்விதம் அவர்களை நீட்ட வைக்கவே இந்த மோட்டார் பகட்டு! அதுவும் எதற்கு? கஞ்சிப் பாட்டு பின்னாளில் தம் குட்டி குழந்தைகள் பாடாதிருக்கவே! தாசி படும்பாடு எவர் படுவார்? நாமக்காரனுக்கு நாமப் பெட்டி, விபூதிக்காரனுக்கு விபூதிப்பை, சாந்து பொட்டுக்காரனுக்கு வெள்ளிச் சாந்து டப்பி, சந்தன முத்திரைக்காரனுக்கு சந்தனக் கட்டையும் அது தேய்க்கக் கல்லும்-என்று இப்படியாக அவரவருக்கேற்றபடியும், அவரவர்க்கு இசைந்தபடியுமாக ஆயிர விதங்களில் இணங்கி உள்ளுக்கொரு கவலையும் வெளிக்கு ஒரு சிரிப்புமாக மாமா பாட்டு பாடுவதும் கஞ்சிப் பாட்டுக்கே! இனி பிறப்பன வெல்லாம் பெண்ணாகவே யிருக்கக் கோரிக் கொள்வதும் அதனால் வயிறு வளர்க்க நினைக்கிற அந்த வெட்கங்கெட்டப் பாட்டுக்கே!

* * *

பிதா ஆபத்திலிருக்க, அருமையானவர்கள் அடுத்த ஊரிலே கண்மூட, அதற்குச் செல்லவும், வீட்டில் அப்பனுக் கருகில் அமரவும் 'லீவு' கிடைக்காமல் சட்டையும் தலைப்பாகையுமாய் உத்தியோகத்துக்கு உடனே ஓடுவதும், எது நேரினும் தன் உத்தியோகத்தைப் பத்திரமாய்க் காத்துக் கொள்வதுமான கண்ராவி எதனால்?—கஞ்சிப் பாட்டின் நிமித்தமே! ஒரு வேளை போகத் தவறினால் உடனே என்றைக்கும் வீட்டில் உட்காரத் தன்னுபடி சீட்டு தயாராய்விடுகிறது! எல்லோரும் சுகமாய் உறங்குகையில், ஐயோ தெய்வமே, இருளிலும் பனியிலும் வாடி யலையும் ஒரு பிராணி யார் தெரியுமா? — காலை முதல் உச்சிப் பகல்வரையில் தன்னிரு புறமும் வண்டிகள் போக நடுவே தான் நிற்கிற உருவம் எது தெரியுமா?- அதுதானப்பா அந்தப் போலீஸ் வீரன் சங்கதி; அவனது அத்தனை பாடும் இந்தக் கஞ்சிப் பாட்டுக்கே! பெண்ணா பிறந்ததென்று ஏங்கல் எதுக்கென்பீர்களோ? எவ்வளவு வளர்த்தாலும், சத்தியபாமையின் வீட்டில் பாரிஜாத விருக்ஷம் வளர, அதன் புஷ்பங்களெல்லாம் ருக்மணியின் வீட்டிலே போய் விழ என்ற கதையாய், பிறர் வீட்டுக்கே நிழல் தருவோராகக் கைவிட்டுப் போகும் கண்ராவிச் சொத்தாக இருப்பதால்தான். அதைவிடத் தன் வீட்டுக்கே உதவும்படியான ஆண் குழந்தை உதித்தால் மேலென்ற நினைப்பு மேலிட்டுக் கொள்கிறது; இந்த நினைப்புக்குக் காரணமும் பின்னாளில் தனக்கு இவ்வளவு அன்னம் அவனால் கிடைக்கக் கூடுமென்றுதான்—கஞ்சிப் பாட்டு பாடாமலிருக்கலாமே யென்ற கருத்தால் தான்! மாதத்தின் முடிவை எதிர்பார்ப்பதும், முதல் தேதி 10-15-ம் தேதிகளைக் கோருவதும், பென்ஷன் உபகாரச் சம்பளத் தேதிக்குக் கொட்டாவி விடுவதும், பிற்காலத் தள்ளாமைக்கு உதவச் சீட்டுபோடுவதும், தான் செத்த பிறகு ஒரு பெரிய பண முடிப்பு தன் பெண்டு குட்டிகளுக்குக் கிடைக்கும்படி லைப் இன்சூரன்ஸ் கம்பெனிகளிற் சேர்த்தும், 6, 3, மாதங்கட்கு ஒரு முறை மொத்த மொத்தமாய் பணம் அனுப்பிச் சேர்ப்பதும் எல்லாம் இந்தக் கஞ்சி யாண்டவனுக்குத் தான் மக்களா!

* * *

நிலத்தின் விலை உயர்ந்துபோனதற்குக் காரணம் என்னடா அப்பா? பெரும் படிப்புப் படித்து உருண்ட தலைகளெல்லாம் வெகு வெகுவாய் நீள நீள நினைத்துப் பார்த்துவிட்டு, எல்லா ஞானமும் கடைசியில் கஞ்சிப் பாட்டிலேயே வந்து முடிவது

கண்டு, அதற்காக நிலம் வாங்கி நிர்விசாரமாய்க் கிடக்க நினைக்கப் போக, எல்லோரும் இவ் வழியிலேயே இறங்க, கிராக்கிக்குத் தக்கபடி அதுவும் விலை யேறிவிட்டது! சென்ற அக்ஷய வருஷத்திற்கு முந்திய அக்ஷய வருஷத்திலே ரூபாய்க்கு ஆறுபடி யரிசி விற்றது அரும்பெரும் பஞ்சமாய் அலற வைத்ததாம்; அதிற் பாதிகூட இல்லாத இப்போது அதற்குத் தக்கபடி தானே நிலத்தின் விலையும் இருக்கும்—இதுவும் கஞ்சி பாட்டுச் சங்கதியே! கிராமத்தில் தொழிலின்றிப் பட்டண வாசங்களுக்கு ஏழைகள் வருவதும், மற்றும் பலபல நாடுகளுக்குக் கூலிகளாய்ப் பறப்பதும் கஞ்சி தரிசனத்திற்கே! யார் வீட்டில் கல்யாணம், கல்லெடுப்பு, கருமம், திவசம் என்று விசாரிப்பதும் சோற்றுப் பாட்டுக்கே, புரோகிதப் பஞ்சாங்கப் பிராமணர் காரியம் யாவும் அன்னக் கடவுளுக்காகவே! கடன் படுவது எதனால்?—அது தீர்க்க இயலாமல், கையிலிருந்தாலும் மனைவி பேரன்பேருக்கு எழுதிவிட்டு, ஏதுமில்லாத பிச்சாண்டியாகத் தன்னைக் காண்பித்துக் கொண்டு மானங்கெட்டுச் சிறைக்கும் தயாராவதெதனால்?—எந்த வழியாக முக்கி முக்கிப் பார்த்தும் தன் தொந்தரைகளைத் தீர்த்துக் கொள்ளக் கிடைக்காமல் ஒருவன் தற்கொலை செய்து கொள்வதும் எதனால்?—திருடுவதும், மோசம் செய்வதும், நம் வைத்த பொருளை இல்லையென்று விடுவதும், அவசரத்துக்கு வாங்கிய கடனைத் திருப்பித் தராமற் போவதும், தப்புச் சாட்சி பேசுவதும், பிறர் சொத்துக்களைக் கொள்ளை கொள்வதுமான இன்னும் ஆயிரவித அக்கிரத்தியங்களெல்லாம் ஏன் அப்பனே?—உழைப்பதும், இரவு பகல் நித்திரை கெடுவதும், ஆத்திரப்படுவதும், கோர்ட்டு ஏறுவதும் ஆன எல்லா அமக்களமும் எதற்காக?—எல்லாம் இந்த அம்மா சோறு, அப்பா கஞ்சி என்று திண்டாடாதிருப்பதற்கே தான்!

* * *

நாடகத்திலே 'டான்சு' வெகு நேர்த்தி யென்கிறார்கள், அந்த நடிகரின் நடிப்பு வெகு திறமை என்கிறார்கள், சர்க்கஸிலே அவரது சாமர்த்திய வேலை ஆச்சரியம் என்கிறார்கள், எதுக்கு அய்யனே இத்தனையும்?—ஐயோ அப்பா! அத்தனையும் அந்த வயிற்றுக் கொடுமைக்கே! அதிர்ஷ்டம் என்பது என்னடா தம்பி, அதிர்ஷ்டசாலி என்று ஒருவனைக் குறிப்பாய் கூறுவது எதற்காக அண்ணா? எப்படியோ வயிற்றுக்கு அத்தனை உணவு எக்காலத்துக்கும் வந்து கொண்டிருக்குமென்பது தானே அதன் பொருள்! யாருக்காவது ஏதாவது கொடுத்தால் அதற்குக் கணக்கு; எவருக்காவது அன்னமிட்டால் அதற்குக் கணக்கு உண்டா? ஏன் இல்லை யெனிலோ அந்தக் கஞ்சி—சோற்று தர்மம் ஒரு பெரிய தர்மமாய். உலகமெங்கும் ஒப்புக் கொள்ளப்பட்டிருப்பதால் தான். ஏழைக்கு இட்டால் பிச்சை, பணக்காரனுக்கு இட்டால் விருந்து, சம்பந்திக்குப் போட்டால் மரியாதை, தன் பெண்டு பிள்ளை பெற்றோர்களுக்கு இட்டால் அது தன் கடமை யென்று இப்படிப் பல பிரிவுகளாக்கி அததற்கும் ஒரு கௌரவப் பெயர் கொடுத்திருப்பதும் அதிசயமே! எல்லா அதிசயமும் கடைசியில் இந்த வயிற்றுத் தேவர்பிரான் வாடாதிருக்கவே!

* * *

ஜப்பான் எங்கே?—அமெரிக்கா எங்கே?—தேசம் விட்டுத் தேசமாய் ஜப்பானியர் அமெரிக்கா புகுந்து அங்கு விவசாயம் செய்வதேன்?—



சீனர்கள் பல நாடுகளிலும் கூலிகளாகக் கிடப்பதேன்?—நமது இந்தியர்கள் தென்னாப்பிரிக்கா, பர்மா, மலேயா, சிங்கப்பூர், பினாங்கு, பீஜி, இலங்கை இவ்விடங்களுக் கெல்லாம் ஓடுவதேன்? எல்லாம் அன்ன விசாரத்திற்கே! மூன்று நாட் கல்யாணம் ஒரு நாளாய்ச் சுருங்கி வருவதேன்?—முன்பு எல்லாம் குளிர்ந்த முகமும், உபசாரணையுமாக இருந்த இடங்கள் இப்போது வாவென்று கூட அழைக்காமலானதேன்?—அவரவர் பாட்டை யவரவர் பார்த்துக்கொண்டு போகிற சுயநலம் பெருகியதேன்?—நாணயத் தப்புகளும் நம்பிக்கைத் துரோகங்களும் நாலாவிதத்திலும் சூழ்ந்து கொண்டதேன்?—எல்லாம் அன்னமும் கஞ்சியும் சுருங்கி, வரும் வரவு அரிசிக்கே போதாமலாகி, மற்ற செலவுகளுக்குப் பெரும் திகைப்பாய் முடிந்து விட்டதால் தான்!

* * *

ஹா! ஈசுவரா! நகைமிருந்தால் சமயத்திற்கு அன்னப் பாட்டிற்கு உதவு மென்று அதிலே முதல் போடப்போக, 17-ரூபா தந்து வாங்கிய 100 பவுன் சங்கதி இப்போது பவுன் 13-ரூபாயாகி 400-ரூபா கை நஷ்டமாகி விட்டது! நிலம் இருந்தால் என்றைக்கும் கால் வயிற்றுக் கஞ்சிக்கு மோச மில்லை யென்று உழைத்த பணமெல்லாம் அதில் கொட்டப்போக, ஐயோ! வெள்ளத்திலே அந்த நிலமெல்லாம் மண்மேடிட்டுப் போய் விட்டதே! வட்டிக்கென்று கொடுத்து வைத்த இடத்திலே அதை வாங்கிக் கொண்டவனுக்கு வியாபாரத்திலே கனத்த நஷ்டமுண்டாகிக் கம்பி நீட்டிவிட, 'உள்ளதும் போச்சே நொள்ளைக் கண்ணா' என்றபடி ஆய்விட்டது! எவ்வாறேனும் ஈஸ்—தோஸ்—என்று அந்த இங்கிலீஷ் கற்றுக் கொண்டால் நாலு பருக்கைக்கு எப்போதும் வழி பிறக்கும்படி எங்காவது வேலை தொட்டுக் கொள்ளலா மென்று உயர்ந்த படிப்புக்கு உள்ளதெல்லாம் விற்றுத் தேறப்போக, இப்போது உத்தியோகம் கிடைப்பதே முயற்கொம்பாகி என்ன செய்வது ஈச்வரா என்று தியங்க வேண்டியதாய் விட்டது! பிராமணத்துவேஷம் எங்குமே பெரு வெள்ளமாகி விட, முன்பெல்லாம் பெயருக்குப் பின்னால் ஐயர், ராவ் என்று தங்களின் உயரிய ஜாதிப்பட்டத்தைக் கட்டிக் கொண்டது போய், இப்போது அவற்றை யெல்லாம் விட்டு வெறும் பெயரை மட்டுமே சொல்லிக் கொள்ள வேண்டிய கோணல் காலமாய்ப் போய் விட்டது! இத்தனை பாடுகளும் இந்த ஒரு ஜாண் வயிற்றுக்காகவே தான் ஈச்வரா! ஓ பிரபவ வருஷமே!

60-ஆண்டுகளுக்கும். தலைமை பெற்ற முதற் கண்மணியே! நீ தோன்றிய இந்நாளி லிருந்தாவது பண்டம் பதார்த்தங்களின் விலை குறையவொண்ணாதா? இறங்கும் துறையிலேயே நீச்சானால் கரை ஏறுவதெப்படி என்பது போல, நீ பிறந்த வருஷத்திலேயே உள்ள அரிசி பருப்பு நொய்களுக்கே சுருக்கமானால், உன் பின்னால் வருகிற வருஷங்கள் எப்படியிருக்குமோவென்று விகடன் பெரிதும் கலங்குகிறேன்! ஹே பிரபவ வருஷமே! இந்த நாகரீகங்களும் வேண்டாம், மோட்டார் தடபுடல்களும் வேண்டாம், பெண்களின் பாடு எங்குமே பெரும் தவிப்பாய்க் கிடக்க, இரண்டொரு பெண்கள் சட்ட சபையில் நியமனம் பெற்று விட்டதினாலேயே பெண்கள் உயர்ந்து விட்டார்களென்று வெளிப்பகட்டும் வேண்டாம், 60-வருஷங்களுக்கு முன்பு நீ புதிய பிரபவ வருஷமாய் வந்த போதிருந்த சமாதான வாழ்வில்,

அரிசியும் பண்டங்களும் மலிந்து பெருகிவிற்ற நிலையில் மறுபடியும் வந்து விட்டாற் போதுமென்று அக்கரைக்கு இக்கரை பச்சையென்பதாக விகடன் அந்தக் கால வாழ்வுக்குத் திரும்பும்படி வேண்டிக் கொள்கிறேன்! அம்மா சோறு! அப்பா கஞ்சி! என்ற இந்தப் பாடு எப்போது ஒழியுமோ! என்று நன்றாக உடுத்து உண்டு நலமாய் நலிவுயாவும் நீங்கி நயம் காண்பதோ! ஓ! ஈசா! மகாதேவா! உனக்கே அற்புதம்! இத்தனைச் சீர்கேடுகளுக்கும் நடுவே, விகடன் என் நேயர்களுக்கெல்லாம் புது வருட மங்களமும் பாடுகின்றேன். ராம்! ராம்! சுபம்! சு!! சுவாஹா!!!

---

"எனது தவறுகள் என அவர் எதை எடுத்துச் சொல்லுகிறாரோ, அவை தீவீர ஆராய்ச்சியுடன் நான் ஏற்றுக் கொண்ட முடிவுகளாகும்" (மகாத்மா.)

"கதர் இயக்கம் இயந்திரத் தொழிலை நசுக்க ஏற்பட்டதன்று; அது விசேஷமாகப் பெருகுவதைத் தடுக்கவே ஏற்பட்டிருக்கிறது". (மகாத்மா.)

"காங்கிரஸ் வருஷத்தில் மூன்று நாள் கூடி விட்டு மறுபடியும் உறக்கத்தில் விழுந்து விடுகிறது. வருஷத்தில் மூன்று தினங்களுக்குள் எவ்விதப் பயிற்சி ஏற்பட்டுவிட முடியும்?" (மகாத்மா.)

"மலேரியா முதலிய வியாதிகளினால் உண்டாகும் கேட்டைவிட அதிகமாகக் குடியினால் விளைகிறது. மலேரியா சரீரத்தை மட்டில் பாதிக்கிறது; குடியோ சரீரம் மனது இரண்டையும் கெடுத்து விடுகிறது." (மகாத்மா.)

"நடமாடும் கோயிலாக உள்ள மானிடருக்குச் சேவை செய்தல் மூலம் நாராயணனைத் துதிக்க வேண்டும்" (டாக்டர் வரதராஜுலு நாயுடு.)

"தைரியமாகக் காரியத்தை நடத்துங்கள். சீக்கிரத்தில் உங்களுக்குச் சிறப்பு வந்து விடுமென்ற வீண் ஆசைக்கு மாத்திரம் இடங்கொடாதீர்கள். நீங்கள் மனஸ்பூர்வமாகப் பாடுபட்டால் உலகம் நாளடைவில் உங்களை மதிக்கும்." (விவேகாநந்தர்.)

### நித்த நித்தம் ஒத்தைக் காசு.

நித்தம் ஒத்தைக் காசு வீதம் இப் புதுவருட முதற் கொண்டு ஒரு உண்டியில் போட்டு வந்தால் வருட முடிவில், அடுத்த வருடத்தின் "ஆநந்த குண போதினி" சந்தாவுக்கும், "ஆநந்த குண போதினி பஞ்சாங்க"த்துக்கும், அத்துடன் இன்னொரு நாவல் வாங்குவதற்கும் கூடப் பணம் கஷ்டமில்லாமல் சேர்த்து விடலாம். இச் சிறு முயற்சியை [illegible] செய்யுங்கள். ஒரே ஒரு காசு

காப்பக நூலகம்
169824
சென்னை-600 00

# இதென்ன விளம்பரம்?

இதென்ன விளம்பரம்? "ஆனந்த குணபோதினி" என்னும் உயரிய தமிழ் மாதப் பத்திரிகையைப் பற்றியதோ? அப்பத்திரிகையை சென்ற ஒரு வருஷ காலமாய்ப் பிரதி மாதந்தோறும் கவனமாய்ப் படித்திருக்கிறோம். காலந்தவறாமல் வெளியாகும் மேலான பத்திரிகை. மற்றப் பத்திரிகைகளைவிட இதுவே சிறந்தது. ஏன்? பக்கங்களோ **56.** விஷயங்களோ அவ்வளவும் அநுபவ மணிகள். ஒவ்வொரு விஷயமும் படிக்கப் படிக்க இன்பம் தரும்படி அத்தனை அர்த்த புஷ்டியுள்ளதாயிருக்கிறது. அவசியமான தெய்வபக்தி, நீதிமார்க்கம், ஆத்மஞானம், இராஜீய விவேகம், லோகாநுபவம் முதலிய ஸத் விஷயங்கள் இப்பத்திரிகையில் நிறைந்து காணப்படுகின்றன.

வைதீக நெறியையும் லோக ரகசியங்களையும் போதித்து சிறுவர்களையும் சிறுமிகளையும் நல்வழியில் நடத்துவதற்கு இந்த ஆநந்த குணபோதினி ஒரு பெரிய ஆசாரியனைப்போல் விளங்குகிறது. ஆகவே, இந்த அருமையான தமிழ்ப் பத்திரிகையை வாங்கி யாதரியாதோர் ஸ்வபாஷையிலும், ஸ்வமதத்திலும், ஸ்வதேசத்திலும் அபிமானமுடையோர் என்று நாம் சொல்லவே மாட்டோம். எமது வார்த்தையில் ஸந்தேகமுண்டானால் ஏதாவது ஒரு மாதத்திய ஆநந்த குணபோதினிப் பத்திரிகையைப் படித்துப் பாருங்கள். அப்பொழுது உங்களுக்கு உண்மை புலப்படும்.

ஒரு ரூபாய் சந்தாவில் **56** பக்கங்களுடன் வெளிவரும் மாதப் பத்திரிகை ஆநந்த குணபோதினி ஒன்றே. அதற்குச் சமமாக வேறு எதையும் சொல்ல முடியாது. அது நிகரில்லாத பிரவிர்த்தியை யடைந்து தமிழ் நாடெங்கனும் பரவியுள்ளதென்பதை யாவரும் அறிவார். வீண் பகட்டு செய்வதில் என்ன பயன்? பத்திரிகைக்குள்ளே யிருக்கும் விஷயங்களன்றோ உவப்பாயிருக்க வேண்டும். அப்படியே "ஆநந்த குணபோதினி"யில் உவப்பான விஷயங்கள் இருக்கின்றன வென்பதைப் புத்திமான்கள் தாங்களே படித்து உணரலாம்.

"ஆநந்த குணபோதினி" பத்திரிகை பிரபஞ்சத்தின் அநுபவ விநோதங்களை வெகு நன்றாய் எடுத்துக் காட்டுகிறதென்று எல்லோரும் புகழ்கின்றார்கள். சிறுவர் சிறுமியர்கள் அனைவரும் தமது உள்ளத்தில் மறைந்து நிற்கும் இரகசியங்களெல்லாம் இதிற் காணப்படுகின்றனவே யென்று வெகுவாக வியந்து நேசிக்கின்றனர். உலகத்தில் பிரதியொரு மனிதனிடத்திலும் நிகழப்படாநின்ற அனுபவ விஷயங்களைத் திரட்டிக் கதா ரூபமாகக் கொடுப்பதே இப்பத்திரிகையின் நோக்கம். ஏனென்றால் அநுபவத்திற்கு மிஞ்சின ஞானமும், அதனினும் மேம்பாடான படிப்பினையும் வேறொன்றுமில்லை. அநுபவமே குரு, அநுபவமே அரசன், அநுபவமே சாஸ்திரம், அநுபவமே சாக்ஷி, அநுபவமே உத்தம சிநேகிதனுமாயிருக்கிறது.

"ஆநந்த குணபோதினி" பத்திரிகை உலக உண்மையைக் கருதி வெளியிடப்படுகிறது. அரிய பல நூலாராய்ச்சியாலும், அனுபவ உலக வியப்பாலும், அறிவுடையோர் தெரிவித்த கேள்வியளவாலும், கற்று, உணர்ந்து அடைந்து கேட்ட பயனெல்லாம் இப்பத்திரிகையில் எல்லோரும் கற்று

உணர்ந்து அடையலாம். எந்த சாதிக்கும், எந்த சமயத்திற்கும், எந்த நூலிற்கும் இதன் கருத்து ஒத்திருக்கும். பாலர்கட்கும் இது பயன்தரும். குமரர்கட்குமிது நலங்கொடுக்கும். விருத்தர்கட்கு மிது மேலாம்பயனே. வெறுங் கதையன்று. வீண்வளர்ப்பன்று. காசு பறிப்பதற்கன்று, கௌரவங் கருதியன்று. அதன் பெருமை பார்த்தால் தெரியும், படித்தால் அறியலாம்.

"ஆநந்த குணபோதினி" பத்திரிகை காகிதத்தாலும், எழுத்தாலும், வேலையழகாலும், விஷய அருமையாலும், நடையின் இனிமையாலும், நாகரீக மிருதியாலும் உயர்ந்து விளங்குகிறது. ஆழ்ந்த கருத்தமைந்து இனிய சொற்களால் எளிய நடையோடு எல்லோருக்கும் பயனளிக்குமாறு சந்தமினிய சுந்தரத் தமிழில் எழுதப்பட்டுத் தேனினுஞ் சுவைத்துப் பாலினும் வெளுத்துப் பொருளினும் மிகுத்து அலங்காரம் செய்து அறிவை விளக்கி ஆநந்தங் கொடுப்பதா யிருக்கின்றது.

"ஆநந்த குணபோதினி" பத்திரிகையை இப்பொழுது 4000 சந்தாதாரர்களுக்குமேல் ஆதரித்து வருகின்றனர். ஆதலின் உடனே சந்தாதாரர்களாகச் சேர்ந்து இன்புற வேண்டுகிறோம்.

தி. இராஜகோபால் முதலியார், 302 தங்கசாலைவீதி, மதராஸ்.

---

# ஆயிரம் தலைவாங்கிய அதிசய சிந்தாமணி

பிரபஞ்ச அநுபவங்களும், இயற்கையின் உண்மைகளும் உலக அதிசயங்களும், ஆழ்ந்த கற்பனைகளும், ஆநந்த ஊற்றுகளும் அடுக்கடுக்காகத் ததும்பிய விஸ்தாரமான சரித்திரமாய் **20**-அத்தியாயங்களுடன் அமைத்துள்ள

## அற்புதமான இனிய தமிழ் நாவல்

ஹாப்டோன் படங்களுடன் ஜொலிப்பது.

"ஆநந்த குணபோதினி" பத்திராசிரியர் — ஸ்ரீமான்

**S. G.** இராமாநுஜலு நாயுடு அவர்கள் இயற்றியது.

இதன் விலை ரூபாய் ஒன்றே. உடனே எழுதுங்கள்.

### தி. இராஜகோபால முதலியார்

"ஆநந்த குணபோதினி" ஆபீஸ்

302, தங்கசாலை வீதி, மதராஸ்.

---

ஒவ்வொரு வருஷமும் வாங்கிச் சேர்த்து வையுங்கள் முதல் வருட... ப் வருடம்!

இப்போது வெளிவந்திருக்கும் பஞ்சாங்கங்கள் எல்லாவற்றுக்கும் மேலானதும் 84 பக்கங்களுமடங்கிய

## "பிரபவ" வருஷத்திய

# "ஆநந்த குணபோதினி"

அற்புத சர்வ முகூர்த்த திருக்கணித

# பஞ்சாங்கம்

கவர்ன்மென்ட் காலேஜ் பஞ்சாங்கம் இயற்றிவருகிற

பிரம்மஸ்ரீ **P.** துரைஸ்வாமி அய்யங்கார்

அவர்களால் இப்பஞ்சாங்கம் பிழையற கணிக்கப்பட்டது.

இது வரையில் பஞ்சாங்கமே பார்க்கத் தெரியாதவர்கூட சுலபமாய் எமது பஞ்சாங்கத்தைப் பார்த்து நாள், திதி, நக்ஷத்திரம், ருது, அயனம், யோகம் முதலானவை மணி நிமிஷங்களுடன் அறிந்துகொள்ளலாம். ஜோதிடர்களுக்கும் மற்ற சாமான்ய எல்லா பொதுஜனங்களுக்கும் வேண்டிய எல்லாவித விஷயங்களும் அடங்கி இருக்கின்றன. ரூபா இரண்டே விலையுள்ள உலகப் பிரசித்திப்பெற்ற எமது "ஆங்கில ஆசான்" உபாத்தி...இல்லாமல் இங்கிலீஷ் பாஷையை எழுதவும், படிக்கவும், பேசவும், ...ள் ... ...ருவர்களுக்கும், மாதர்களுக்கும், தொழிலாளர்களுக்கும், ...யிருந்துக்கொண்டு வருகிறதோ, அதே ... உபயோகமுள்ள... நமக்குப் பிரதிதினமும் வேண்டிய ... மாதிரி புரோகிதருடைய உதவியில்லாம... ...வென்றே எமது பஞ் எல்லா விஷயங்களையும், அறிந்துகொள்ள வேண... சாங்கத்தைப் புதுவிதமாகத் தயாரித்து வெளியிடலானோம்.

ஒவ்வொருவரும் மார்க்கெட்டில் இருக்கும் வேறு பஞ்சாங்கங்களை வாங்கியிருந்த போதிலும் எமது பஞ்சாங்கத்தையும் ஒன்று வாங்கி அவை களில் காணப்படாத விஷயங்களை எமது பஞ்சாங்கத்தைப்பார்த்து அறிந்துகொள்ள வேண்டுகின்றோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| பஞ்சாங்கம் விலை | அணா | 0 | 3 | 0 |
| (6) அரை டஜன் | ரூபா | 0 | 9 | 0 |
| (12 ஒரு டஜன் | ,, | 1 | 2 | 0 |

ஒரு பஞ்சாங்கம் வேண்டுவோர் 0-3-0 தபால் ஸ்டாம்பு அனுப்...

வியாபாரிகளுக்கு மேற்கண்ட விதம் கமிஷன் கொ... வேண்டுவோர் அடியில் குறிப்பிட்டிருக்கும் விலாசத்திற்கு ...துக் கொள்ளவும்.

ஒவ்வொரு ஊரிலும் ஏஜண்டுகள்

### தி. இராஜகோபால மு...

தங்க...

...பு!

...27,000 ஜனங்களால் வாசிக்கப்பட்டு பிரபல்யம் பெற்றிருக்கிறது. 8-ம் பதி...

எமது லேடி டிரேட் மார்க் போட்டிருக்கும் புஸ்தகம் பார்த்து வாங்குங்கள்!!

## ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதி...

மூன்று சித்திரப்படங்கள் கூடியது.

கொஞ்சம் பிரதிகளே இருக்கின்றன.

குறைந்த விலை! 800-பக்கங்கள்

ஆயிரக்கணக்கான முத்துகள், 60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளலாம். அபரிமிதமான விஷயங்கள்!!

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் தெரிந்துகொள்ளலாம்.

அழகிய கலிகோ பைண்டு. புத்தகம் 1-க்கு விலை ரூபா 2.

இதுவரையில் இம்மாதிரியான புத்தகம் வெளிவரவில்லை. உடனே எழுதுங்கள்.

உபாத்தியாயர் இல்லாமல் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இது தான். இதில் ஒரு சொல்லை உச்சரிக்கும் விதமும், அதன் இங்கிலீஷ் அர்த்தமும், கிரகம், பட்சி, கிழமை, மாதம், வருடம், பக்ஷம், ஆயுதம், ஜலங்கள் முதலிய வற்றின் பெயர்களும், கடிதம் எழுது... ...யில், பத்திரங்கள், ச... ...ஜோதி... ...விஷ... ...ன



...உபயோகமுள்ள...

...மாதிரி புரோகிதருடைய உதவியில்லாம... எல்லா விஷயங்களையும், அறிந்துகொள்ள வேண்... ...சாங்கத்தைப் புதுவிதமாகத் தயாரித்து வெளியிடலானோம்.

ஒவ்வொருவரும் மார்க்கெட்டில் இருக்கும் வேறு பஞ்சாங்கங்களை வாங்கியிருந்த போதிலும் எமது பஞ்சாங்கத்தையும் ஒன்று வாங்கி அவை களில் காணப்படாத விஷயங்களை எமது பஞ்சாங்கத்தைப்பார்த்து அறிந்து கொள்ள வேண்டுகின்றோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| பஞ்சாங்கம் விலை | அணா | 0 | 3 | 0 |
| (6) அரை டஜன் | ரூபா | 0 | 9 | 0 |
| (12 ஒரு டஜன் | ,, | 1 | 2 | 0 |

ஒரு பஞ்சாங்கம் வேண்டுவோர் 0-3-0 தபால் ஸ்டாம்பு அனுப்...

வியாபாரிகளுக்கு மேற்கண்ட விதம் கமிஷன் கொ... வேண்டுவோர் அடியில் குறிப்பிட்டிருக்கும் விலாசத்திற்கு... ...றுக் கொள்ளவும்.

ஒவ்வொரு ஊரிலும் ஏஜண்டுகள்...

தி. இராஜகோபால மு...

302, தங்க...